தமிழரசு

Tamilarasu (Monthly)

மலர் : 53 இதழ் :7

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

ஜனவரி 2023 (January 2023)

விலை ரூ. 20/– (Price Rs. 20/-)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்

பொங்கல் பரிசுத் தொகுப்பு

2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 30.12.2022 அன்று, தமிழ்நாடு அரசின் 181 மகளிர் உதவி மையத்தின் சார்பில் சென்னை, மெரினா கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள "பெண்கள் பாதுகாப்பு உறுதிமொழி" விழிப்புணர்வு பதாகையில் கையெழுத்திட்டார்.

தமிழரசு

**தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு**

திருவள்ளுவர் ஆண்டு 2053 - 2054
சுபகிருது வருடம் : மார்கழி - தை

ஜனவரி 2023

மலர் : 53 விலை ரூ.20 இதழ் : 7

ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப.,**
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
க.அ. முகம்மது ரசூல்
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
கு. சுபாஷ்
இரா. பாலாஜி

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தாத் தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது. குறள்: 101

"வாராது வந்த மாமணி" என்பது போல், "செய்யாமற் செய்த உதவி" என்று புகழத்தக்க அரிய உதவி வழங்கப்பட்டால், அதற்கு இந்த வானமும், பூமியும் கூட ஈடாக மாட்டா.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ கடந்த ஆண்டைப் போலவே வருங்காலமும் வசந்தகாலமாக அமையட்டும் 4
★ தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடிட 2.19 கோடி குடும்பங்கள் பயன்பெறும் பொங்கல் பரிசுத்தொகுப்பு 6
★ தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் வெற்றிகரமாக இந்த அரசு தொடர்ந்து வழி நடத்திச் செல்கிறது 7
★ தலைநிமிர்ந்த தமிழ்நாடு தனித்துவமான பொன்னாடு 19
★ விவசாயிகளின் நலனுக்காக ரூ. 15.40 கோடியில் வேளாண் கட்டடங்கள், கரும்பு விவசாயிகளுக்குச் சிறப்பு ஊக்கத்தொகை, 20 நடமாடும் காய்கனி அங்காடிகள் 33
★ கோவில்பட்டியில், ரூ.1.51 கோடி மதிப்பீட்டில் கரிசல் இலக்கியத்தின் முன்னத்தி ஏர் கி. ராஜநாராயணன் அவர்களுக்கு நினைவரங்கம் 36
★ தென்காசி மாவட்டத்தில் ரூ. 182.56 கோடி மதிப்பில் 1,03,508 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் 38
★ தூய்மைப் பணியாளர்களின் நலன்காக்கும் "தூய்மைப் பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம்" 47
★ இந்தியாவிலேயே மற்ற மாநில அரசுகளுக்கு முன்மாதிரியாகத் "தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்" 50
★ அரசுப் பள்ளிகளை மேம்படுத்தும் "நம்ம ஸ்கூல் ஃபவுண்டேஷன்" திட்டம் 55
★ ஒரு கோடியே ஒன்றாவது பயனாளிக்கு "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்தில் மருத்துவப் பெட்டகம் 64
★ மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.21,392.52 கோடி கடன் வழங்கப்பட்டு, 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.25 ஆயிரம் கோடிக் கடன் வழங்க இலக்கு நிர்ணயம் 67

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் பொங்கல் பரிசாக ஒரு கிலோ அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக்கரும்பு, மற்றும் ரூ.1,000 ரொக்கம் வழங்கிடும் பணியினைத் தொடங்கி வைப்பதன் அடையாளமாக 09.01.2023 அன்று சென்னை, கடற்கரைச் சாலை, சத்யா நகரில் உள்ள நியாய விலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்குப் பொங்கல் பரிசுத் தொகுப்பினையும், இலவச வேட்டி, சேலைகளையும் வழங்கினார்.

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள : tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in

கடந்த ஆண்டைப் போலவே வருங்காலமும் வசந்த காலமாக அமையட்டும்...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி - 31.12.2022



எனது அன்பான தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

“ஆண்டொன்று போனால் – வயதொன்று கூடும்” என்று வாழ்வதல்ல வாழ்க்கை. ஆண்டொன்று போனால் – வளர்ச்சி என்பது இன்னும் பல மடங்கு கூடும் என்று வாழ்வதுதான் வாழ்க்கை.

அந்த வகையில், கடந்த ஆண்டு என்பது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியும் எழுச்சியும் கொண்ட ஆண்டாகவே அமைந்திருந்தது.

அதற்கு முந்தைய ஆண்டுகளில் நம்முடைய மாநிலம் சந்தித்த மந்த நிலையை நாம் மாற்றிக் காட்டினோம். மக்கள் வாழ்வு மீண்டும் வளம் பெறத் துவங்கியது.

இப்போது 2023ஆம் ஆண்டில் உங்கள் ஒவ்வொருவருடைய சமூக - பொருளாதார வளர்ச்சியையும் இன்னும் அதிகரிக்கும் ஆண்டாக அமைய, நானும் நமது அரசும் தொடர்ந்து பாடுபடுவோம்.

உங்கள் முகங்களில் மகிழ்ச்சியைப் பார்ப்பதுதான் எனக்கு முக்கியம். அதற்காகத்தான் நான் முதலமைச்சர் பதவியை ஒரு பெரும் பொறுப்பாகப் பார்த்துப் பணியாற்றி வருகிறேன்.

கடந்த ஓராண்டுக் காலத்தில் நமது அரசு தமிழ்நாட்டு மக்களுக்கு ஏராளமான - மகத்தான சாதனைகளைச் செய்திருக்கிறது. அதையெல்லாம் நான் பட்டியல்போட்டுச் சொல்ல வேண்டும் என்று அவசியம் இல்லை. அதனால் பயன்பெறக் கூடிய உங்களுக்கே அது நன்றாகத் தெரியும்.

ஆட்சிப் பொறுப்புக்கு வந்த அன்றைக்கே நான் சொன்னேன்: “எனக்கு வாக்களித்தவர்கள் மகிழ்ச்சி அடைவது மட்டுமல்ல, வாக்களிக்கத் தவறியவர்களும் பாராட்டும் முதலமைச்சராக நான் செயல்படுவேன்” என்று சொன்னேன். அப்படித்தான் செயல்பட்டு வருகிறேன்.

அரசு விழாவாக இருந்தாலும் – பொது நிகழ்ச்சியாக இருந்தாலும் எல்லா இடங்களிலும் மக்களாகிய உங்கள் அன்பை நான் உணர்கிறேன். நீங்கள் அளிக்கின்ற பாராட்டுக்களை நான் பணிவோடு ஏற்றுக் கொள்கிறேன். அது நான் இன்னும் கவனமாக, கூடுதலாகப் பணியாற்ற ஊக்கம் தருகிறது.

கடந்த ஆண்டு இந்தியாவில் நம்பர் ஒன் முதலமைச்சராக ‘இந்தியா டுடே’ இதழால் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

அதைவிட, தமிழ்நாடு நம்பர் ஒன் ஆவதுதான் எனக்குப் பெருமை என்று அப்போது நான் சொன்னேன். அதை மனதில் வைத்துப் பணியாற்றினோம்.

அதற்குப் பலனாகக் கடந்த வாரத்தில் தமிழ்நாடும் இந்தியாவிலேயே நம்பர் ஒன் மாநிலமாகத் தகுதி பெற்றுள்ளது. 12 குறியீடுகளில் ஒன்பதில் தமிழ்நாடு முன்னிலையில் வந்துள்ளதாக அறிவித்திருக்கிறார்கள். இது திராவிட முன்னேற்றக் கழக அரசைச் சேர்ந்தவர்களின் உழைப்புக்குக் கிடைத்த சான்றிதழ்.

ஒவ்வொரு நாளும் திட்டமிட்டு உழைத்ததால்தான் இந்த வெற்றி சாத்தியமாகியது.

நினைத்துப் பார்க்கிறேன்.... நித்தமும் மக்களுக்காக நான் ஓய்வில்லாமல் உழைத்துக் கொண்டு இருக்கிறேன்.

கடந்த ஓராண்டுக் காலத்தில் மட்டும் 640க்கும் அதிகமான நிகழ்ச்சிகளில்

நான் பங்கெடுத்திருக்கிறேன். இதில் 550க்கும் அதிகமான நிகழ்ச்சிகள், அரசு நிகழ்ச்சிகள். கழக நிகழ்ச்சிகள் 90க்கும் மேல்.

மொத்தமாகப் பார்த்தால், தமிழ்நாட்டில் 8,500 கிலோமீட்டருக்கும் அதிகமாகச் சுற்றி வந்திருக்கிறேன்.

மக்களுக்கு நேரடியாக வழங்கப்பட்ட உதவிகள் மூலமாக ஒரு கோடியே 3 இலட்சத்து 74 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பயனடைந்திருக்கிறார்கள்.

தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டதன் மூலமாக பயனடைந்தவர்கள் இவர்கள்.

ஓராண்டுக் காலத்தில் ஒரு கோடிப் பேருக்கு நேரடியாக நலத்திட்ட உதவிகளைச் செய்திருக்கிறோம்.

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலமாக ஒரு கோடிப் பேர் பயனடைந்திருக்கிறார்கள்.

2.19 கோடி குடும்பங்களுக்குப் பொங்கல் பரிசாக 1,000 ரூபாயும், அரிசி, சர்க்கரை மற்றும் கரும்பு வழங்கப்பட இருக்கின்றன.

கட்டணமில்லாப் பேருந்து திட்டத்தின் வழியாக, ஒரு நாளைக்கு 36 இலட்சம் பயணங்களை மகளிர் மேற்கொண்டு பயனடைகிறார்கள்.

இப்படி கோடிக்கணக்கானவர்கள் நாள்தோறும் பயன்பெற்று, நெஞ்சார வாழ்த்தும் அரசாக நமது கழக அரசு செயல்பட்டு வருகிறது.

வருகிற 2023ஆம் ஆண்டும் பல்வேறு புதிய திட்டங்களைச் செயல்படுத்த இருக்கிறோம்.

அரசு ஊழியர்கள் – ஆசிரியர்கள் – உழவர்கள் – மாணவர்கள் – மகளிர் – மாற்றுத்திறனாளிகள் - விளிம்புநிலையினர் என அனைவருக்கும் இன்னும் பல புதிய திட்டங்கள் வர இருக்கிறது.

திராவிட மாடல் ஆட்சியின் இலட்சியம் என்பது கல்வியில், வேலைவாய்ப்பில், அறிவுத் திறனில், தொழில் வளர்ச்சியில், அனைவருக்குமான சமூக வளர்ச்சியில் தமிழ்நாடு – இந்தியாவின் முன்மாதிரி மாநிலமாக ஆவதுதான்.

அந்த இலட்சியத்துக்காக என்னையே நான் ஒப்படைத்துக் கொண்டு செயல்படுவேன். இதற்குத் தமிழ்நாட்டு மக்களாகிய நீங்கள் அனைவரும் மனமார்ந்த ஒத்துழைப்பைத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சமூகநீதி மண்ணாக - மதச்சார்பற்ற மாநிலமாக – தமிழ்நாடு விளங்க தமிழக மக்கள் அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்.

நம்மிடையே வெறுப்புணர்வைத் தூண்டி, நம்மைப் பிளவுபடுத்தும் சாதிய - மதவாத சக்திகளுக்கு எப்போதும் நாம் இடமளிக்கக் கூடாது.

மொழியால், இனத்தால், தமிழர்கள் என்ற உணர்வோடு ஒன்றிணைந்து வாழ வேண்டும்.

நல்லிணக்க மாநிலமாக இருந்தால்தான் சிறந்த மாநிலமாக ஆக முடியும்.

இன்றைய இளைய சமுதாயமானது படிப்பு - படிப்பு - படிப்பு எனப் படிப்பில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும். உயரிய இலட்சியங்களை அடைய கனவு காண வேண்டும். அந்தக் கனவை நினைவாக்க உழைக்க வேண்டும். அதில் வெற்றி பெற்று, நீங்கள் பெருமை அடைவதோடு, உங்க பெற்றோரையும் பெருமைப்படுத்த வேண்டும்.

'நான் முதல்வன்' என்ற என்னுடைய கனவுத் திட்டத்தின் நோக்கமே அதுதான்.

படிப்பைத் திசைதிருப்பும் பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகிவிடக் கூடாது. உடல்நலனுக்கும் மனநலனுக்கும் கேடான போதைப் பழக்கங்களுக்கு இளைய சமுதாயம் அடிமையாகிவிடக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

இளைய சக்தியின் மூலமாகத்தான் இணையற்ற மாநிலத்தை உருவாக்க முடியும்.

தன் பெண்டு, தன் பிள்ளை, சோறு, வீடு, சம்பாத்தியம், இவையுண்டு தானுண்டு என்று வாழக்கூடாது என்றார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள்.

அப்படி இல்லாமல், அனைவரும் தங்களது குடும்பத்தையும் வளப்படுத்தி – சமூக வளத்துக்கும் பங்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுத் தொண்டாற்றுவதால் கிடைக்கும் மகிழ்ச்சிக்கு இணையாக வேறு எதுவும் இருக்க முடியாது.

அந்த வகையில் கடந்த ஆண்டைப் போலவே வருங்காலமும் வசந்த காலமாக அமையட்டும்.

புத்தாண்டே வருக ! புது வாழ்வைத் தருக !

அனைவருக்கும் எனது இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்**
அவர்கள் வழங்கித்
தொடங்கி வைத்தார் -
09.01.2023

தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாட 2.19 கோடி குடும்பங்கள் பயன்பெறும் பொங்கல் பரிசுத் தொகுப்பு

"உழுவார் உலகத்தார்க்கு ஆணி" என்று அய்யன் திருவள்ளுவர் புகழ்ந்து பாடிய உழவர் பெருமக்களையும், அவர்களுக்குத் துணையாக இருக்கும் கதிரவனுக்கும், கால்நடைகளுக்கும் நன்றிகூறி மரியாதை செலுத்தும் நன்னாளாகவும், தமிழர் அனைவரும் ஓரினம் என்ற தமிழினத்தின் சிறப்பினை உலகிற்குப் பறைசாற்றும் பொன்னாளாகவும் தைப்பொங்கல் திருநாள் கொண்டாடப்படுகிறது.

இத்தகைய சிறப்புமிக்க தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் திருநாளை மக்கள் அனைவரும் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்குத் தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு, ரூ.1,000 ரொக்கம், ஆகியவற்றை 2,19,33,342 குடும்பங்களுக்கு ரூ.2,429.05 கோடி செலவில் வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

மேலும், பொங்கல் பண்டிகையையொட்டி இலவச வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்திட தமிழ்நாடு அரசால் ரூ.487.92 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஏழை, எளிய மக்கள் பயன்பெறுவதோடு, கைத்தறி, விசைத்தறி தொழில்களில் ஈடுபட்டுள்ளோருக்கு வேலைவாய்ப்பும் வழங்கப்படுகிறது.

அதன்படி, பொங்கல் பரிசாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு ரூ.1,000 ரொக்கம் ஆகியவற்றை வழங்கிடும் பணியினைத் தொடங்கி வைப்பதன் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 09.01.2023 அன்று சென்னை கடற்கரைச் சாலை, சத்யா நகரில் உள்ள நியாய விலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்குப் பொங்கல் பரிசுத் தொகுப்பினையும், இலவச வேட்டி, சேலைகளையும் வழங்கினார்.

இப்பொங்கல் பரிசினைப் பெற்றிட அரிசி குடும்ப அட்டைதாரர்கள் அதிக எண்ணிக்கையில் நியாய விலைக் கடைகளுக்கு ஒரே நேரத்தில் வருவதை தவிர்த்திட, நாள், நேரம் குறிப்பிடப்பட்டு டோக்கன் வழங்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள நாள், நேரத்தில் அக்குடும்ப அட்டைதாரர்கள் பொங்கல் பரிசினை பெற்றுக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் வெற்றிகரமாக இந்த அரசு தொடர்ந்து வழிநடத்திச் செல்கிறது

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்கள், 09.01.2023 அன்று சட்ட பேரவையில் 2023ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடரைத் தொடங்கிவைத்து ஆற்றிய உரை.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களே!

வணக்கம்.

இம்மாமன்றத்தின் 2023ஆம் ஆண்டுக்கான சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத்தில் என் உரையை ஆற்றுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்நாட்டு மக்களுக்கும் இம்மாமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாளான பொங்கல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் புத்தாண்டில் நம் மாநிலத்தில் மகிழ்ச்சியும், வளமும், வளர்ச்சியும் மென்மேலும் பெருக என் உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ கடந்த 50 ஆண்டுகளாக, பல்வேறு துறைகளில் தமிழ்நாடு நமது நாட்டில் உள்ள மாநிலங்களில் முன்னோடி மாநிலமாகப் பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. 1960களில், இந்தியாவின் மற்ற பெரிய மாநிலங்களோடு ஒப்பிடும்போது, சமூக, பொருளாதார, கல்வி, மருத்துவக் குறியீடுகளில் பின்தங்கி இருந்த தமிழ்நாடு, இன்று அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக உயர்ந்து நிற்பதற்கு முழுமுதற்காரணம், இக்காலகட்டத்தில் சமூகநீதி, சமத்துவம், சுயமரியாதை, பகுத்தறிவு ஆகிய கொள்கைகளை அடித்தளமாகக் கொண்டு இங்கு கட்டமைக்கப்பட்ட மிகச்சிறந்த ஆட்சிமுறையே. அனைவரையும் உள்ளடக்கிய இந்த வளர்ச்சிக் கோட்பாட்டின் விளைவாகவே, பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழு அண்மையில் மாநிலங்களின் வளர்ச்சி நிலை குறித்து ஆய்வு செய்து வெளியிட்டுள்ள சமூக வளர்ச்சிக் குறியீட்டு அறிக்கையில்

(Social Progress Index) 63.3 புள்ளிகளைப் பெற்று, இந்தியாவின் பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது. சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டோர், விளிம்பு நிலையில் உள்ளோர், பிற்படுத்தப்பட்டோர் போன்றோருக்கு அதிகாரமளித்து, அவர்களின் நலன் காத்துள்ள இந்தத் திராவிட வளர்ச்சிப் பாதையில் இந்த அரசு மேலும் உத்வேகத்தோடு தொடர்ந்து பீடுநடை போடும்.

❖ இந்த வளர்ச்சிப் பயணத்தில் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அயராத உழைப்போடும், அக்கறையோடும் இந்த அரசை வழிநடத்தி வந்துள்ளார்கள். இந்த வகையில், அண்மையில் 'இந்தியா டுடே' பத்திரிக்கை நடத்திய 'மாநிலங்களின் நிலை' என்ற ஆய்வு, சிறப்பாகச் செயல்படும் பெரிய மாநிலங்களில் முதன்மை மாநிலம் தமிழ்நாடு என்று முடிவு செய்துள்ளது. இந்தச் சாதனை, நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிக்க தலைமைக்கும், சமூகநீதியையும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்ட 'திராவிட மாடல்' ஆட்சிக்கும் அளிக்கப்பட்டுள்ள நற்சான்றிதழாகும்.

❖ தமிழ்நாட்டில் பொங்கல் பண்டிகையை மக்கள் சிறப்பாகக் கொண்டாடும் விதமாக 2,429 கோடி ரூபாய் செலவில் 2.19 கோடி அரிசி அட்டைதாரர்கள் பயனடையும் வகையில், ஒவ்வோர் அரிசி அட்டைதாரருக்கும் ஆயிரம் ரூபாயும், ஒரு கிலோ பச்சரிசியும், ஒரு கிலோ சர்க்கரையும், ஒரு முழுச் செங்கரும்பும் வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு, இன்று அதனைத் தொடங்கி வைத்துள்ளார்கள். தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் உவகையுடன் தமிழர் திருநாளைக் கொண்டாடிட இது பெரிதும் உதவும் என நான் நம்புகிறேன்.

❖ மாண்டஸ் புயல், வடகிழக்குப் பருவமழையை அரசு சிறந்த முறையில் கையாண்டதால், சென்னை மாநகரில் அதன் தாக்கம் மிகக் குறைந்த அளவிலேயே இருந்தது. குறிப்பாக, சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் மழைக்காலம் தொடங்குவதற்கு முன்னரே, 261 கி.மீ. நீளமுள்ள மழைநீர் கால்வாய்கள் மற்றும் இதர வெள்ளத் தடுப்புத் திட்டங்களுக்காக 1,335 கோடி ரூபாய் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 209 கி.மீ. நீளமுள்ள கால்வாய்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், கொசஸ்தலையாற்றில் 360 கி.மீ. நீளத்திற்கு மிக முக்கிய மழைநீர்க் கால்வாய்கள் போர்க்கால அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, கடந்த காலங்களில் அதிகளவில் மழை வெள்ள பாதிப்பிற்கு உள்ளான சென்னை மாநகரின் முக்கியமான பகுதிகள், இந்தப் பருவ மழைக்காலத்தில் மிகக் குறைந்த அளவிலேயே பாதிப்படைந்தன. மழை வெள்ளத்தின் காரணமாக ஏற்படக்கூடிய போக்குவரத்து நெரிசலும் பெருமளவு குறைக்கப்பட்டு, மாநகரம் உடனடியாக இயல்பு நிலைக்குத் திரும்பியது. மாண்டஸ் புயலையும் வடகிழக்குப் பருவமழையையும் மிகச் சிறப்பாகக் கையாண்ட இந்த அரசிற்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ "வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்" என்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கொள்கை நிலைப்பாட்டுடன் செயல்படும் இந்த அரசு, தமிழ்மொழியின் உரிமையைக் காக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

❖ அலுவல்மொழிப் பயன்பாடு தொடர்பாக, தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளின் நலனுக்குக் குந்தகம் விளைவிக்கும் முயற்சிகளுக்கு எதிராக ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அனைத்து மாநில மொழிகளையும் அலுவல் மொழியாக அறிவிக்க வேண்டும் என்று இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

❖ மாநிலங்களின் வருவாய் பாதுகாக்கப்படும் என்று அளிக்கப்பட்ட வாக்குறுதியின் அடிப்படையில், தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்கள் தங்களது வரிவிதிக்கும் அதிகாரத்தை விட்டுக் கொடுத்து சரக்கு மற்றும் சேவை வரி முறையில் இணைந்தன. ஆனால், கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் வரிவளர்ச்சி வீழ்ச்சி அடைந்ததால்,

174 கோடி ரூபாய் மதிப்புள்ள அரிசி, பால் பவுடர், உயிர்காக்கும் மருந்துகள் ஆகியவற்றை இந்த அரசு வழங்கியது. இக்கட்டான சூழலில் உதவிக்கரம் நீட்டிய தமிழ்நாடு அரசின் இந்த நடவடிக்கையை அனைவரும் பாராட்டியுள்ளனர். இக்காலகட்டத்தில், பொருளாதார நெருக்கடி காரணமாக 216 இலங்கைத் தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளனர். அவர்களை முகாம்களில் தங்க வைத்து, தேவையான உணவு, உடை, அடிப்படை வசதிகள் போன்றவை வழங்கப்படுகின்றன.

மாநிலங்களின் வருவாய் எதிர்பார்த்த அளவில் இல்லை. இந்நிலையில், 30.06.2022 ஆம் நாளுடன் சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடு வழங்கும் காலம் முடிவடைந்துள்ளது. கோவிட் பெருந்தொற்றின் தாக்கத்திலிருந்து மாநிலங்களின் வருவாய் இன்னும் முழுமையாக மீளாத நிலையில், இழப்பீடு வழங்கும் காலத்தினைக் குறைந்தபட்சம் மேலும் இரண்டு ஆண்டுகளுக்காவது நீட்டிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசை இந்த அரசு வலியுறுத்துகின்றது.

❖ பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் தீர்த்து நல்லாட்சியை வழங்கிட இந்த அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகின்றது. நடப்பாண்டில், 'முதல்வரின் முகவரி' திட்டத்தின்கீழ், இதுவரை பெறப்பட்டுள்ள 17.70 இலட்சம் மனுக்களில், 16.28 இலட்சத்திற்கும் மேலான மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. இந்த மனுக்கள் மீது திருப்திகரமான முறையில் தீர்வுகள் காணப்படுவதை உறுதி செய்திட, கண்காணிப்புப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

❖ உலகெங்கும் விரவியுள்ள தமிழர்களுக்குத் தமிழ்மொழியைக் கற்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தவும், தமிழ்ப் பண்பாட்டினைப் பேணிக்காக்கவும், 'தமிழ்ப் பரப்புரைக் கழகம்' உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், அயலகத் தமிழர்களுக்கும் தாய்த் தமிழ்நாட்டிற்கும் ஒரு பாலமாக இயங்குவதற்கும், அவர்களின் நலனைக் காப்பதற்கும் அயலகத் தமிழர் நலவாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இம்முயற்சிகளின் ஒரு பகுதியாக, ஆண்டுதோறும் ஜனவரி 12ஆம் நாள் 'அயலகத் தமிழர் தினமாக' இந்த அரசால் அறிவிக்கப்பட்டு, கொண்டாடப்பட்டு வருகிறது.

❖ இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினாலும் உணவுப் பற்றாக்குறையினாலும் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில்

❖ மாநிலத்தில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டிட இந்த அரசு உயர் முன்னுரிமை அளிக்கின்றது. வன்முறையில்லா ஒரு அமைதிப் பூங்காவாகத் தமிழ்நாடு தொடர்ந்து திகழ்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. நம் இளைய தலைமுறையின் எதிர்காலத்தின் மீது அக்கறை கொண்டு, போதைப் பொருட்களின் விநியோகத்தையும் பயன்பாட்டையும் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உறுதியாக உள்ளார். போதைப் பொருட்களின் கடத்தல் தடுப்புச் சட்டங்களைத் தீவிரமாக அமல்படுத்துதல், மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

❖ மக்களுக்குச் சீராகவும் சிறப்பாகவும் சேவைகளை வழங்கும் எழில் கூடங்களாகப் பொது விநியோகக் கடைகளை மாற்றியமைத்திட, இந்த அரசு, "நம்ம பகுதி நம்ம நியாய விலைக் கடை" என்ற புதிய முயற்சியைத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 4,455 பொது விநியோகக் கடைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

❖ நீர்நிலைகளையும் கால்வாய்களையும் முன்கூட்டியே திட்டமிட்டுத் தூர்வாருவதில் முனைப்பான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டதாலும், நல்ல பருவமழை பெய்ததாலும், குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணை, உரிய காலத்திற்கு 19 நாட்கள் முன்னதாகவே திறக்கப்பட்டது. மேலும், உழவர்களுக்கு 61.12 கோடி ரூபாய் மதிப்பிலான குறுவைத் தொகுப்பை இந்த அரசு வழங்கியுள்ளது. இவை காரணமாக, காவிரி டெல்டா பகுதியில் 5.28 இலட்சம் ஏக்கர் பரப்பில் குறுவை நெல் சாகுபடி செய்து வரலாற்றுச் சாதனை படைக்கப்பட்டதோடு,

காலநிலை மாற்றம் குறித்து தகுந்த ஆலோசனைகளை வழங்கிட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் பன்னாட்டு வல்லுநர்களைக் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேலும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான முயற்சிகளை வலுப்படுத்த காலநிலை உச்சி மாநாட்டையும் சென்னையில் இந்த அரசு, 2022ஆம் ஆண்டு டிசம்பர் 8, 9ஆம் தேதிகளில் வெற்றிகரமாக நடத்தியுள்ளது. ஒரு முன்னோடி முயற்சியாக, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான பெருந்திட்டங்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில், 1,000 கோடி ரூபாய் மதிப்பில் 'பசுமைக் காலநிலை நிதியத்தை' (Green Climate Fund) அரசு அமைத்துள்ளது.

மாநிலத்தில் சம்பா சாகுபடி இதுவரை 36.20 இலட்சம் ஏக்கர் பரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

❖ நுகர்வோர் பாதிக்கப்படாத வகையில், பசும்பால், எருமைப்பால் ஆகியவற்றின் கொள்முதல் விலையை லிட்டருக்கு மூன்று ரூபாய் உயர்த்தி அரசு அறிவித்துள்ளது. இதன்மூலம் மாநிலத்தில் உள்ள 4.20 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறுகிறார்கள்.

❖ மீனவர் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட இந்த அரசு, அவர்களின் நலனுக்காக பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் 5 புதிய மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கும் பணிகளும், 3 மீன்பிடித் துறைமுக மேம்பாட்டுப் பணிகளும் மொத்தம் 982.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாரம்பரிய கடற்பகுதியில் தமிழ்நாட்டு மீனவர்களின் மீன்பிடி உரிமைகளைப் பாதுகாப்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. இந்த ஆண்டில் மட்டும் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 232 தமிழ்நாட்டு மீனவர்கள், இந்த அரசின் தீவிர முயற்சியால் மீட்கப்பட்டுள்ளனர். இன்று வரை, பத்து மீனவர்கள் இலங்கை அரசால் திருப்பி அனுப்பப்படவில்லை. 106 மீன்பிடிப் படகுகள் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் இன்னும் உள்ளன. இலங்கைக் கடற்படையினர் நமது மீனவர்களைக் கைது செய்வதைத் தடுக்கவும், மீனவர்களின் உடைமைகளை விடுவிக்கவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், இப்பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணவும் இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

❖ காலநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கத்தைத் தணிப்பதில் நாட்டிலேயே முன்னோடி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

❖ மானிட நலன் மட்டுமன்றி, பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் தமிழர் பண்பாட்டைப் பேணிக்காக்கும் இவ்வரசு, கழுவேலி, நஞ்சராயன் குளம் ஆகிய இடங்களில் பறவைகள் சரணாலயங்களையும், அகத்தியர் மலையில் யானைகள் காப்பகத்தையும் அமைக்க ஆணையிட்டுள்ளது. அதேபோல், இந்தியாவிலேயே முதல் முயற்சியாக, திண்டுக்கல், கரூர் மாவட்டங்களில் தேவாங்கு காப்பகத்தையும், பாக். விரிகுடாவில் கடற்பசு பாதுகாப்பகத்தையும் இந்த அரசு அமைத்துள்ளது. அழிவின் விளிம்பிலுள்ள மாநில விலங்கான நீலகிரி வரையாட்டைப் பாதுகாத்திட 'நீலகிரி வரையாடுத் திட்டத்தை' 25.14 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்திட இந்த அரசு ஆணையிட்டுள்ளது. ஈரநில இயக்கத்தின் (Wetland Mission) கீழ், 13 புதிய ராம்சர் தளங்களுக்கான அங்கீகாரத்தைப் பெற்று நாட்டிலேயே முதல்நிலையைத் தமிழ்நாடு எட்டியுள்ளது.

❖ அண்டை மாநிலங்களுடன் நட்புறவைப் பேணும் அதேவேளையில், மாநிலங்களுக்கு இடையே பாயும் நதிகளின் நீர் பிரச்சினைகளில் நம் உரிமைகளைப் பாதுகாத்திட இந்த அரசு உறுதியாக உள்ளது. தமிழ்நாட்டின் உழவர் பெருமக்களைப் பாதிக்கும் எந்த நடவடிக்கையையும் இந்த அரசு ஒருபோதும் அனுமதிக்காது. மேகதாது அணை கட்டுவதைத் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. முல்லைப் பெரியாறு அணையில் 142 அடி உயரத்திற்கு நீர் தேக்கப்பட்டுள்ளதோடு, அணையின் உயரத்தை மேலும் உயர்த்த அனைத்து முயற்சிகளையும் இந்த

அரசு மேற்கொண்டு வருகிறது. பெண்ணையாற்றில் இருந்து கருநாடக மாநிலம் அனுமதியின்றி தண்ணீரைத் திசை திருப்பும் பிரச்சினையில், மாண்பமை உச்சநீதிமன்றத்தின் உத்தரவுப்படி நதிநீர் தீர்ப்பாயத்தை விரைந்து அமைத்திட இந்த அரசு வலியுறுத்துகிறது.

❖ மாநிலம் முழுவதும் நீர் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், 1,334.10 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான ஆறு பெருந்திட்டங்களை இந்த அரசு விரைந்து செயல்படுத்தி வருகிறது. இதன் பயனாக, 2.59 டி.எம்.சி அளவிற்குக் கூடுதல் நீரைச் சேமிக்கவும் 6.92 டி.எம்.சி நீரைத் திரும்ப மீட்டெடுக்கவும் இயலும். அரசின் தொடர் கண்காணிப்பின் விளைவாக, நீண்டகாலமாக நிலுவையில் உள்ள தாமிரபரணி - கருமேனியாறு – நம்பியாறு திட்டம் மற்றும் அத்திக்கடவு - அவிநாசி திட்டப்பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

❖ நாட்டிலேயே பல்வேறு சுகாதாரக் குறியீடுகளில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலை வகித்து வருகின்றது. குழந்தை இறப்பு விகிதம், தாய்மார்களின் இறப்பு விகிதத்தைப் பெருமளவில் குறைத்து, 2030ஆம் ஆண்டில் எட்டப்பட வேண்டிய நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளைத் தமிழ்நாடு ஏற்கெனவே எட்டியுள்ளது.

❖ அதிகரித்து வரும் தொற்று அல்லாத நோய்களின் பாதிப்பைப் போக்கும் வகையில், மக்களின் வீட்டிற்கேச் சென்று கட்டணமின்றி மருத்துவச் சேவைகளை வழங்குவதற்காக 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற முன்னோடித் திட்டத்தை இந்த அரசு தொடங்கியது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 1.01 கோடி மக்கள் தங்கள் வீட்டிலேயே சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

❖ தமிழ்நாட்டில் விபத்து நேர்ந்த முதல் 48 மணி நேரத்தில் அவசர மருத்துவச் சேவையை அனைவருக்கும் கட்டணமின்றி வழங்குவதற்காக, நாட்டிலேயே முதன்முறையாக 'இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48' என்ற உன்னதத் திட்டத்தை இந்த அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. மாநிலமெங்கும் உள்ள 679 மருத்துவமனைகளில் இதுவரை 1.35 இலட்சம் விபத்துக்குள்ளானவர்களுக்கு 120.58 கோடி ரூபாய் மதிப்பிலான சிகிச்சைகள் எவ்விதக் கட்டணமுமின்றி வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம், எண்ணற்ற விலைமதிப்பில்லா உயிர்கள் காக்கப்பட்டுள்ளன.

❖ அண்மையில், சில நாடுகளில் ஒமிக்ரானின் உருமாறிய ஒரு புதிய வகை வைரஸ் காரணமாக கோவிட் தொற்று வேகமாகப் பரவி வருகிறது. கோவிட் பெருந்தொற்றின் இரண்டாவது, மூன்றாவது அலைகளை வெற்றிகரமாக எதிர்கொண்ட இந்த அரசு, மாநிலத்தில் போதிய மருத்துவக் கட்டமைப்புகளைத் தயார் நிலையில் வைத்து, எதிர்வரக்கூடிய சவால்களை எதிர்கொள்ளத் தேவையான அனைத்துத் தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

❖ நீட் தேர்வு முறையானது, கிராமப்புற ஏழை மாணவர்களை மிகவும் பாதிப்பதாகவும், மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிப்பதாகவும் அமைந்துள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு, இது குறித்து ஆய்வு செய்வதற்காக, நீதியரசர் ஏ.கே.ராஜன் அவர்களின் தலைமையில் ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டில் மருத்துவ மாணவர் சேர்க்கைக்கு விலக்கு அளிப்பதற்கான சட்ட முன்வடிவை இந்தச் சட்டமன்றத்தில் நிறைவேற்றி குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைத்துள்ளோம். இச்சட்டம் குறித்துக் கோரப்பட்ட விளக்கங்கள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ள நிலையில், இந்த சட்ட முன்வடிவிற்கான ஒப்புதலை விரைந்து வழங்க இந்த அரசு வலியுறுத்துகிறது.

❖ கோவிட் பெருந்தொற்றினால் ஏற்பட்ட கற்றல் இழப்பை ஈடுசெய்ய, நாட்டிற்கே முன்னோடியாக, மாபெரும் கற்றல் திட்டமான 'இல்லம் தேடிக் கல்வி' திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இரண்டு இலட்சம் தன்னார்வலர்களின் உதவியுடன், ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் 34 இலட்சம்

பன்னாட்டு புத்தகக் கண்காட்சியை 16.01.2023 முதல் 18.01.2023 வரை நடத்த தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. இதில் 25க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்க உள்ளன. தமிழ் பதிப்பாளர்களுக்கும், உலகளாவிய பதிப்பகத் துறைக்கும் இடையே, அறிவுப் பரிமாற்றம், பதிப்புரிமை பரிமாற்றம் ஆகியவற்றை ஊக்குவிப்பதே இந்தப் புத்தகக் கண்காட்சியின் நோக்கமாகும். "தாயெழில் தமிழை, எந்தன் தமிழரின் கவிதை தன்னை, ஆயிரம் மொழியிற் காணும் நாள் எந்நாளோ" என்ற பாவேந்தரின் கனவை நனவாக்கும் வகையில், தமிழ் இலக்கியத்திலுள்ள சிறந்த படைப்புகளை உலக மொழிகளிலும் பிற இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்க ஒரு சிறப்பு நல்கையைத் (special grant) தமிழ்நாடு அரசு வழங்கும்.

மாணவர்கள் இத்திட்டத்தினால் பயன் பெறுகின்றனர். சர்வதேச அளவில் புகழ்பெற்ற ஆராய்ச்சி நிறுவனமான J PAL மேற்கொண்ட ஆய்வின்படி, ஆறு மாதங்களில் ஒட்டுமொத்த கற்றல் இழப்பில் 25 சதவீதம் வரை ஈடுசெய்யப்பட்டுள்ளதில், 'இல்லம் தேடிக் கல்வி' திட்டம் பெரும் பங்கை ஆற்றியுள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டங்களுடன் நடத்தப்பட்ட 'கல்வி மாற்றம் உச்சி மாநாட்டில்', இந்த ஆய்வின் முடிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு, அனைவராலும் பாராட்டப்பட்டதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். 2025ஆம் ஆண்டுக்குள், தொடக்கப் பள்ளியில் பயிலும் அனைத்துக் குழந்தைகளும் புரிதலுடன் படிக்கவும், எண்கணிதத்தில் திறன் பெறுவதற்கும் 'எண்ணும் எழுத்தும்' திட்டமும் செயல்படுத்தப்படுகிறது.

❖ அனைவருக்கும் தரமான கல்வி வழங்குவதன் மூலம் ஒவ்வொரு மாணவரையும் முழுமையான வளர்ச்சி அடையச் செய்வதே இந்த அரசின் முக்கியக் குறிக்கோளாகும். இந்த நோக்கத்தை எய்திட, அடுத்த ஐந்தாண்டுகளில் அரசுப் பள்ளிகளை நவீனப்படுத்தி கட்டமைப்பை மேம்படுத்துவதற்காகப் 'பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்' தொடங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இத்திட்டத்திற்கு 1,430 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 7,200 புதிய வகுப்பறைகள் 1,050 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

❖ 45 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வரும் சென்னை புத்தகக் கண்காட்சியை உலகத்தரத்திற்கு இவ்வாண்டு உயர்த்தும் வகையில், முதன்முறையாக சென்னை

❖ தரமான உயர்கல்வியை வழங்கி, நாட்டின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான ஆற்றல்மிக்க மனிதவளத்தை உருவாக்க இந்த அரசு முனைந்துள்ளது. அந்த வகையில், பெண்களின் உயர்கல்விக்கு வித்திடவே 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுப் புதுமைப் பெண் திட்டம்' என்ற முன்னோடித் திட்டத்தை இந்த அரசு தொடங்கியுள்ளது. நடப்புக் கல்வி ஆண்டில், இத்திட்டத்தின் மூலம், அரசுப் பள்ளிகளில் ஆறு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயின்று, உயர்கல்வி பயிலும் 1,28,780 மாணவிகள் மாதம் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை பெற்று பயனடைந்து வருகின்றனர். இந்நிதியாண்டின் இறுதிக்குள், பயன்பெறும் மாணவியரின் எண்ணிக்கை 2 இலட்சத்திற்கும் மேல் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக, கடந்த ஆண்டைக் காட்டிலும், நடப்புக் கல்வியாண்டில், கல்லூரிகளில் அரசுப் பள்ளி மாணவியரின் சேர்க்கை கணிசமாக அதிகரித்துள்ளது.

❖ தொழில்துறையின் தேவைகளை நிறைவு செய்வதற்காக, பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் புதிய பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் பெண்களுக்கு ஏற்ற பட்டயப் படிப்புகளையும் அரசு தொடங்கியுள்ளது. கட்டடம், இயந்திரப் பொறியியல் போன்றவற்றில் பட்டயப் படிப்புகள் நடப்புக் கல்வியாண்டில் தமிழ்வழியில் கற்பிக்கப்படுகின்றன.

❖ நாட்டிலேயே முதன்முறையாக, பன்னாட்டு செஸ் ஒலிம்பியாட் போட்டியை இந்த

ஏழை எளிய மாணவர்கள் அதிக அளவில் பள்ளிகளில் சேர்வதற்கும், தொடர்ந்து பயில்வதற்கும் இத்திட்டம் பெரும் பங்காற்றியுள்ளது. இதன் அடுத்த பரிணாமமாக, கல்வி கற்கும் கனவுகள் பல சுமந்துகொண்டு, வெறும் வயிற்றுடன் காலையில் பள்ளிக்கு வரும் குழந்தைகள் கல்வியில் கவனம் செலுத்த இயலாத நிலையைக் களைய, 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.முதற்கட்டமாக, 1,545 அரசு தொடக்கப் பள்ளிகளில் இத்திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு, 1.14 இலட்சம் மாணவர்கள் தினமும் பயன்பெறுகின்றனர். மதிய உணவுத் திட்டம் போன்றே இத்திட்டமும் நமது நாட்டிற்கே முன்னோடியாக விளங்கும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

அரசு வெற்றிகரமாகச் சென்னையில் நடத்தியது. 180க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த, ஏறத்தாழ 1,800 விளையாட்டு வீரர்களும் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இப்போட்டியை மாண்புமிகு பிரதமர் அவர்கள் தொடங்கிவைத்தார்கள். இப்போட்டிக்காக, தமிழ்நாடு அரசு மேற்கொண்ட சீரிய ஏற்பாடுகளை அனைவரும் வெகுவாகப் போற்றினர். உலகே வியக்கும் வகையில், மிகக் குறுகிய காலத்தில், இந்தப் பன்னாட்டுப் போட்டியைச் சிறப்பாக நடத்திக் காட்டிய தமிழ்நாடு அரசை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

❖ மாநிலம் முழுவதும் விளையாட்டுத் திறனை ஊக்குவித்திட 'முதலமைச்சர் கோப்பைக்கான' போட்டிகளை அரசு அறிவித்துள்ளது. இப்போட்டிகளில், பள்ளி கல்லூரி மாணவ மாணவியர், மாற்றுத்திறனாளிகள், அரசுப் பணியாளர்கள், பொதுமக்கள் என ஐந்து பிரிவுகளில், ஆண் பெண் இருபாலரும் பங்கேற்கும் வகையில், தடகளம், கால்பந்து, கபடி, சிலம்பம் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் மாநிலமெங்கும் நடத்தப்பட உள்ளன.

❖ உலகளாவிய தொழில்நுட்பம் மற்றும் புதுமைத் திறன் உச்சிமாநாடு, 'UMAGINE' முதன்முறையாகச் சென்னையில் வரும் மார்ச் மாதத்தில் நடைபெற உள்ளது. தொழில்நுட்ப நிறுவனங்கள், முதலீட்டாளர்கள், கல்வியாளர்கள், தொழில்நுட்பத்துறை முன்னோடிகள் ஆகியோரை ஒரே தளத்தில் ஒருங்கிணைத்துத் தொழில்நுட்பத்துறைக்குப் புதிய உத்வேகத்தை இம்மாநாடு ஏற்படுத்தும்.

❖ 1920ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியில் நீதிக்கட்சியின் ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்ட மதிய உணவுத் திட்டம், பல்வேறு காலங்களில் தொடர்ந்து விரிவுபடுத்தப்பட்டு, நாட்டிற்கே முன்மாதிரியாக இன்று திகழ்கிறது.

❖ தமிழ்நாடு, பல்துறைகளில் தலைசிறந்து விளங்கவும், நமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை வளர்ந்த நாடுகளுக்கு நிகராக உயர்த்தவும், 2030ஆம் ஆண்டிற்குள், ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சி இலக்கை அடைய வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இலக்கிட்டுள்ளார்கள். இந்த அரசால் மேற்கொள்ளப்பட்ட பல முதலீட்டு மாநாடுகள், உலகளவில் முதலீடுகளை ஈர்க்க மேற்கொண்ட முன்னெடுப்புகள் ஆகியவற்றின் பயனாக, ஜூலை 2021 முதல் இன்றுவரை 207 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. இதனால், 2,23,210 கோடி ரூபாய் முதலீடும் 3,44,150 நபர்களுக்கான வேலைவாய்ப்புகளும் உறுதிசெய்யப்படும். இக்காலகட்டத்தில், 28,232 கோடி ரூபாய் அந்நிய முதலீட்டைத் தமிழ்நாடு ஈர்த்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

❖ தமிழ்நாடு உயிர் அறிவியல் மேம்பாட்டுக் கொள்கை, தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை, தமிழ்நாடு காலணி, தோல்பொருட்கள் கொள்கை, தமிழ்நாடு விண்வெளி பாதுகாப்புத் தொழில் கொள்கை போன்ற பல துறைசார் கொள்கைகள் 2022ஆம் ஆண்டில் இந்த அரசால் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், எரிபொருட்களில் எத்தனால் சேர்த்தல், பசுமை ஹைட்ரஜன், மின் வாகனங்களுக்கான கொள்கைகள் ஆகியவை மிக விரைவில் வெளியிடப்படும்.

❖ சென்னை தவிர பிற நகரங்களிலும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைந்திட உகந்த சூழலை உருவாக்க, ஏழு இடங்களில் மினி டைடல்

பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், மாநிலத்தின் மூன்றாவது டைடல் பூங்கா மதுரையில் 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

❖ காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூரில் ஒரு புதிய பன்னாட்டு விமான நிலையத்தை அமைப்பதற்கான ஆயத்தப் பணிகளை மாநில அரசு தொடங்கியுள்ளது. இது நமது மாநிலத்தின் அதிகரித்து வரும் விமானப் போக்குவரத்துத் தேவைகளை நிறைவு செய்வதோடு, அப்பகுதி மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கும் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் வழிகோலும்.

❖ கோவிட் பெருந்தொற்றால் கடும் பாதிப்பிற்குள்ளான குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளால் பெருமளவில் மீண்டு வந்துள்ளன. இந்நிதியாண்டின் முதல் ஆறு மாதங்களில் இந்நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கடன்கள் 20 சதவீதமும், கடன் கணக்குகளின் எண்ணிக்கை 19 சதவீதமும் உயர்ந்துள்ளன. இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், 2,344 கோடி ரூபாய் மதிப்புள்ள, 16,000/- க்கும் மேற்பட்ட சுயதொழில் திட்டங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளதோடு, நடப்பு ஆண்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கென ஐந்து புதிய தொழிற்பேட்டைகளையும் அரசு தொடங்கியுள்ளது.

❖ தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் (StartupTN) வாயிலாக மாநிலத்தில் உள்ள புத்தொழில்களுக்கு உகந்த சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. மே 2021 முதல் மாநிலத்தில் பதிவுசெய்யப்பட்ட புத்தொழில்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகியுள்ளது. மேலும், நம் நாட்டிலேயே முதன்முறையாகப் பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினரின் புத்தொழில்களுக்கு உதவ, 30 கோடி ரூபாய் சிறப்பு நிதி அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதனால், அனைவரையும் உள்ளடக்கிய புத்தொழில் சூழல் மாநிலத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாட்டு இளைஞர்கள் உலகத்தரம் வாய்ந்த திறன் பயிற்சி பெற்றுத் திறமையிலும், தகுதியிலும், சிறந்து விளங்கிட 'நான் முதல்வன்' திட்டத்தை அரசு தொடங்கியுள்ளது. கற்கும் கல்விக்கும், தொழில்துறைகளின் தேவைக்கும் இடையே உள்ள இடைவெளியை நிறைவு செய்து, வேலைவாய்ப்புகளைப் பெற்றுத்தரக்கூடிய திறன் பயிற்சிகளும் தொழில்சார்ந்த பயிற்சிகளும் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இத்தகைய சீரிய முன்னெடுப்புகளின் மூலம், 3 இலட்சம் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்குத் திறன் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மேலும், 4.5 இலட்சம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களும் இதன் மூலம் பயனடைவர். கல்லூரிப் படிப்பு முடியும் தருவாயிலேயே மாணவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப வேலைவாய்ப்பினை உறுதி செய்வதோடு, தொழில் நிறுவனங்களில் பணியாற்ற, திறன்மிகு மாணவர்களை உருவாக்குவதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

❖ கிராமப்புறப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி, கட்டமைப்புகளை மேம்படுத்தி, வாழ்வாதாரத் திட்டங்களின் மூலம் வறுமையை அகற்றிடும் முயற்சிகளில் இந்த அரசு முழுமையாக ஈடுபட்டுள்ளது. மாநிலத்திலுள்ள அனைத்துக் கிராமப்புறக் குடியிருப்புப் பகுதிகளிலும் சமமான முழுமையான வளர்ச்சியை உறுதிசெய்யும் நோக்கத்துடன், 'அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' இந்த அரசால் மீண்டும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 2022-2023ஆம் ஆண்டில் மொத்தம் 1,155 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,544 ஊராட்சிகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

❖ மக்கள் அனைவரும் ஒற்றுமையுடனும் சகோதர உணர்வுடனும் வாழ வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட 'பெரியார் நினைவு சமத்துவபுரம்' திட்டத்தை இந்த அரசு மீட்டெடுத்து வருகின்றது. முதற்கட்டமாக, 149 சமத்துவபுரங்களில் 190 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொண்ட புதுப்பிக்கும் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

❖ அதேபோல், நகர்ப்புறப் பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட, வரும் நான்கு ஆண்டுகளில் 20,990 கி.மீ. நீளமுள்ள நகர்ப்புறச் சாலைகள் 9,588 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படுமெனச் சென்ற கூட்டத்தொடரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இப்பணிகள் விரைவில் முடிக்கப்படும். 53 இடங்களில் தேங்கியுள்ள பழைய கழிவுகளை (legacy waste) சுற்றுச்சூழலுக்கு உகந்தவாறு, உயிரி-அகழ்ந்தெடுத்தல் (Bio-mining) முறையில் அப்புறப்படுத்தி, நிலங்கள் மீட்டெடுக்கப்படவுள்ளன. இதற்காக, அரசு 122 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. இதுவரை, 369 ஏக்கர் நிலங்கள் மீட்டெடுக்கப்பட்டு, பசுமையான பகுதிகளாக மாற்றப்பட்டு வருகின்றன. மக்களின் குடிநீர்த் தேவைகளை நிறைவு செய்வதற்காக, 15,734 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 103 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு, உயிர்நீர் இயக்கத்தின்கீழ் (Jal Jeevan Mission) அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், நகர்ப்புறப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் பணிகளுக்காக அம்ருத் திட்டத்தின்கீழ் 3,166 கோடி ரூபாய் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், மாநிலம் முழுவதும் 1.64 கோடி மக்கள் பயன்பெறுவார்கள்.

❖ நகரங்களின் திட்டமிட்ட வளர்ச்சியை உறுதி செய்யவும் முறைப்படுத்தவும் ஆறு புதிய நகர வளர்ச்சிக் குழுமங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றன. இப்பெரும் நகரத் தொகுப்பின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து, பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் வகையில், சென்னைப் பெருநகரின் எல்லை ஐந்து மடங்காக 5,904 சதுர கி.மீ. அளவிற்கு விரிவாக்கப்பட்டுள்ளது.

❖ சென்னைப் பெருநகரப் பகுதிக்கான போக்குவரத்துத் திட்டங்களைத் தயாரிக்கவும், பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் போக்குவரத்து அமைப்புகளையும், சேவைகளையும் ஒருங்கிணைத்திடவும், சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமம் (CUMTA) 2010ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. பல ஆண்டுகளாகச் செயல்படாமல் இருந்த இக்குழுமத்திற்கு, இந்த அரசு புத்துயிர் அளித்துள்ளது. கடந்த நவம்பர் மாதத்தில் இக்குழுமத்தின் முதல் கூட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. ஒருங்கிணைந்த பயணச்சீட்டு முறை, பல்வழிப் போக்குவரத்துத் திட்டம், பெண்களுக்கும், மாணவர்களுக்கும் பாதுகாப்பான பயணத்தை உறுதிசெய்தல் ஆகியவை மேற்கொள்ளப்படும்.

❖ சென்னைப் பெருநகரின் வேகமான வளர்ச்சி நீடித்து நிலைக்கத்தக்கதாக இருக்க வேண்டுமெனில், இந்தப் பெருநகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் திட்டமிட்ட வளர்ச்சி அவசியம் என்பதை இந்த அரசு முழுமையாக உணர்ந்துள்ளது. இந்த வகையில், சென்னைக்கு அருகே உள்ள மாடம்பாக்கத்தில் 600 ஏக்கர் பரப்பளவில், நிலத்திரட்டு (Land Pooling) முறையில் புதிய வளர்ச்சிப் பகுதியை உருவாக்குவதற்கான ஒரு முன்னோடி முயற்சி சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நில உரிமையாளர்களின் ஒப்புதலோடு நிலங்களைப் பெற்றுத் திரட்டி, திட்டமிட்ட வளர்ச்சிக்கு ஏதுவாகப் பல்வேறு நிலப் பயன்பாடுகளுக்கு ஏற்றவாறு அவற்றை நில வகைப்பாடு செய்து, நில உரிமையாளர்களுக்குப் பங்கீடு செய்து வழங்கி, புறநகர் வளர்ச்சிக்கு வித்திடும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. பெரும்பாலான நில உரிமையாளர்கள் மனமுவந்து ஒப்புதல் அளித்துள்ள இப்பணிகள் விரைவில் நிறைவுறும். இதன் அடுத்தகட்டமாக, இதே நிலத்திரட்டு முறையைப் பின்பற்றி, கிழக்குக் கடற்கரைச் சாலையை ஒட்டி, மாமல்லபுரம் அருகே புதிய துணை நகரம் ஒன்று அமைக்கப்படும். இச்சாலையும் நான்குவழிச் சாலையாகத் தரம் உயர்த்தப்படுவதால், சென்னைப் பெருநகரப் பகுதியின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு அச்சாணியாக இத்திட்டம் விளங்கும்.

❖ பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத, தரமான, பாதுகாப்பான சாலை இணைப்புகளை மாநிலம் முழுவதும் அமைத்திட இந்த அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 5,582 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,263 புதிய பணிகளை மேற்கொள்ள அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும், 560 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 131 தரைப்பாலங்களை உயர்மட்ட மேம்பாலங்களாக மாற்றுதல், 142 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புறவழிச்சாலைகள் அமைத்தல், 327 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எட்டு இரயில்வே மேம்பாலங்கள் அமைக்கும் புதிய பணிகள் போன்றவை நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

❖ வாழ்வாதார மேம்பாடு, திறன் வளர்ச்சி, சுயசார்பு வாயிலாக, மகளிரின் முன்னேற்றத்திற்கு முக்கிய காரணியாக:ச சுயஉதவிக் குழுக்கள் திகழ்கின்றன. இவ்வாண்டில், 3.97 இலட்சம் மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு, 42,845 புதிய சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிதியாண்டில், இதுவரை 3.07 இலட்சம் சுயஉதவிக் குழுக்களுக்கு 16,949 கோடி ரூபாய் வங்கிக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. சுயஉதவிக் குழுக்களால் தயாரிக்கப்படும் பொருட்களின் தரத்தை மேம்படுத்தி, மின் வணிகத் தளங்களின் வாயிலாக விற்பனை வாய்ப்புகளை உயர்த்திட, 'மதி' என்ற முத்திரை (brand) அரசால் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

❖ சாதாரண நகரப் பேருந்துகளில் 'மகளிர் அனைவருக்கும் கட்டணமில்லாப் பயணம்' என்ற புரட்சிகரமான திட்டத்தின் மூலம், மாநிலத்தில் பெண்களிடையே பொருளாதார மேம்பாடு மட்டுமன்றிச் சமூக எழுச்சியும் ஏற்பட்டுள்ளது. நாள்தோறும் 36 இலட்சம் பயணங்கள் செய்து மகளிர் பயனடைந்து வரும் இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு பெண்ணும் சராசரியாக மாதத்திற்கு 888 ரூபாய் அளவிற்குச் சேமிக்கின்றனர் என்று மாநில திட்டக்குழுவின் ஆய்வு தெரிவித்துள்ளது.

❖ தற்போதுள்ள பழைய பேருந்துகளை மாற்றி சுற்றுச்சூழலுக்கு உகந்த புதிய பசுமைப் பேருந்துகளை அறிமுகப்படுத்த அரசு உறுதிபூண்டுள்ளது. 2,213 BS-VI பேருந்துகள் மற்றும் 500 மின்சாரப் பேருந்துகள் KfW நிதியிலும், 1,000 BS-VI பேருந்துகள் மாநில அரசு நிதியுதவியிலும் கொள்முதல் செய்யப்பட்டு, இவ்வாண்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

❖ சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதற்கட்டத்தில் அமைக்கப்பட்ட 54 கி.மீ. நீளமுள்ள 2 வழித்தடங்களில், உலகத்தரம் வாய்ந்த சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. கோவிட் பெருந்தொற்றிற்குப் பின், நாள்தோறும் பயணிக்கும் நபர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. 2022 ஆம் ஆண்டில் ஜூன் மாதத்தில் நாள் ஒன்றிற்கு 1.76 இலட்சம் பயணிகள் என்று இருந்த எண்ணிக்கை, டிசம்பர் மாதத்தில் 2.07 இலட்சமாக உயர்ந்துள்ளது. 63,246 கோடி ரூபாய் மதிப்பில் 118.9 கி.மீ. நீளமுள்ள சென்னை மெட்ரோ இரயிலின் இரண்டாம் கட்டப் பணிகள் துரிதமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

❖ மாநிலத்தில் குவிந்துகிடக்கும் சுற்றுலா வளர்ச்சிக்கான வாய்ப்புகளைப் பயன்படுத்தி, சுற்றுலா சார்ந்த பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஓர் ஒருங்கிணைந்த அணுகுமுறையை அரசு பின்பற்றுகிறது. சுற்றுலாப் பயணிகளுக்குத் தனித்துவமான அனுபவங்களை ஏற்படுத்தவும், உள்ளூர் மக்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்களில் சாகசச் சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

❖ ஒப்பாரும் மிக்காரும் இல்லாத் தமிழ் மாமன்னர் இராசராச சோழனின் அரும்பெருமைகளைப் போற்றும் நோக்குடன் அவரது பிறந்தநாளான 'சதயவிழா' இனி அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என அரசு அறிவித்துள்ளது. மேலும், சோழப் பேரரசின் புகழைக் காட்சிப்படுத்தும் வகையில் இராசராச சோழனின் மணிமண்டபம் புதுப்பிக்கப்பட்டு மெருகேற்றப்படும் எனவும், உலகாண்ட தமிழ் மாமன்னர் இராசேந்திர சோழனின் பிறந்தநாளான ஆடி திருவாதிரை இனி அரசு விழாவாகக் கொண்டாடப்படும் எனவும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

❖ மாநிலத்தில் உள்ள தொல்பொருள் மற்றும் வரலாற்று நினைவுச் சின்னங்களின் செழுமையான மரபினைப் பாதுகாப்பதற்கானத் தீவிர நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கீழடி அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்களைக் காட்சிப்படுத்துவதற்காக அமைக்கப்படும் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன. இதுபோன்றே, ஆதிச்சநல்லூர், கொற்கை, சிவகளை ஆகிய பகுதிகளில் அகழ்ந்தெடுக்கப்பட்ட தொல்பொருட்களைக் காட்சிப்படுத்துவதற்கான 'பொருநை அருங்காட்சியகம்' அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

❖ இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து கோவில் நிலங்களையும், உடைமைகளையும் பாதுகாப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது. இதுவரையில் 3,657 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலங்களும், சொத்துக்களும் மீட்டெடுக்கப்பட்டுள்ளன. மகத்தான இப்பணிகளுக்காகத் தமிழ்நாடு அரசிற்கு என் மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு, 158 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 34 கோவில்களின் புதிய கட்டுமானப் பணிகளை அரசு தொடங்கியுள்ளது. மேலும், திருச்செந்தூர் திருக்கோவில் பகுதியில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெருந்திட்ட வளாகப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

❖ அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற கொள்கையுடன் செயல்படும் இந்த அரசு, சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ள அடித்தட்டு மக்கள் அனைவரும் சமூக, பொருளாதார, கல்வி மேம்பாட்டினை அடைவதற்காகப் பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கான புதிய விடுதிக் கட்டடங்கள், திறன்மிகு வகுப்பறைகள் அமைத்தல், உண்டு உறைவிடப் பள்ளிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் 425.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

❖மாநிலம் முழுவதும் வீடின்றி வசித்துவரும் அழிவின் விளிம்பில் உள்ள பழங்குடியினருக்கு 1,537 வீடுகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. வனங்களில் வசிக்கும் பழங்குடியின மக்களின் உரிமைகளை உறுதிசெய்யும் பொருட்டு, கடந்த ஒன்றரை ஆண்டுகளில் வன உரிமைச் சட்டம் 2006இன் கீழ் 2,293 பழங்குடியினக் குடும்பங்களுக்கு வன உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

❖ தமிழ்நாட்டில் சமூகநீதியை நிலைநாட்டி, சமூகத்தில் பின்தங்கியுள்ள மக்களின் முன்னேற்றத்தினை உறுதி செய்யும் வகையில், சிறப்பான இட ஒதுக்கீட்டு முறையை தமிழ்நாடு அரசு பின்பற்றி வருகிறது. பொருளாதாரத்தில் பின்தங்கியப் பிரிவினருக்கு 10 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்குவது சமூகநீதிக் கொள்கைக்கு எதிராக உள்ளதால், தற்போது நமது மாநிலத்தில் பின்பற்றப்படும் இடஒதுக்கீட்டு முறையே தொடரும் என்ற கொள்கைக் கோட்பாட்டில் இந்த அரசு உறுதியாக உள்ளது.

❖ சமூகத்தில் பின்தங்கியுள்ளோரின் பொருளாதார மேம்பாட்டை உறுதி செய்ய, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின் மூலம், 210 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

❖ கண்ணை இமை காப்பது போல் சிறுபான்மையினரின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. ஹஜ் மற்றும் ஜெருசலேமிற்கு புனிதப் பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்கு மானியம் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

❖ சமூகத்தில் நலிவடைந்த பிரிவினரின் நிலையை மேம்படுத்துவதை இந்த அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது. மாற்றுத்திறனாளிகள் பெறும் மாதாந்திர ஓய்வூதியத்தை 1,000 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாகவும், தங்களைத் தாங்களே பராமரித்துக்கொள்ள இயலாத மாற்றுத்திறனாளிகளுக்குப் பராமரிப்பு உதவித் தொகையை 1,500 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாகவும் உயர்த்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக, ஆண்டொன்றிற்கு 388 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். இதனால் மாநிலம் முழுவதும் உள்ள 6.45 இலட்சம் மாற்றுத்திறனாளிகள் பயன்பெறுவார்கள்.

❖ அரசுப் பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, சுமார் 16 இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறும் வகையில், இந்த அரசு 01.01.2023 முதல் அகவிலைப்படியை 34 சதவீதத்திலிருந்து 38 சதவீதமாக உயர்த்தி வழங்கியுள்ளது. இதனால் ஆண்டொன்றிற்கு அரசிற்கு 2,359 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். ஓய்வூதியர்களுக்கான வாழ்நாள் சான்றிதழ் வழங்கும் முறை மின்னணு முறையில் எளிமையாக்கப்பட்டு, ஓய்வூதியதாரர்கள் இருக்கும் இடத்திலிருந்தே இச்சேவையைப் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த அரசு பதவியேற்ற பின் ...

★ 2021ஆம் ஆண்டில், நம் மாநிலத்தில் மழைவெள்ளத்தால் சேதம் ஏற்பட்டு, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. அந்தப் பேரிடரை எதிர்கொண்ட அனுபவத்தின் அடிப்படையில், சமீபத்தில் ஏற்பட்ட புயலையும், கனமழையையும் இந்த அரசு மிகச் சிறப்பாகக் கையாண்டது.

★ கோவிட் பெருந்தொற்று உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் மாநிலத்தின் பொருளாதாரம் தேக்க நிலையை அடைந்திருந்தது. கடந்த ஒன்றரை ஆண்டுகளில், இந்த அரசு மேற்கொண்ட பொருளாதார சீர்திருத்தங்களாலும், நலத்திட்டங்களாலும், வளர்ச்சிப் பணிகளாலும், இந்நிலை மாறி, தற்போது தமிழ்நாடு வளர்ச்சிப் பாதையில் முன்னேறிச் செல்கிறது.

★ சட்டம் ஒழுங்கைச் சிறப்பாக நிலைநாட்டுவதால், தமிழ்நாடு தொடர்ந்து அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. இதனால், பன்னாட்டு முதலீடுகளை ஈர்த்து, அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

❖ சமூகநீதி, சுயமரியாதை, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, சமத்துவம், பெண்ணுரிமை, மதநல்லிணக்கம், பல்லுயிர் ஓம்புதல் ஆகிய கொள்கைகள் இவ்வரசின் அடித்தளமாக அமைந்துள்ளன. தந்தைப் பெரியார், அண்ணல் அம்பேத்கர், பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்ற மாபெரும் தலைவர்களின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பின்பற்றி, பார்போற்றும் திராவிட மாடல் ஆட்சியை இந்த அரசு வழங்கி வருகின்றது.

❖ தமிழர்களின் நலன், தமிழ்நாட்டின் வளம் ஆகியவற்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு இவ்வரசு அயராது உழைத்து வருகின்றது. எத்தனை இடர்பாடுகள் இந்த இலட்சியப் பாதையில் எதிர்நின்றாலும், அவற்றையெல்லாம் கடந்து தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் வெற்றிகரமாக இந்த அரசு தொடர்ந்து வழிநடத்திச் செல்கிறது. இவ்வாண்டில், மக்கள் நலனுக்காகவும், மாநிலத்தின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்காகவும், உரிய சட்டங்களை இயற்றி, சட்டமன்ற விவாதங்களில் தங்களது அரிய கருத்துகளை வழங்கி, இந்த அரசின் செயல்பாட்டிற்கு நீங்கள் அனைவரும் உறுதுணையாக இருப்பீர்கள் என நம்புகிறேன்.

❖ அனைவருக்கும் மீண்டும் எனது புத்தாண்டு, பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகாகவி பாரதியாரின் வைர வரிகளுடன் எனது உரையை நிறைவு செய்கிறேன்.

வாழிய செந்தமிழ்!

வாழ்க நற்றமிழர்!

வாழிய பாரத மணித்திரு நாடு!

தலைநிமிர்ந்த தமிழ்நாடு தனித்துவமான பொன்நாடு...

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்,
மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின்
உரை மீதான விவாதத்திற்கு
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
ஆற்றிய பதிலுரை - 13.01.2023

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடல்கண்டு மலைகண்டு பயன் கொண்ட தமிழ்நாடு வாழ்க!

களங்கண்டு கலை கண்டு கவின் கொண்ட தமிழ்நாடு வாழ்க!

உடல்கொண்டு உரங்கொண்டு உயர்வாண்ட தமிழ்நாடு வாழ்க!

உளமாண்டு உலகாண்டு புகழாண்ட தமிழ்நாடு வாழ்க! வாழ்கவே! என்று தாய்த் தமிழ்நாட்டை வாழ்த்தி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக்களையும், தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் வாழ்த்துக்களையும் கூறி, எனது உரையை நான் தொடங்குகிறேன்.

தாய்த் தமிழ்நாட்டைக் காக்க ஒப்படைத்துக் கொண்டு தூங்காமை, கல்வி, துணிவுடமை ஆகிய மூன்றையும் முறைமேற்கொண்டு முறைசெய்து வெல்லும் திராவிட மாடல் ஆட்சியானது நடைபெற்று வரும் வேளையில் மகிழ்ச்சியான மனநிலையில் இந்த மாமன்றத்தில் நான் கம்பீரமாக நிற்கிறேன்.

சமூகநீதி, சுயமரியாதை, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, சமத்துவம், பெண்ணுரிமை, மதநல்லிணக்கம், பல்லுயிர் ஓம்புதல் ஆகிய கொள்கைகளை உள்ளடக்கிய திராவிட மாடல் ஆட்சியானது வீரத்துடனும், விவேகத்துடனும் நடைபெற்று வருகிறது என்பதைத் தமிழ்நாடு மட்டுமல்ல; இந்தியத் துணைக்கண்டமே இப்போது உணர்ந்துவிட்டது.

பகுத்தறிவுப் பகலவன் தந்தைப் பெரியார், சமத்துவப் போராளி அண்ணல் அம்பேத்கர், பெருந்தலைவர் காமராசர், அறிஞர்களுக்கெல்லாம் பேரறிஞர் அண்ணா, எங்களை எல்லாம் ஆளாக்கி அழகு பார்த்த நவீனத் தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர், இவர்களது கொள்கைகளையும், இலட்சியங்களையும்

கொண்டு செலுத்துவதற்காக உருவாக்கப்பட்டதே இந்தத் திராவிட மாடல் ஆட்சி!

இருபது மாதங்களைக் கடந்திருக்கிறது கழக அரசு. அதற்குள் இமாலயச் சாதனைகளைச் செய்திருக்கிறோம். நாம் கடந்துள்ள காலம் குறைவுதான். ஆனால் ஆற்றியுள்ள பணிகள் அதிகம். அதேநேரத்தில், இந்த இருபது மாத காலம் போனதே தெரியவில்லை. இலக்கினை அடைவதை நோக்கமாகக் கொண்டு நாம் செயல்பட்டோம். மக்களின் நலன் மட்டுமே நம்முடைய சிந்தையில் நின்றது: அதுவே மக்களின் மனதை வென்றது.

சமூகநீதி - சமத்துவம் - சுயமரியாதை - மொழிப்பற்று - இன உரிமை - மாநிலச் சுயாட்சி ஆகியதத்துவங்களின் அடித்தளத்தில் எழுப்பப்பட்ட பலம் வாய்ந்த இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். அரசியல் களத்தில் எந்த நோக்கத்தை விதைத்ததோ, அதே நோக்கம் கொண்ட மக்களாட்சியை எந்தவித சமரசத்துக்கும் இடமின்றிக் கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக நாங்கள் நடத்தி வருகிறோம்.

தமிழ்நாட்டின் மேன்மைக்கும் வளர்ச்சிக்கும் செழிப்புக்கும் உயர்வுக்கும் வழிவகுக்கும் 'திராவிட மாடல்' கொள்கையை உருவாக்கி அதன் தடத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி செயல்பட்டு வருகிறது. செயல்பட்டு வருகிறது என்பதை விட - திராவிட மாடல் ஆட்சியானது வெற்றி பெற்று வருகிறது என்பதுதான் சரியானதாகும்.

'எல்லார்க்கும் எல்லாம்' என்ற அடிப்படையிலேயே தமிழ்நாட்டினுடைய வளர்ச்சியானது அமைய வேண்டும் என்று நாம் திட்டமிட்டோம். தொழில் வளர்ச்சி - சமூக மாற்றம் - கல்வி மேம்பாடு ஆகிய அனைத்தும் ஒரே நேரத்தில் நடக்க வேண்டும்; அனைவருக்கும் பயனளிக்க வேண்டும் என்று விரும்பினோம். வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சியாக மட்டுமல்ல, சமூக வளர்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்று திட்டமிட்டோம்.

பொருளாதாரம் - கல்வி - சமூகம் - சிந்தனை - செயல்பாடு ஆகிய ஐந்தும் ஒருசேர வளர வேண்டும். அதுதான் தந்தைப் பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் காணவிரும்பிய வளர்ச்சி. அதுதான் திராவிட மாடல் வளர்ச்சி! அதுதான் தமிழ்நாடு காணும் தனித்துவமான வளர்ச்சி. அத்தகைய திராவிட மாடல் சிகரத்தை நோக்கிய பயணமானது ஒரு சரித்திரப் பயணமாக - ஏறுமுகத்தில் சென்று கொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வதில் நான் பெருமை அடைகிறேன்.

கடந்த 9ஆம் தேதியன்று மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்தில் 2023-2024ஆம் ஆண்டின் தொடக்கத்துக்கான தொடக்கவுரையை ஆற்றினார்கள். தமிழ்நாடு அரசின் பன்முகக் கூறுகளை விளக்கியும், தமிழ்நாடு அரசு எந்த வகையில் எல்லாம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதைப் பாராட்டியும், எதிர்காலத்தில் செயல்படுத்த இருக்கக்கூடிய முன்னேற்ற நடவடிக்கைகள் குறித்துச் சுருக்கமாக அறிவித்தும் தனது உரையை இந்த மாமன்றத்துக்கு ஆற்றினார்கள்.

அன்றையதினம் நிகழ்ந்தவற்றை மீண்டும் பேசி அரசியலாக்க நான் விரும்பவில்லை. அதே நேரத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியின் மாண்பைக் காக்கவும், மக்கள் எங்களுக்கு வழங்கிய ஆட்சியின் வலிமையை உணர்த்தவும், நூற்றாண்டைக் கடந்த இந்தச் சட்டமன்றத்தின் விழுமியங்களைப் போற்றவும் நான் என்னுடைய சக்தியை மீறியும் செயல்படுவேன் என்பதை இந்த மாமன்றமும், என்னை இச்சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பிய தமிழ் பெருமக்களும் நன்கு அறிவார்கள்.

ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை, ஆணைகள் இட்டே யார் தடுத்தாலும்,அலைகடல் ஓய்வதில்லை,செந்தமிழே நீ பகைவென்று முடிசூடிவா, மயிலாட வான்கோழி தடை செய்வதோ, மாங்குயில் பாட கோட்டான்கள் குறை சொல்வதோ? முயர்கூட்டம் சிங்கத்தின் எதிர்நிற்பதோ, அதன் முறையற்ற செயலை நாம் வரவேற்பதோ? உயிருக்கு நிகர் இந்த நாடு அல்லவோ, அதன் உரிமைக்கு உரியவர்கள் நாம் அல்லவோ? என்ற திராவிட இயக்கக் கவிஞர்

முத்துக்கூத்தன் அவர்களின் கவிதையை நாம் என்றும் நினைவில் கொண்டு, பெருமித நடைபோடுவோம்.

தமிழ்காக்க, தமிழர் நலன் காக்க, தமிழ்நாட்டின் மானம் காக்க என்றும் உழைக்கும் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் மகன் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்பதை மெய்ப்பித்துக் காட்டும் நாளாக, அன்றைய தினம் அமைந்திருந்ததேத் தவிர வேறல்ல.

ஆண்டின் முதல் கூட்டத் தொடரில் இம்மாமன்றத்துக்கு வருகை தந்து உரையாற்றிய மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு இந்த அரசின் சார்பிலான நன்றியை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளில் நாட்காட்டியில் நகரும் ஒவ்வொரு நாளும் தமிழ்நாட்டுக்கு நன்மை தரும் நாளாக உயர்ந்து வருகிறது என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் அறிவார்கள். அதற்காக அவர்கள் பாராட்டி வருகிறார்கள். 'கடிகாரம் ஓடும் முன் ஓடு' என்று புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எழுதினார். அதேபோலத்தான் நாங்கள் வேகமாகவும் - அதே நேரத்தில் விவேகமாகவும் செயல்பட்டு வருகிறோம். 'நான்' என்று சொல்லும் போது என்னை மட்டுமல்ல; அமைச்சரவையை மட்டுமல்ல; நமது சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் உள்ளடக்கி ஒட்டுமொத்தமாகச் சேர்த்துத்தான் நான் சொல்கிறேன்.

ஆட்சிப் பொறுப்பேற்றபின் மேற்கொண்ட எனது பயணங்கள் குறித்துப் பின்னோக்கிப் பார்க்கும் போது எனக்கே மலைப்பாக இருக்கிறது. கடந்த ஓராண்டுக் காலத்தில் மட்டும் 655 நிகழ்ச்சிகளில் நான் பங்கெடுத்துள்ளேன். ஓராண்டு என்பது 365 நாட்களாக இருந்தாலும் - ஒரு நாளைக்கு இரண்டு நிகழ்ச்சிகள் கலந்து கொண்ட அளவுக்கு நான் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துள்ளேன். அதிலே 551 நிகழ்ச்சிகள் அரசு நிகழ்ச்சிகள். இடையில் கொரோனா தாக்கப்பட்டுச் சில நாட்கள் ஓய்வெடுக்க வேண்டியதாக இருந்தது. கால் வலி மற்றும் முதுகு வலி காரணமாகச் சில நாட்கள் மருத்துவர்களின் ஆலோசனைப்படி ஓய்வெடுத்தேன். இத்தகைய இடர்பாடுகள் இல்லாமல் இருந்தால் இன்னும் 50 நிகழ்ச்சிகள் அதிகம் ஆகியிருக்கும்.

மொத்தமாகச் சொல்வதாக இருந்தால் கடந்த ஆண்டில் மட்டும் தமிழ்நாட்டில் 9 ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்திற்கும் மேல் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, மக்களைச் சந்தித்துவிட்டு வந்திருக்கிறேன். நாள்தோறும் உழைப்பதாகச் சொல்வார்கள் - இல்லை இல்லை நொடிக்கு நொடி உழைத்து வருகிறேன். என்னை வருத்திக் கொண்டு நான் அலையவில்லை. யாரும் பாராட்ட வேண்டும் என்பதற்காகவும் நான் ஓயாத அலைச்சல்களை உருவாக்கிக் கொள்ளவில்லை. நான் என்னுடைய இயல்பில்தான் இருக்கிறேன். இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. தலைவர் கலைஞர் எங்களுக்கு இப்படித்தான் உழைக்கக் கற்றுக்கொடுத்தார்கள். அவரிடம் கற்ற பாடங்கள் என்னை இப்படி உழைக்கத் தூண்டுகிறது.

என்னுடைய அறையில் 'டேஷ் போர்டு' வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு திட்டமும் ஒவ்வொரு நாளும் எந்தளவுக்கு முன்னேறிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதைத் தொடர்ந்து நான் கண்காணித்து வருகிறேன். தீட்டிய திட்டங்கள் அனைத்தும் எந்தளவுக்கு ஒவ்வொரு நாளும் நகர்ந்து கொண்டிருப்பதை அறிவதன் மூலமாக அரசாங்கத்தை முடுக்கிவிட்டுக் கொண்டு இருக்கிறேன். இரவுத் தூக்க நேரம் மட்டுமே எனது ஓய்வு நேரமாக இருக்கிறது. பொறுப்பு கூடக்கூட ஓய்வு என்பது குறைந்துவிடும். 'மரம் ஓய்வை விரும்பினாலும் காற்று விடுவதாக இல்லை' என்றார் புரட்சியாளர் மாவோ. அப்படித்தான் பணிகள் அதிகம் வந்து, என்னைச் செயல்பட வைத்துக்கொண்டே இருக்கின்றன.

9 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் சுற்றி வந்து மக்களைச் சந்தித்தேன், விழாக்களில் கலந்து கொண்டேன் என்றால் அதன் மூலமாகப் பயனடைந்த மக்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? மக்களுக்கு நேரடியாக வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகள் மூலமாக ஒரு கோடியே 3 இலட்சத்திற்கும் அதிகமான பேர் பயனடைந்துள்ளார்கள். அதாவது ஒரு கோடிப் பேருக்குத் தனிப்பட்ட முறையில் உதவிகள் செய்து கொடுத்துள்ளது தமிழ்நாடு அரசு. தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டதன் மூலமாகப் பயனடைந்தவர்கள் இவர்கள். மொத்தமுள்ள மாவட்டங்களில் 28 மாவட்டங்களில் நலத்திட்ட விழாக்கள் நடந்துள்ளன. முடிவுற்ற மொத்தப் பணிகள் 7 ஆயிரத்து 430; இதன் மொத்த மதிப்பு 3 ஆயிரத்து 50 கோடி ரூபாய் ஆகும். இதுவரை அடிக்கல் நாட்டி, தொடங்கி வைக்கப்பட்ட மொத்தப் பணிகள் 13 ஆயிரத்து 428; இதன் மொத்த மதிப்பு 4 ஆயிரத்து 744 கோடி ரூபாய் ஆகும். இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து வெளியிடப்பட்ட

அறிவிப்புகளின்கீழ், தமிழ்நாடு முழுவதும் இதுவரை அனைத்து அரசுத் துறைகளின் சார்பிலும் 2 இலட்சத்து 57 ஆயிரத்து 850 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் மூலமாக அரசு எந்தளவுக்கு வேகத்துடன் செயல்படுகிறது என்பதை அறியலாம்.

ஏதோ முதலமைச்சர் செயல்படுகிறார்; அமைச்சர்கள் செயல்படுகிறார்கள்; தலைமைச் செயலகம் செயல்படுகிறது என்பதாக இல்லாமல் ஒட்டுமொத்தத் தமிழ்நாடே செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. பத்து ஆண்டுகளாகத் தேங்கிக் கிடந்த தமிழ்நாட்டை முன்னோக்கி ஓட வைத்திருக்கிறோம். தேய்ந்து கிடந்த தமிழ்நாட்டை வளப்படுத்தி வருகிறோம்.

இந்த அரசு பதவியேற்றதிலிருந்து பல்வேறு அறிவிப்புகளைச் செய்துள்ளது. அதாவது, ஆளுநர் உரை அறிவிப்புகள் - 75; என்னால் சட்டமன்றப் பேரவை விதி எண். 110இன்கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் - 67; மாவட்ட விழாக்களில் செய்த அறிவிப்புகள் - 88; மாவட்ட ஆட்சியர்கள் மாநாடு அறிவிப்புகள் - 5; செய்தி வெளியீடு அறிவிப்புகள் - 154; நிதிநிலை அறிக்கை - 254; வேளாண்மை நிதிநிலை அறிக்கை - 237; மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் மானியக் கோரிக்கைகளின்போது வெளியிடப்பட்ட அறிவிப்புகள் - 2,424; இதர அறிவிப்புகள் - 42 என இதுவரை மொத்தம் 3,346 அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் 86 விழுக்காடு அறிவிப்புகள் செயல்பாட்டுக்கு வந்துள்ளன. அதாவது 2,892 அறிவிப்புகளுக்கு அரசாணை / அறிவுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் 852 அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 2,040 பணிகள் நடைபெற்று வருகின்றன. 422 அறிவிப்புகளுக்கு அரசாணை வெளியிட தொடர்புடைய துறைகளால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 32 அறிவிப்புகள் குறித்த கருத்துருக்கள் ஒன்றிய அரசினுடைய பரிசீலனையில் உள்ளன. கடந்த ஒன்றரை ஆண்டில் எப்படி வளர்ச்சி அடைந்தோம் என்றால், சொன்னதைச் செய்தோம் அதனால் வளர்ந்துள்ளோம். அதுதான் உண்மை.

தமிழ்நாட்டின் வளர்ச்சி குறித்து ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள புள்ளிவிபரம் மிக விளக்கமாகச் சொல்லி இருக்கிறது. பிரதமரின் பொருளாதார ஆலோசனைக்குழு அண்மையில் மாநிலங்களினுடைய வளர்ச்சி நிலை குறித்து ஆய்வு செய்து வெளியிட்டுள்ள சமூக வளர்ச்சிக் குறியீட்டு அறிக்கையில் (Social Progress Index) 63.3 புள்ளிகளைப் பெற்று, இந்தியாவின் பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது. இப்படிச் சொல்வது நானல்ல, தமிழ்நாடு அரசு அல்ல; ஒன்றிய அரசுதான் இதனைச் சொல்லி இருக்கிறது. இந்தியாவில் இருக்கிற பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடத்துக்கு வந்திருக்கிறது என்றால் அது சாதாரணமானது அல்ல. அதுதான் அனைவரையும் உள்ளடக்கிய திராவிட மாடல் தத்துவத்தினுடைய ஊட்டமும், வளமும், வளர்ச்சித் திறனும்! நமது நோக்கம் ஒன்று தான், மக்கள் மனங்களின் மகிழ்ச்சி. இது ஒன்று தான் திராவிட மாடல் ஆட்சியின் முதலும் முடிவுமான ஒற்றை இலக்கு.

காலைச் சிற்றுண்டி சாப்பிடும் குழந்தைகள் முகத்தில் கட்டணமில்லாப் பேருந்துப் பயணம் செய்யும் மகளிரின் முகத்தில் - நித்தமும் காலையில் உதயசூரியன் உதிக்கிறது அல்லவா? இதுதான் இந்த ஆட்சியினுடைய மாபெரும் சாதனையாகும்.

கடந்த பத்து ஆண்டுக் கால அ.தி.மு.க. ஆட்சியில் வழங்கப்பட்ட இலவச விவசாய மின் இணைப்புகள் 2.20 இலட்சம் மட்டுமே. ஆனால், விவசாயிகளின் நலன் காக்கும் இந்த அரசு 15 மாத காலத்தில் வழங்கிய இணைப்புகள் 1 இலட்சத்து 50 ஆயிரம். பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளை, கல்லூரியில் படிக்கும் இளைஞர்களை மட்டுமல்ல; படிக்கவராமல் இடையில் நின்றுவிடக் கூடியவர்களையும் பள்ளி, கல்லூரிகளுக்குள் அழைத்து வருகிறோம்.

சில வாரங்களுக்கு முன்னால் கோவையைச் சேர்ந்த தீபாராணி என்ற ஒரு பெண், 'முதலமைச்சரின் முகவரி' திட்டத்தில் உள்ள சி.எம். ஹெல்ப் லைன் தொலைபேசி எண்ணில் பேசி இருக்கிறார். பெரும்பாலும் தங்களது தேவைகளை, கோரிக்கைகளை, புகார்களைப் பதிவு செய்வதற்காகத்தான் அதிலே பலரும் பேசுவார்கள். 'உங்களுடைய புகார் என்னம்மா?' என்று கேட்டதும், 'புகார் சொல்வதற்காக நான் போன் செய்யவில்லை, சி.எம். போன் நம்பர் என்னிடம் இல்லை, சி.எம்.-க்கு நன்றி சொல்வதற்காக போன் செய்தேன்' என்று தீபாராணி என்ற அந்தப் பெண்மணி சொல்லி இருக்கிறார். அவர் சொல்கிறார் - "நான் காய்கறி வியாபாரம் செய்கிறேன். அதனால என் பிள்ளைக்குக் காலையில சாப்பாடு கொடுக்க முடியாது. என் மகன் ஐந்தாவது படிக்கிறான். காலை உணவுத் திட்டத்தின் மூலமாக அவனுக்கு தினமும் காலை உணவு கிடைத்து விடுகிறது, அது தரமானதாக இருக்கிறது. அதுனால சி.எம்.க்கு நன்றி சொல்லணும்" என்று அந்தத் தாய் நெகிழ்ச்சியோடு கூறியதுதான் எனக்குக் கிடைத்த பாராட்டு!

இதுபோன்று ஏராளமான எளிய மக்களின் பாராட்டின் காரணமாகத்தான், வாழ்த்துக்களின் காரணமாகத்தான் பெருமை அடைந்து இன்றைக்கு நாங்கள் ஊக்கத்தோடு பணியாற்றுகிறோம். 'சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்' - இது தலைவர் கலைஞரின் முழக்கம்! அதோடு, தமிழ் மக்களின் நலன் என்று வந்துவிட்டால், சொல்லாததையும் செய்வோம்: ஏன்? சொல்லாமலும் செய்வோம் - என்பதுதான் எனது முழக்கம்.

மாணவர்களுக்குக் காலைச் சிற்றுண்டி; விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புகள்; சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி; 234 தொகுதியிலும் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம்; நகர்ப்புறச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்; இல்லம் தேடிக் கல்வி; மக்களைத் தேடி மருத்துவம்; நான் முதல்வன்; புதுமைப் பெண்; இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48; தமிழ்நாடு ஒலிம்பிக் தங்கப்பதக்கத் தேடல்; சமத்துவபுரங்கள் புனரமைப்பு; உழவர் சந்தைகளுக்குப் புத்துயிர் அளித்தல்; அரசு முன் மாதிரிப்பள்ளிகள்; பத்திரிக்கையாளர் நலவாரியம்; எழுத்தாளர்களுக்குக் கனவு இல்லம்; இலக்கிய மாமணி விருது; கலைஞர் எழுதுகோல் விருது; பேராசிரியர் அன்பழகனார் பள்ளிகள் மேம்பாட்டுத் திட்டம்; பெருந்தலைவர் காமராசர் கல்லூரிகள் மேம்பாட்டுத் திட்டம்; முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு; பெரியார் - சமூகநீதி நாள் உறுதிமொழி; அம்பேத்கர் - சமத்துவநாள் உறுதிமொழி; வள்ளலார் பிறந்தநாள் தனிப்பெரும் கருணை நாள்; கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்; அன்னைத் தமிழில் அர்ச்சனை; அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர்; மாவட்டம் தோறும் புத்தகச் சந்தைகள்; கோவில் நிலங்கள் மீட்பு; 20 புதிய கலை அறிவியல் கல்லூரிகள்; புதிய ஐடிஐ நிறுவனங்கள்; காவல் ஆணையம்; கல்லூரிக் கனவு; வேலைவாய்ப்பு முகாம்கள்; தமிழ்ப் பரப்புரைக் கழகம்; தமிழ்நாடு பசுமை இயக்கம்; சிறு, குறு புத்தாக்க நிறுவனங்கள்; பொறுப்புமிக்க மாணவர்களை உருவாக்கும் சிற்பி திட்டம்; போதைப் பொருள் ஒழிப்பு; ஆன்லைன் ரம்மி ஒழிப்புச் சட்டம்; நீட் தேர்வு விலக்குச் சட்டம்; ஆதிதிராவிடர் பழங்குடியினர் ஆணையம்; வழக்கறிஞர் சேமநல நிதி 10 இலட்சமாக உயர்வு; நீதிமன்றங்கள் அமைக்க நிலம் ஒதுக்கீடு என்று ஏராளமானத் திட்டங்களை, சட்டங்களைக் கடந்த ஒன்றரை ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறோம். ஒரு சில திட்டங்களைத்தான் நான் சொல்லி இருக்கிறேன். மொத்த திட்டங்களையும் சொல்வதாக இருந்தால் இன்று முழுவதும் நான் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். இத்தகைய திட்டங்களின் மூலமாக ஒட்டுமொத்த தமிழ்நாடும் உயர்ந்திருப்பதை கண்ணுக்கு முன்னால் காண முடிகிறது.

கடந்த ஆண்டு ஆளுநர் உரைக்கு முன்னதாக 'இந்தியா டுடே' ஆங்கில வார இதழ் வெளியிட்ட கருத்துக் கணிப்பில் இந்தியாவினுடைய சிறந்த முதலமைச்சர் என்று எனக்குப் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன. தற்போது ஓராண்டு முடிந்த நிலையில் இந்த ஆண்டு ஆளுநர் உரைக்கு முன்னதாகச் சில வாரங்களுக்கு முன்னதாக அதே 'இந்தியா டுடே' ஆங்கில வார இதழ் வெளியிட்ட கருத்துக் கணிப்பில் இந்தியாவின் சிறந்த மாநிலம் தமிழ்நாடு என்ற தகுதியைப் பெற்றுள்ளோம். இந்தியாவில் ஒட்டுமொத்த மாநிலங்களின் செயல்பாட்டில் தமிழ்நாடு பல்வேறு பிரிவுகளில் முன்னேறி சாதனை பெற்றிருக்கிறது.

தமிழ்நாட்டின் வளர்ச்சி நம் கண்ணுக்கு முன்னால் நன்கு தெரிகிறது. தமிழகத்தில் புதிய தொழில்கள் ஏராளமாக இந்தப் பதினைந்து மாத காலத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் புதிய தொழில்கள் ஏராளமாக இந்த 20 மாத காலத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. இதுவரை 207 தொழில் நிறுவனங்கள் புதியதாகத் தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டுள்ளன. இதன்மூலம் 2 இலட்சத்து 23 ஆயிரத்து 209 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளதுடன், 3 இலட்சத்து 44 ஆயிரத்து 150 நபர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை கிடைப்பதற்கான வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட 207 தொழில் நிறுவனங்களில், இதுவரை 111 நிறுவனங்கள் தொடங்கப்பட்டு, 13 ஆயிரத்து 726 கோடி ரூபாய் முதலீடு வரப்பெற்றுள்ளது. 15 ஆயிரத்து 529 நபர்களுக்கு வேலை கிடைக்கப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டின் எல்லையைத் தாண்டிப் பல்வேறு மாநிலத்தில் இருந்தும் வந்து நிறுவனங்களைத் தொடங்குகிறார்கள். பல்வேறு நாடுகளில் இருந்தும்

தொழில் தொடங்க இங்கே வருகிறார்கள். அந்த வகையில் தொழில் அதிபர்களை - நிறுவனங்களை ஈர்க்கும் மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகிறது. தொழில் தொடங்க சிறந்த மாநிலங்களின் பட்டியலில் 14ஆவது இடத்தில் இருந்து 3ஆவது இடத்துக்கு முன்னேறி இருக்கிறது நம்முடைய தமிழ்நாடு.

அண்மையில் "ஸ்டார்ட் அப் இந்தியா" வெளியிட்டிருக்கக்கூடிய தரவரிசைப்பட்டியலிலும் பல படிகள் முன்னேறி அரசின் சிறந்த புத்தொழில் செயல்பாடுகளுக்காக "லீடர்" என்கிற அங்கீகாரத்தினைப் பெற்றுள்ளது தமிழ்நாடு. கடந்த 2021-2022ஆம் ஆண்டு இறுதியில் வெளியிடப்பட்ட தரவுகளின்படி ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்குத் தேவையான துணிகர முதலீடுகளைத் திரட்டுவதில் தமிழ்நாடு, பெங்களூரு, டெல்லி மற்றும் மும்பைக்கு அடுத்தபடியாக நான்காம் இடத்துக்கு முன்னேறி இருக்கிறது. தொழில் வளர்ச்சி என்பது மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியின் முகமாகவும் முகவரியாகவும் இருக்கிறது.

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மதிப்பில், தமிழ்நாட்டின் பங்கு 9.22 விழுக்காடு: இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 8.4 விழுக்காடு; ஜவுளித் துறை ஏற்றுமதியில் 19.4 விழுக்காடு; கார்கள் ஏற்றுமதியில் 32.5 விழுக்காடு; தோல் பொருட்கள் ஏற்றுமதியில் 33 விழுக்காடு! இவை அனைத்தும் இந்தியாவின் தலை சிறந்த மாநிலமாகத் தமிழ்நாட்டைத் தலை உயர்த்திச் சொல்கின்றன.

இந்தியா முழுமைக்குமான பணவீக்கம் இப்போது அதிகமாகி உள்ளது. ஆனால், தமிழ்நாட்டுக்கு மட்டுமான பணவீக்கம் குறைந்துள்ளது. இதுவும் சமீபத்தில் ஒன்றிய அரசு வெளியிட்ட புள்ளிவிவரம்தான். தமிழ்நாட்டு மக்களின் வாங்கும் திறன் அதிகமாகி இருக்கிறது. இதற்குக் காரணம், சமூக வளர்ச்சித் திட்டங்களின் மூலமாக அனைத்துப் பிரிவு மக்களும் வளர்ந்ததுதான். இதுகுறித்துப் பிரபல ஆங்கில நாளிதழ் பிசினஸ் லைன் எழுதிய கட்டுரையில், தமிழ்நாட்டில் உணவுப்பொருள் விலை குறைந்துள்ளது என்று குறிப்பிட்டது. எரிபொருள் விலை அதிகரித்தாலும், பெண்களுக்கு வழங்கிய இலவசப் பேருந்து வசதி அதனை ஈடுசெய்துவிட்டது என்று குறிப்பிட்டது. பெண்களின் போக்குவரத்துச் செலவு குறைந்ததைச் சுட்டிக்காட்டியது.

"கல்வி, சுகாதாரம், சமூக நலத் திட்டங்கள், வேலைவாய்ப்புகள், தொழில் வளர்ச்சி ஆகியவற்றில் சிறப்பான குறியீடுகளை அடையும் மாநிலமாகத் தமிழ்நாடு இருப்பதால் பணவீக்கம் குறைந்து வருகிறது" என்று எழுதியது. இதையே பிபிசி நிறுவனமும், இந்து ஆங்கில நாளிதழும் எழுதி இருக்கின்றன. இதே வேகத்தில் சென்றால் தமிழ்நாடு தன்னிகரற்ற மாநிலமாக உயர்ந்துவிடும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

மாநில அரசுகளின் வரி உரிமைகள், நிதி உரிமைகள் பலவும் ஏற்கெனவே பறிக்கப்பட்டுவிட்டன. நிதிக்காக ஒன்றிய அரசைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை கடந்த 8 ஆண்டுகளில் மேலும் அதிகமாகிவிட்டது. அனைத்து நிதிகளையும் கேட்டுக் கேட்டு வாங்க வேண்டிய நிலைமையே இருக்கிறது. கட்டணம் உயர்த்தினால்தான் சலுகைகள் வழங்கப்படும் என ஒன்றிய அரசு தொடர்ந்து வலியுறுத்துகிறது. இப்படிப்பட்ட நிலையிலும், தமிழ்நாட்டு மக்களுக்குப் பெரும் சுமையைத் தந்துவிடக்கூடாது என்று பெரும்பாலான சுமையை அரசே தாங்கிக்கொண்டு, சிறிய அளவிலான கட்டணச் சீர்திருத்தத்தை மேற்கொள்ள வேண்டியநிலையில் அந்த நடவடிக்கைகள் நடுத்தர வர்க்கத்தினரை பாதிக்காத வகையில் மேற்கொள்ளப்பட்டன. புதிய நிதி ஆதாரத்தைத் திரட்டுவதுதான் எங்கள் முன்னால் உள்ள மிக முக்கியமான, பெரிய சவாலாக இருக்கிறது என்பதையும் நான் மனம் திறந்து ஒப்புக்கொள்கிறேன்.

இத்தகைய சூழலிலும் அரசு ஊழியர்களுக்கு இந்த ஆட்சி அமைந்ததில் இருந்து பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசு ஊழியர்களின் நலன் காப்பதில் திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்தளவிற்குக் கண்ணும் கருத்துமாகச் செயல்படும் என்பதை அரசு ஊழியர்கள் நன்கு அறிவார்கள். அரசு நலத் திட்டங்களையும், பல்வேறு சேவைகளையும் மக்களிடம் சிறப்பாகச் கொண்டு சேர்க்கும்விதமாக

10 ஆயிரத்து 338 புதிய பணியிடங்கள் பல்வேறு துறைகளில் அரசால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

கோவிட் நோய்த்தொற்றால் பணியிடை மரணம் அடைந்த 409 முன்களப் பணியாளர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 98 கோடியே 45 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. இரண்டிற்கும் குறைவான குழந்தைகள் உள்ள மகளிர் அரசு ஊழியர்களுக்கான மகப்பேறு கால விடுப்பு 9 மாதங்களில் இருந்து 12 மாதங்களாக உயர்த்தப்படும் என்ற தேர்தல் அறிக்கையின் வாக்குறுதியை இந்த அரசு 01.07.2021 முதல் செயல்படுத்தியிருக்கிறது.

நாங்கள் மதத்துக்கு எதிரானவர்கள், நாத்திகர்கள் என்று சொல்லி, கோயில்களைச் சரிவர பராமரிக்கவில்லை என்று ஒரு கூட்டம் வீண் வதந்திகளைச் செய்திகளாகப் பரப்பிக் கொண்டிருக்கிறது. நான் பல முறை இதற்குப் பதில் சொல்லி இருக்கிறேன். நாங்கள் மதவாதத்துக்குத்தான் எதிரானவர்களேத் தவிர; மதத்துக்கு எதிரானவர்கள் அல்ல. மீண்டும் சொல்கிறேன்; நாங்கள் மதவாதத்துக்குதான் எதிரானவர்களேத் தவிர; மதத்துக்கு அல்ல. மக்களின் மதநம்பிக்கையைத் தங்களது சுயநலத்துக்கு பயன்படுத்திக் கொள்பவர்களுக்குத்தான் நாங்கள் எதிரிகளேத் தவிர; நம்பிக்கையாளர்களுக்கு எதிரிகள் அல்ல. அற நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலம்/ கட்டடம்/மனை ஆகியவற்றில் ஏற்பட்ட ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு 07.05.2021 முதல் 31.10.2022 வரையிலான காலத்தில் 3,150 ஏக்கர் நிலம் உள்ளிட்ட சுமார் 3,657 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கோயில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. உண்மையான பக்தர்கள் இதைப் போற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், போலியான கபடவேடதாரிகள் அரசுக்கு நல்ல பெயர் கிடைப்பதைப் பொறுத்துக்கொள்ள இயலாமல் தூற்றிக்கொண்டிருக்கிறார்கள். இப்படிச் சாதனைகள் செய்வது சிலருக்குப் பிடிக்கவில்லை. அனைத்துக் கோயில்களும் புத்தொளி பெறுவது சிலருக்குப் பிடிக்கவில்லை. அதனால்தான் அவர்கள் அவதூறு செய்துகொண்டிருக்கிறார்கள்.

சட்டம்-ஒழுங்கு குறித்து இம்மாமன்றத்தில் குற்றச்சாட்டுக்கள் வைக்கப்பட்டன. குற்றச்சாட்டுச் சொல்வதாக இருந்தால் அதனை ஆதாரத்தோடு சொல்ல வேண்டும். பொத்தாம் பொதுவாகச் சொல்லக் கூடாது. மதக் கலவரங்கள் நடந்துள்ளதா? சாதிக் கலவரங்கள் நடந்துள்ளதா? சொல்லுங்கள். பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடந்துள்ளதா? அப்பாவி உயிர்கள் பறிபோனதா? நெஞ்சை உலுக்கக்கூடிய பொள்ளாச்சி சம்பவமும், மர்மத்தின் உச்சமாய் விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய கொடநாடு கொலைகளும், கொள்ளைகளும் யாருடைய ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்தன என்பதை மக்களும் நன்கு உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். எங்காவது நடந்த குற்றச் சம்பவங்களில் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லையா? சொல்லுங்கள். காவல் துறை அவர்களது கடமையைச் சிறப்பாகச் செய்து வருகிறது. அதைச் சொல்லாமல், நடவடிக்கை எடுக்கப்பட்ட குற்றங்களைப் பேசுவதால் என்ன பயன்?

மாநிலத்தின் சட்டம் ஒழுங்கைத் திறம்பட நிலைநாட்டிட இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. அரசின் சீரிய நடவடிக்கைகளினால் தமிழ்நாடு தொடர்ந்து அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. அதன் காரணமாகவே, பல்வேறு நாடுகளிலிருந்து தொழில் முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டினைத் தேடி வந்து இங்கே முதலீடு செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மதவாத, இனவாத, தீவிரவாத சக்திகளை ஒருபோதும் இந்த அரசு வளரவிடாது. எந்தவொரு வன்முறையும் இல்லாத மாநிலமாகத் தமிழ்நாடு தொடர்ந்து திகழும்.

ஆளுநருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்த தி.மு.க.வைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. கம்பம் நா. இராமகிருஷ்ணன் அவர்களுக்கும், வழிமொழிந்த மாண்புமிகு உறுப்பினர் திரு.க.சுந்தர் அவர்களுக்கும் அதேபோல், எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய, அ.தி.மு.க. சார்பில் உரையாற்றிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பி. முனுசாமி அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்களுக்கும், காங்கிரஸ் கட்சியின் மாண்புமிகு சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. கு. செல்வ பெருந்தகை அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஜி. பிரின்ஸ் அவர்களுக்கும், பாட்டாளி மக்கள் கட்சியின் மாண்புமிகு சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. ஜி. கே. மணி அவர்களுக்கும், பாரதிய ஜனதா கட்சியின் மாண்புமிகு சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்களுக்கும், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாண்புமிகு சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. ம. சிந்தனைச் செல்வன் அவர்களுக்கும்,

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாண்புமிகு சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்களுக்கும், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு.மா.சின்னதுரை அவர்களுக்கும், ம.தி.மு.க.வைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சதன் திருமலைக்குமார் அவர்களுக்கும், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் மாண்புமிகு முனைவர் எம். எச். ஜவாஹிருல்லா அவர்களுக்கும், கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் மாண்புமிகு திரு. ஈ. ஆர். ஈஸ்வரன் அவர்களுக்கும், தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. தி. வேல்முருகன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் முனைவர் ஜவாஹிருல்லா அவர்கள் பள்ளிவாசல்களுக்கு வழங்கப்படும் Major Repair Grant (MRG) என்ற மானியத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்தார். கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ரூ.5 கோடியாக இருந்த இந்த மானியத் தொகையை கழக ஆட்சி பொறுப்பேற்றவுடன் சென்ற ஆண்டு, ரூ.6 கோடியாக உயர்த்தி வழங்கினோம். தற்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, பள்ளி வாசல்களுக்கு வழங்கப்படும் Major Repair Grant-MRG மானியத் தொகை வரும் நிதியாண்டு முதல் ரூ.10 கோடியாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் திரு.வேல்முருகன் அவர்கள் நேற்றுப் பேசும்போது, தமிழ்நாட்டில் வட மாநிலத்தவர்கள் குற்றச் சம்பங்களில் ஈடுபடுவது பற்றி விளக்கமாக, விரிவாக, உணர்ச்சியோடு குறிப்பிட்டுப் பேசினார். கடந்த இரண்டு ஆண்டுகளில், கொலை, கொள்ளை போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்ட வட மாநிலத்தவர்கள்மீது 85 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் கொலை வழக்குகள் 25: அவற்றில் 24 வழக்குகளில் 33 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இது தவிர, தமிழ்நாட்டில் தங்கிப் பணிபுரியும் வட மாநிலத் தொழிலாளர்கள் பற்றிய விவரங்களை ஒவ்வொரு காவல் நிலையமும் சேகரிக்கின்றது. அவர்களைத் தமிழ்நாட்டில் பணியில் அமர்த்தும் மனித வள நிறுவனங்களிடமிருந்து தகவல்கள் பெறப்படுகின்றன. வட மாநிலத்தவர்களில் குற்றச் செயல்களில் ஈடுபடுவோர், சந்தேகத்திற்குரியோரை அடையாளம் கண்டு, அந்தந்த மாநிலங்களின் போலீசாரிடமிருந்தும் அவர்களைப் பற்றிய தகவல்கள் மற்றும் உதவிகள் பெற்று மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் யார் என்றாலும், அவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதேபோல், வட மாநிலத்திலிருந்து இங்கு வந்து பணிபுரியும் தொழிலாளர்கள் சட்ட விரோத செயல்களில், குற்றச் செயல்களில் ஈடுபட்டாலும், கடும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், பாட்டாளி மக்கள் கட்சியின் மாண்புமிகு சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு.கோ.க.மணி அவர்கள் தமிழ்நாட்டில் தமிழ் கட்டாயப் பாடமாக்கப்பட வேண்டுமென்பது குறித்துத் தனது கருத்துக்களை இம்மாமன்றத்தில் எடுத்து வைத்தார். நேற்றைக்கு திரு. பொன்முடி அவர்களும் அதற்கு ஒரு விளக்கம் கொடுத்தார். அதேபோல, மாண்புமிகு அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களும் ஒரு விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார். எனவே, அதைப்பற்றி அதிகம் நான் பேச வேண்டியதில்லை. இருந்தாலும், சுருக்கமாகச் சொல்கிறேன். தமிழ்நாட்டில் தமிழ் மொழியைப் படிக்காமல் பள்ளிகளிலிருந்து தேர்ச்சி பெறமுடியாது என்ற நிலையைக் கொண்டுவருவதற்குத்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் “ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை தமிழ் மொழி கட்டாயப் பாடம் என்ற “தமிழ் மொழி கற்கும் சட்டத்தை” 13.06.2006 அன்று இயற்றி, தமிழ் மொழி வரலாற்றில் மிக முக்கியமான சாதனையை நிகழ்த்தினார்.

அந்த வகையில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் தமிழை முழுமையாகப் பயிற்றுவிப்பதை இந்த அரசு தொடர்ந்து கண்காணிக்கும். வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் மற்றும் வெளி மாநிலங்களில் வாழக்கூடிய தமிழர்களின் குழந்தைகள் தங்கள் தாய்மொழியான தமிழைக் கற்பதற்கு ஏதுவாகத் தமிழ்ப் பரப்புரைக் கழகம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் சார்பில் மாணவர்களுக்குப்

பயன்படக்கூடிய வகையில் பல்வேறு தலைப்புகளில் 108 புதிய புத்தகங்களையும், குழந்தைகளுக்கான இளந்தளிர் நூல்களையும் கொண்டுவந்துள்ளதோடு, தமிழ்நாட்டில் மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கான 5 முக்கிய பன்னாட்டு மருத்துவ நூல்களைத் தமிழ்நாடு பாடநூல் கழகம் கொண்டு வந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக அரசு, தனது தமிழ் காக்கும் பணிகளைத் தொடர்ந்து புதிய புதிய முன்னெடுப்புகளையெடுத்துச் சீரிய பணிகளை ஆற்றும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் பெருமிதத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தனைச் செல்வன் அவர்கள் பேசும்போது, ஒரு கருத்தைச் சொன்னார். 'நமக்கு நாமே' திட்டத்தின்கீழ் ஊராட்சிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளவாறு பேரூராட்சிகளிலும் பட்டியலின மக்கள் வசிக்கக்கூடிய பகுதிகளுக்கும் ஐந்தில் ஒரு பங்கு வழங்கப்படவேண்டும் என்ற ஒரு கோரிக்கையை வைத்தார். அதனையேற்று இந்தத் திட்டத்தின்கீழ் வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்த ஏதுவான பேரூராட்சிகளில் மட்டுமல்ல; நகராட்சிகளிலும் அவரது கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, கடந்த ஆட்சிக் காலத்தில் பல்வேறு காலக்கட்டங்களில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்களில் குறிப்பிட்டுள்ள பயனாளிகள் வீடுகட்டிக் குடியேற இயலாத வகையில் மேடு பள்ளங்களாகவும், சாலை வசதி இல்லாமலும் காணப்படுவதாகத் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறு பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட பட்டா இடங்களில் அவர்கள் வீடுகள் கட்டிக் குடியேறத்தக்க வகையில் இல்லாத இடங்களின் விவரங்களையெல்லாம் மாவட்டம் வாரியாகச் சேகரிக்கப்பட்டு, எந்தெந்த இடங்களில் சமன்செய்து மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள தகுதியானவை என்பதையறிந்து, உடனடியாக அதுகுறித்து நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும், இந்த அவைக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், பாரதிய ஜனதா கட்சித் தலைவர், திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள், 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டம் குறித்து, மனம் திறந்து பாராட்டினார். அதற்காக அவர்களுக்கு நான் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது அவர் அவையில் இல்லை. செய்தியைப் படிப்பார் என்று நினைக்கிறேன். அந்தத் திட்டத்தைப் பொறுத்தமட்டிலும், சில தகவல்களை இந்த அவையில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். பகிர்ந்துகொள்ளவும் விரும்புகிறேன்.

கடந்த 07.05.2022 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110இன்கீழ், 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின்கீழ் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்டது. அதன் தொடக்கமாக, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து அவரவர் தொகுதிகளில் நிறைவேற்றப்படாத பல முக்கிய கோரிக்கைகள், தத்தமது மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பிவைக்குமாறு நான் கேட்டுக்கொண்டிருந்தேன். இதுவரை, 233 சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து கோரிக்கைப் பட்டியல் வரப்பெற்றுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாகக் கவனிக்க வேண்டும், ஒன்று மட்டும்தான் வரப்பெறவில்லை. மொத்தம் 234 உறுப்பினர்களில், 233 சட்டமன்ற உறுப்பினர்கள் அளித்தனர். யார் அளிக்கவில்லை என்பதை நான் சொல்ல விரும்பவில்லை, கொடுக்காதவர்களுக்குத் தெரியும். இதுவரை, 233 சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து 1,483 பணிகளுக்கான கோரிக்கைப் பட்டியல் வரப்பெற்றுள்ளன. இவற்றையெல்லாம் வகைப்பாடு செய்து, துறைவாரியாக மதிப்பீடுகள் செய்யப்பட்டு, அவற்றில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய பணிகளைத் தேர்வு செய்யப்பட்டு, உயர்நிலைக் குழுவில் வைக்கப்பெற்று, வரும் நிதியாண்டில் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, அப்பணிகள் படிப்படியாக நிறைவேற்றித் தரப்படும் என்பதை இந்த அவையில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்று, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியபோது, அ.தி.மு.க. ஆட்சியைவிட, தி.மு.க. ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு மேலும் அதிகக்கடன் வாங்கியுள்ளதாக ஒரு குற்றச்சாட்டை முன்வைத்தார்கள். இது முற்றிலும் தவறான தகவல். அ.தி.மு.க. ஆட்சியின் கடைசி ஆண்டான 2020-2021ஆம் ஆண்டில், 83,275 கோடி ரூபாய் நிகரக் கடனாகப் பெறப்பட்டது. நன்றாகக் கவனிக்க வேண்டும். 2020-2021ஆம் ஆண்டில், அ.தி.மு.க. ஆட்சியின் கடைசி ஆண்டில், 83,275 கோடி ரூபாய் நிகரக் கடனாகப் பெறப்பட்டது. நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, கடும் நிதி நெருக்கடி இருந்தபோதிலும், பல்வேறு புதிய மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கின்றபோதிலும், என்னுடைய திறமையான நிருவாகத்தினால், 2021-2022ஆம் ஆண்டில் பெறப்பட்ட நிகரக் கடனை, 79,303 கோடி ரூபாயாகக் குறைத்திருக்கிறோம். அதாவது, முந்தைய ஆண்டைக் காட்டிலும், சுமார் 4,000 கோடி ரூபாய் அளவிற்குக்குறைவாகவேகடன் பெறப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, இந்த அரசால் அமைக்கப்பட்ட குழுக்கள் குறித்தும், அவர்கள் விமர்சனம் செய்துள்ளார்கள். மேலும், குழுக்களின் விவரங்களைத் தெரிவிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். நான் சில குழுக்களின் நடவடிக்கைகளைச் சொல்ல விரும்புகிறேன். அதற்குப் பதிலளிக்கக்கூடிய வகையில், இந்த அரசால் அமைக்கப்பெற்ற குழுக்கள் சிலவற்றை மட்டும் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

சென்னையில், வெள்ளத் தடுப்புக் குறித்து ஆராய்ந்து, அதற்கானத் தீர்வுகளை அரசிற்குப் பரிந்துரைக்க ஓய்வுபெற்ற ஆட்சிப் பணி அலுவலர், திரு. திருப்புகழ் அவர்களின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அதன் பலனைத் தற்போது மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அது குறித்து இந்த அவையிலும் பேசப்பட்டது. அதன் விவரத்திற்குள் நான் செல்ல விரும்பவில்லை.

கடந்தகால மழைக்காலங்களில் சென்னை மாநகரம் மழைநீரில் தத்தளித்ததுபோல் அல்லாமல், 2022ஆம் ஆண்டில் மழைநீர் தேங்குவது முற்றிலுமாகத் தடுக்கப்பட்டது. அதேபோன்று, தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த எனக்காக ஒரு பொருளாதார ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவானது, நம் மாநில 1 trillion dollar பொருளாதார இலக்கினை அடைவதற்கான வழிமுறைகளுக்கும், சீர்திருத்தங்களுக்கும் உரிய ஆலோசனைகளைத் தொடர்ந்து வழங்கிவருகிறது. அதன் அடிப்படையில்தான் பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அடுத்து கொரோனா பரவலைத் தடுக்கும்பொருட்டும், அதனைக் கட்டுப்படுத்தவும், ஓய்வுபெற்ற இந்திய ஆட்சிப் பணி அலுவலர், திரு. பூர்ணலிங்கம் அவர்களின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இந்தியாவிலேயே கொரோனா நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்திய மாநிலத்தில், தமிழ்நாடு முன்னிலை வகித்தது அனைவருக்கும் தெரியும். அடுத்து NEET தேர்வு குறித்து ஆராய ஓய்வுபெற்ற நீதியரசர், திரு. A.K. ராஜன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. NEET விலக்குச் சட்டமுன்வடிவுச் சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு, மாண்புமிகு ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு, அதன் பிறகு மாண்புமிகு குடியரசர் அவர்களின் ஒப்புதலுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அடுத்து, online rummy விளையாட்டினைத் தடை செய்யும்பொருட்டு, ஓய்வுபெற்ற நீதிபதி திரு. K. சந்துரு அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அதற்கான சட்டமுன்வடிவு, இந்தச் சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி, தற்போது மாண்புமிகு ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தொன்மையான கோயில்களையெல்லாம் பழமை மாறாமல் புதுப்பிக்க வேண்டுமென்ற அந்த நோக்கத்தில் வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழு இன்றைய தேதி வரை 3,720 திருக்கோயில்களைத் தொன்மை மாறாமல் புதுப்பிக்க அளித்திருக்கக்கூடிய பரிந்துரைகளை ஏற்றுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஒரு எடுத்துக்காட்டிற்காகத்தான் இதையெல்லாம் சொன்னேன்.

இதுபோன்று இந்த அரசால் அமைக்கப்பட்ட ஏனைய அனைத்துக் குழுக்களும் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. அவ்வப்போது அரசுக்கு வழங்கும் ஆலோசனைகளை ஏற்று, மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளினால் இந்தக் குழுக்கள் அமைக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறியுள்ளதால் தமிழ்நாட்டு மக்களின் நலன்களும் பேணிப் பாதுகாக்கப்படுகின்றன என்பதை இந்த அவையில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த இரு நாட்களாக மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையில் எடுத்து வைத்திருக்கக்கூடிய கருத்துக்கள் தொடர்பாக நான் அமைச்சர்களோடு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு ஆலோசித்தேன். அதனடிப்படையில் சில அறிவிப்புகளைத் தற்போது நான் வெளியிட விரும்புகிறேன். முதலாவதாக, கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் முக்கிய ஊராட்சி ஒன்றியச் சாலைகளை வலுப்படுத்தவும், தரம் உயர்த்தவும், "முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்" என்ற புதியத் திட்டத்தை அரசு செயல்படுத்தும். முதற்கட்டமாக, 2 ஆண்டுகளில் 10,000 கி.மீ. அளவுக்கு ஊராட்சி ஒன்றியச் சாலைகள் 4,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்படும்.

இரண்டாவதாக, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 15.09.2022 அன்று மதுரையில் தொடங்கப்பட்டது. 1 முதல் 5ஆம் வகுப்பு வரையிலான தொடக்கப் பள்ளிக் குழந்தைகளுக்கு முன்னோடி முயற்சியாகச் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் முதற்கட்டமாக, 1,545 அரசுப் பள்ளிகளில் பயிலும் 1.14 இலட்சம் மாணவர்களுக்கு அவர்களின் பள்ளியில் காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் பெரும்பாலான பொதுமக்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களால் மிகவும் பாராட்டப்பட்டு, அதை மகிழ்ச்சியோடு வரவேற்றுக்கொண்டிருக்கிறார்கள். மேலும் இந்த முயற்சியின் பயனாக, பள்ளிகளில் மாணவர்களின் வருகை எண்ணிக்கை வழக்கத்தைவிட அதிகரித்துள்ளது. இதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசு, இந்தத் திட்டத்தினை 2023-2024ஆம் ஆண்டு, படிப்படியாக மாநிலத்தில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளுக்கும் விரிவாக்கம் செய்திட முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மூன்றாவதாக ஒரு முக்கியமான அறிவிப்பு. உலக முதலீட்டாளர்கள் மாநாடு. பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னணி மாநிலங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது. இந்திய அளவில் பொருளாதாரத்தில் இரண்டாவது பெரிய மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கின்றது.

முதலீடுகளைப் பெருமளவில் ஈர்த்து, இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கிடவும், மாநிலப் பொருளாதாரத்தை வலுவடையச் செய்திடவும், நான் 2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டினை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்தும் இலக்கை நிர்ணயித்தேன். அதனை அடைய பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. இந்த இலக்கினை நோக்கிப் பயணம் மேற்கொள்ளும் விதமாக, பல முதலீட்டாளர்கள் மாநாடுகள் துபாய் உள்ளிட்ட இடங்களில் நடத்தப்பட்டன.

மேலும், உலகளவில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தலைமையில் ஓர் உயர்மட்டக்குழு, ஜெர்மனி, அமெரிக்கா, தென் கொரியா, ஜப்பான், தைவான் போன்ற நாடுகளுக்கும் அவர்கள் பயணம் மேற்கொண்டார்கள். சுவிட்சர்லாந்து நாட்டின் டாவோஸ் நகரத்தில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றத்தின் ஆண்டுக் கூட்டம் 2022-இல் தமிழ்நாடு அரசின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

நம் மாநிலத்திற்கு மேலும் முதலீடுகளை ஈர்த்து, வேலைவாய்ப்புகளை உருவாக்கி, பொருளாதாரம் வளர்ச்சி அடைவதற்காக, "உலக முதலீட்டாளர்கள்

மாநாடு" வரும் 2024 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 10, 11ஆம் நாட்களில், 100க்கும் மேற்பட்ட நாடுகளின் பங்கேற்புடன், பெருமளவில் பிரம்மாண்டமாகச் சென்னையில் நடத்தப்படும் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எந்த அரசாக இருந்தாலும், அந்த அரசிற்கு ஒரு இலக்குத் தேவை. இலக்கை நிர்ணயித்தால்தான் அந்த இலட்சியத்தை நாம் அடைய முடியும். 2030ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சி என்பது எங்களுடைய இலக்காகும். அந்த இலக்கை நோக்கி நாங்கள் பயணித்துக்கொண்டிருக்கிறோம். இதனை வெறும் நிதி அளவுகோலாக மட்டும் நீங்கள் கருதக் கூடாது. இதனை மக்களின் வளர்ச்சியோடு சேர்த்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அனைத்தையும், அனைவரையும், அனைத்துத் துறைகளையும், அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய திராவிட மாடல் வளர்ச்சியாக்க வேண்டுமென்றும் நான் சொல்லி வருகிறேன். ஏற்றுமதி, இறக்குமதி அளவீடுகளாக மட்டுமே பொருளாதார வளர்ச்சி அளவீடுகள் அமைந்து விடக் கூடாது என்பது எனது எண்ணம்.

சமூக, அரசியல், பொருளாதார, வாழ்வியல், பண்பாட்டு வளர்ச்சியை உள்ளடக்கியதாகவே தமிழ்நாட்டு மாநில வளர்ச்சி அமைய வேண்டும் என்று கருதுகிறேன். அதற்கான திட்டமிடுதல்களை நாங்கள் செய்து வருகிறோம். ஏராளமான புதிய புதிய தொழில் நிறுவனங்களைத் தமிழ்நாட்டில் கொண்டு வருகிறோம். புத்தாக்கத் தொழில்களுக்கு முன்னுரிமை தருகிறோம். சிறு, குறு, நடுத்தரத் தொழில்களை ஊக்குவிக்கிறோம். புதிய தொழில் பேட்டைகள் தொடங்கப்பட்டுள்ளன. வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருகிறோம். வேலைகளுக்குத் தகுதியானவர்களாக இளைஞர்களை உயர்த்தி வருகிறோம். பெண்களைச், சொந்தக் காலில் நிற்பவர்களாக மாற்றிட தன்னம்பிக்கை ஊட்டி வருகிறோம். அவர்களது திறன் மேம்பாட்டில் கவனம் செலுத்துகிறோம். பள்ளி, கல்லூரிகளில் 'நான் முதல்வன்' திட்டம் மூலமாக மாணவ, மாணவியரைத் தனி ஆற்றல் கொண்டவர்களாக வளர்த்து வருகிறோம். இதுதான் புதிய தமிழ்நாடு! அறிவுசார் தமிழ்நாடு! வலிமை வாய்ந்த, வளம் நிறைந்த தமிழ்நாடு!! தமிழ்நாட்டின் இந்த இளையசக்தியை அறிவுசக்தியாக, ஆற்றல்மிக்க சக்தியாக மாற்றி - அதனைத் தொழில் வளர்ச்சியோடு இணைக்கிறோம். மனித ஆற்றலின் மகத்தான சக்தியை அதிகப்படுத்துவதன் மூலமாக மாநில வளர்ச்சியை உயர்த்தி வருகிறோம். இதுதான் திராவிட மாடல் ஆட்சியினுடைய தனித்தன்மை.

நிகழ்காலத்தைப் பொற்காலமாக மாற்றும் முயற்சியில்தான் நித்தமும் செயல்பட்டு வருகிறோம். "முடியுமா நம்மால் என்பது தோல்விக்கு முன்பு வரக்கூடிய தயக்கம். முடித்தேத் தீருவோம் என்பது வெற்றிக்கானத் தொடக்கம்" என்பது தமிழினத் தலைவர் கலைஞருடைய பாடம் இது. அத்தகைய வெற்றியை நோக்கிய பயணம் தொடர்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அரசுக்கு கூறியுள்ள நல் ஆலோசனைகளை உள்ளடக்கியதாக எங்களது வருங்காலத் திட்டமிடுதல்கள் நிச்சயமாக இருக்கும். என்னுடைய வெற்றிக்கு அடிப்படையாக நான் நினைப்பது, மக்களுக்காக உண்மையாக இருப்பதும், மனச்சாட்சிப்படிச் செயல்படுவதும்தான். இந்தப் பொறுப்புக்கு நான் வரக்காரணமானவர்களே மக்கள்தான். அந்த மக்களுக்கு உண்மையாக நான் இருக்கிறேன். அதற்காக நான் எந்நாளும் உழைக்கிறேன்! தலைநிமிர்ந்த தமிழ்நாடு - தனித்துவமான பொன்நாடு! வெல்லும் திராவிட மாடல் ஆட்சியில் உலகுக்கு வழிகாட்டும் தமிழ்நாடாக இருக்குமென்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் 11 பேர் நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது 94 திருத்தங்களை அளித்திருக்கிறார்கள். தங்கள் தொகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள். உரிய அமைச்சர்களுக்கு நடவடிக்கை எடுக்க, அவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் அளித்திருக்கக்கூடிய திருத்தங்களை, திரும்பப்பெறுமாறு கேட்டு, அனைத்துக் கட்சி எல்லைகளை மறந்து, மக்கள் நிலையை உணர்ந்து, இந்த ஆளுநர் உரையை மனப்பூர்வமாக வரவேற்க வேண்டும்.

நிறைவாக, மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், கூட்டணிக் கட்சிகளினுடைய தலைவர்கள் மற்றும் அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது அன்பான தமிழர் திருநாளாம் பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன். 'வாழ்க தமிழ் - வெல்க தமிழ்நாடு'.

நன்றி, வணக்கம்!

முப்படை வீரர்களின் குடும்பங்களுக்குப் பாதுகாப்பான வாழ்க்கையை அமைத்துத் தருவது நமது மகத்தானக் கடமை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் கொடி நாள் செய்தி - 06.12.2022

இல்லத்தை மறந்து, எல்லையோரத்தில் பல இன்னல்களைத் தாங்கி, நாட்டுப்பற்று என்கிற நம்பிக்கையை மட்டும் இதயத்தில் ஏந்தி, இந்திய ஒருமைப்பாட்டுக்காகத் தவம் இருக்கிற முப்படை வீரர்களின் தியாகத்தை நினைவுகூர்ந்து, நம் சேமிப்பின் ஒரு பகுதியை ஒப்படைக்கும் உன்னதத் திருநாள், இந்தக் கொடிநாள்.

பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்து, நாட்டின் அத்தனைப் பகுதிகளையும் பத்திரப்படுத்தும் உத்தமச் செயலைச் சமரசம் செய்து கொள்ளாமல், உயிரைத் துச்சமென மதித்து, சீருடைக்குள் தங்கள் எண்ணச் சிறகுகளையெல்லாம் ஒடுக்கி, ஆசைகளையெல்லாம் குறுக்கி, பகைவர்களை விரட்டும் ஒப்பற்றச் செயலை மேற்கொள்கின்ற படை வீரர்களின் குடும்பங்களுக்குப் பாதுகாப்பான வாழ்க்கையை அமைத்துத் தருவது நம் மகத்தானக் கடமை.

படை வீரர்களின் வாழ்க்கை, 'நம் இல்லத்தைப் பார்த்துக்கொள்ள நாடே அணிதிரண்டு நிற்கிறது' என்கிற நன்னம்பிக்கை ஒளிவீச, கொடி நாளுக்குக் கொடுக்கும் நம் கொடையே அத்தாட்சி. அது அவர்களின் குடும்பத்தினருக்குப் பல்வேறு வகைகளில் பயன் தரும்.

கொடி நாளில் பெரும் தொகையை வசூலித்துத் தருகிற செயலில் தமிழ்நாடு எப்போதும் முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. இந்த ஆண்டும் பெருமளவில் நிதி வழங்கி, அவர்தம் குடும்பத்தினருக்கு வணக்கத்தையும், நன்றியையும் காணிக்கையாக்கிட, உங்களுக்கு என் கோரிக்கையை வைக்கிறேன்.

"முதல்வரின் முகவரி" துறையில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆய்வு - 02.12.2022

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 02.12.2022 அன்று தலைமைச் செயலகத்தில், 'முதல்வரின் முகவரி' துறையில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

பொதுமக்களின் குறைகளைக் களைவதில் மிகுந்த முக்கியத்துவம் அளித்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதற்கென "முதல்வரின் முகவரி" என்ற தனித்துறையை உருவாக்கித் தனது நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதோடு அவ்வப்போது முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கும், முதலமைச்சர் உதவி மையத்திற்கும் திடீர் ஆய்வு மேற்கொண்டு வருகிறார். அதுமட்டுமல்லாமல், மனுதாரர் மற்றும் அலுவலர்களை நேரடியாகத் தொடர்பு கொண்டும், கள நிலவரங்களைக் கேட்டறிந்தும் வருகிறார்.

முதலமைச்சரின் தனிப்பிரிவில் முந்தைய காலகட்டங்களில், ஆண்டொன்றிற்குச் சராசரியாக 3 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு வந்தது. தற்போது, அனைத்துக் குறைதீர்த் தளங்களும் ஒருங்கிணைக்கப்பட்டதன் காரணமாகச் சுமார் 15 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு, தீர்வு காணப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்துறையின் வாயிலாகப் பொது மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாவட்டங்களில் மேற்கொள்ளும் சுற்றுப் பயணங்களின்போது பெறப்படும் மனுக்கள் மீதும், அவற்றில் தெரிவிக்கப்படும் குறைகளுக்குத் தீர்வு காணப்பட்டு அவற்றினை விரைவாக நிறைவேற்றுவது தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார்.

புதிய முயற்சியாக, முதலமைச்சரின் உதவி மையம் மற்றும் மாவட்ட ஆட்சியரகங்களில் கண்காணிப்புப் பிரிவு உருவாக்கப்பட்டு, அனைத்து மனுக்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, தர மதிப்பீடுகள் வழங்கப்படுகின்றன. சரியான முறையில் தீர்வு அளிக்கப்படாத மனுக்களுக்கு மீண்டும் உரிய முறையில் தீர்வு அளிப்பது கண்காணிக்கப்படுகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 'முதல்வரின் முகவரி'த்துறையில் பெறப்படும் அனைத்து மனுக்களையும் கோரிக்கைகளின் தன்மைக்கு ஏற்பப் பகுத்தாய்வு செய்து அம்மனுக்களை விரைவாகச் சீரிய முறையில் தீர்வு காண்பதற்கு உரிய முயற்சிகளை மேற்கொள்ள அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வின்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மனுதாரர்களின் கோரிக்கைகள் உரிய முறையில் தீர்வு காணப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்யும் பொருட்டு, ஒரு சில மனுதாரர்களைத் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டுக் கேட்டறிந்தார். நிலுவை ஓய்வூதியப் பணப்பயன்கள் தொடர்பாக மனு அளித்திருந்த தேனி மாவட்டம், கம்பம் வட்டத்தைச் சேர்ந்த திரு. என்.ரவி என்பவரைத் தொடர்பு கொண்டு, மேற்படி கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதைக் கேட்டறிந்து உறுதி செய்தார். மேலும், வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டத்தைச் சார்ந்த திருமதி ஜெயலட்சுமி, சென்னையைச் சார்ந்த திருமதி எஸ். லதா ஆகியோரைத் தொடர்பு கொண்டு, முறையே அர்ச்சகத் தொழிலாளர் வைப்பு நிதி மற்றும் கல்வி உதவித்தொகை தொடர்பான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதை கேட்டறிந்து உறுதி செய்தார்.

மனுக்களைத் திறம்படவும் விரைவாகவும் தீர்வு செய்த திருச்சி மாவட்டம், முசிறி துணைக் காவல் கண்காணிப்பாளர், சிவகங்கை மாவட்ட தனித்துணை ஆட்சியர், திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தனி வட்டாட்சியர் ஆகியோரைப் பாராட்டியும், கோயம்புத்தூர் மாநகராட்சி உதவி ஆணையர், செங்கல்பட்டு மாவட்டப் பதிவாளர் ஆகியோரையும் தொடர்புகொண்டு, உரிய அறிவுரைகளை வழங்கினார்.

முன்னதாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இத்துறையின் வாயிலாகப் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் உரிய முறையில் தீர்வு காணப்படுகிறதா என்பதை 28.05.2021, 05.10.2021 மற்றும் 26.07.2022 ஆகிய தேதிகளில் ஆய்வு மேற்கொண்டார்.

விவசாயிகளின் நலனுக்காக

✸ ரூ.15.40 கோடியில் வேளாண் கட்டடங்கள்

✸ கரும்பு விவசாயிகளுக்குச் சிறப்பு ஊக்கத்தொகை

✸ 20 நடமாடும் காய்கனி அங்காடிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 07.12.2022 அன்று தலைமைச் செயலகத்தில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் ரூ.15.40 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களைத் திறந்து வைத்து, கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், பயனாளிகளுக்குத் தென்னங்கன்றுகளையும், நெல்லுக்குப் பின் பயறு சாகுபடித் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்குப் பயறு விதைகளையும் வழங்கினார். மேலும், வேளாண் நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு, கரும்பு விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒன்றிய அரசு அறிவித்த நியாயமான மற்றும் ஆதார விலையைக் காட்டிலும் கூடுதலாக டன்னுக்கு ரூ.195 சிறப்பு ஊக்கத்தொகைக்கான ஆணைகளை வழங்கி, 20 நடமாடும் காய்கனி அங்காடிகளைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

விவசாயிகளின் நலனுக்காகத் தமிழ்நாடு அரசு கடந்த இரண்டு ஆண்டுகளில் வேளாண்மைக்கெனத் தனி நிதி நிலை அறிக்கையினைத் தாக்கல் செய்து பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக,

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தொடங்கி வைத்தார் - 07.12.2022

வேளாண்மை விற்பனை, வேளாண் வணிகத்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறைக் கட்டடங்கள் திறப்பு

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் சார்பில் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை

வாரியத்தின் திருநெல்வேலி மாவட்டம் - என்.ஜி.ஓ. காலனி, திண்டுக்கல் மாவட்டம்- வேடசந்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் – மண்ணச்சநல்லூர் ஆகிய மூன்று இடங்களில் ரூ.1.36 கோடிச் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய உழவர் சந்தைகள்;

திருப்பூர் மாவட்டம், பூலவாடியில் ரூ.50 இலட்சம் செலவில் 250 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.75 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள பரிவர்த்தனைக் கூடம்;

கடலூர் மாவட்டம், வேப்பூரில் ரூ.2.20 கோடிச் செலவில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடக் கட்டுமானங்களை மேம்படுத்தித் தரம் உயர்த்துதல், மயிலாடுதுறை மாவட்டத்தில் ரூ.5.85 கோடிச் செலவில் சீர்காழி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு, பரிவர்த்தனைக் கூடம் மற்றும் அலுவலகக் கட்டடம், குற்றாலத்தில் கட்டப்பட்டுள்ள பரிவர்த்தனைக் கூடம்;

திருவாரூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.2.89 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள விவசாயிகளுக்கான ஓய்வு அறை, அலுவலகக் கட்டடம் மற்றும் உலர்களம்;

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் கிருஷ்ணகிரி மாவட்டம், தளி, தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தில் ரூ.1.85 கோடிச் செலவில் உட்கட்டமைப்பு வசதி மேம்பாடு,

என மொத்தம் ரூ.15.40 கோடிச் செலவில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறைக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ்த் தென்னங்கன்றுகள் விநியோகம்

தமிழ்நாட்டில் 5 ஆண்டுகளில் அனைத்துக் கிராமங்களிலும் ஒட்டுமொத்த வேளாண் வளர்ச்சிக்காகவும், கிராமங்கள் தன்னிறைவு அடைந்திடும் நோக்கத்திற்காகவும் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் எனும் மாபெரும் திட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.

2022-2023ஆம் ஆண்டிற்காக 3,204 கிராமப் பஞ்சாயத்துக்களில் இத்திட்டத்தை ரூ.300 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்திட ஆரம்பகட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, ஒரு கிராம பஞ்சாயத்தில் 300 குடும்பங்களுக்கு, ரூ.11.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒரு குடும்பத்திற்கு 2 தென்னங்கன்றுகள் வீதம் 19.16 இலட்சம் தென்னங்கன்றுகள் விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகம் செய்யப்படவுள்ளது.

இத்திட்டத்தைத் தொடங்கி வைக்கும் விதமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களைச் சேர்ந்த 2 பயனாளிகளுக்குத் தென்னங்கன்றுகளை வழங்கினார்.

நெல்லுக்கு பின் பயறு சாகுபடித் திட்டம்

2022-2023ஆம் ஆண்டிற்கான வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மானியக் கோரிக்கையில், வேளாண் விளை நிலங்களில் மண் வளத்தினை அதிகரிக்கவும், விவசாயிகளுக்குக் குறைந்த செலவில் கூடுதல் வருமானம் கிடைத்திடவும், சம்பா நெல் அறுவடைக்குப்பின், உளுந்து, பச்சைப்பயறு பத்து இலட்சம் ஏக்கரில் சாகுபடி செய்திட ஏக்கர் ஒன்றுக்கு ரூ.400 வீதம் மானியம் வழங்குவதற்காக, 2022-2023ஆம் ஆண்டில் ரூ.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, சம்பா நெல் சாகுபடிக்குப் பின், உளுந்து, பச்சைப்பயறு போன்ற பயறுவகைப் பயிர்கள் 10 இலட்சம் ஏக்கரில் சாகுபடி செய்வதற்காகச் சான்று விதைகள் 50% மானியத்தில் ஏக்கருக்கு ரூ.400 வீதம் ரூ.40 கோடி மதிப்பில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தைத் தொடங்கி வைக்கும் விதமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 2 விவசாயிகளுக்குப் பயறு விதைகளை வழங்கினார்.

கரும்புக்குச் சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.195 வழங்குதல்

மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள், 2022-2023ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில்,

2021-2022 அரவைப்பருவத்தில் சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு டன்னுக்கு ரூ.195 சிறப்பு ஊக்கத்தொகையாக வழங்கப்படும் என்று அறிவித்தார்.

ஒன்றிய அரசு 2021-2022ஆம் அரவைப்பருவத்திற்கு அறிவித்துள்ள நியாயமான மற்றும் ஆதாய விலையான (Fair and Remunerative Price) ரூ.2,755யைக் காட்டிலும் கூடுதலாக, மாநில அரசின் சிறப்பு ஊக்கத் தொகையாக டன்னுக்கு ரூ.195 வழங்கிடும் வகையில், தமிழ்நாடு அரசு ரூ.199 கோடி நிதியினை வழங்கி ஆணையிட்டுள்ளது.

அதன்படி, தமிழ்நாட்டில் இயங்கி வரும் இரண்டு பொதுத்துறை, 15 கூட்டுறவு மற்றும் 15 தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு 2021-2022 அரவைப்பருவத்தில் கரும்பு வழங்கிய விவசாயிகளுக்குத் தமிழ்நாடு அரசின் சிறப்பு ஊக்கத்தொகையான ரூ.195யையும் சேர்த்து, டன் ஒன்றுக்கு ரூ.2,950, விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வழங்கப்படும்.

1.21 இலட்சம் கரும்பு விவசாயிகள் பயன்பெறும் வகையில் சிறப்பு ஊக்கத்தொகைக்கான ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2 கரும்பு விவசாயிகளுக்கு ஆணைகளை வழங்கினார்.

இருபது நடமாடும் காய்கனி அங்காடிகள்

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் சார்பில் கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, செங்கல்பட்டு, திருப்பூர், சேலம் ஆகிய மாவட்டங்களில் நுகர்வோரின் இல்லத்திற்கே சென்று பண்ணைக் காய்கறிகளை விற்பனை செய்திடும் பொருட்டு ரூ.40 இலட்சம் மதிப்பில் 20 நடமாடும் காய்கனி அங்காடிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

கோவில்பட்டியில், ரூ.1.51 கோடி மதிப்பீட்டில் கரிசல் இலக்கியத்தின் முன்னத்தி ஏர் கி. ராஜநாராயணன் அவர்களுக்கு நினைவரங்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார் - 02.12.2022

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 02.12.2022 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை சார்பில் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் "கரிசல் காட்டு இலக்கியத்தின்" முன்னோடி எழுத்தாளர் கி. ராஜநாராயணன் அவர்களுக்கு ரூ.1.51 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள முழு திருவுருவச்சிலையுடன் கூடிய நினைவரங்கத்தைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

எழுத்தாளர் கி.ராஜநாராயணன் அவர்கள் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அருகில் உள்ள இடைச்செவல் கிராமத்தில் திரு.ஸ்ரீகிருஷ்ண இராமானுஜம்-திருமதி இலட்சுமி அம்மாள் தம்பதியருக்கு மகனாக 16.09.1922 அன்று பிறந்தார். பள்ளிப்பருவக் கல்வியை மட்டுமே முடித்திருந்த கி.ராஜநாராயணன் அவர்கள் பேச்சுத்தமிழில் மண்மணமிக்க சிறுகதைகளைப் படைத்தார். அவரது படைப்புகளில் கரிசல் நிலவியலும், வெள்ளந்தித்தனமும், பேரன்புமிக்க மக்களின் வாழ்வும் இடம்பெற்றிருந்தன.

கி.ராஜநாராயணன் அவர்கள் கரிசல் வட்டார அகராதியை உருவாக்கிய முன்னோடியாகத் திகழ்ந்தார். கரிசல் கதைகள், கதவு, பெண் கதைகள், கிராமியக் கதைகள் போன்ற எண்ணற்ற சிறுகதைகளையும், கிடை, பிஞ்சுகள் போன்ற குறுநாவல்களையும், கோபல்ல கிராமம், கோபல்லபுரத்து மக்கள், அந்தமான் நாயக்கர் போன்ற நாவல்களையும், எண்ணற்ற கட்டுரைகளையும் அவர் எழுதியுள்ளார். 1991ஆம் ஆண்டு "கோபல்லபுரத்து மக்கள்" என்ற நாவலுக்காக சாகித்ய அகாதமி விருது பெற்றார்.



"மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 11.06.1989 அன்று திண்டுக்கல் – காயிதேமில்லத் மாவட்டத் தொடக்க விழாவில், மகளிர் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கம் தருகிற மற்றுமொரு ஏற்பாடாக, வறுமையில் உழலும் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள், எட்டாம் வகுப்பும் அல்லது அதற்கு மேலும் படித்துத் தேறியிருந்தால் அவர்களின் திருமணச் செலவுக்காக ரூ.5,000 உதவித்தொகை வழங்கும் "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தினைத்" தொடங்கிவைத்தார்."

கி.ராஜநாராயணன் அவர்களுக்கு இலக்கிய சிந்தனை விருது, தமிழ்நாடு அரசின் விருது, மனோன்மணியம் சுந்தரனார் விருது, கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் தமிழ் இலக்கியச் சாதனை விருது உள்ளிட்ட தமிழின் முக்கிய இலக்கிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ் நாட்டுப்புறக் கதைகள் மற்றும் நாவல்கள் மூலம் எண்ணற்றோர் இதயங்களில் வாழ்ந்த கி.ராஜநாராயணன் அவர்கள் 17.05.2021 அன்று மறைந்தார்.

தமிழ் இலக்கியத்திற்குச் செழுமை சேர்த்த கரிசல்காட்டு எழுத்தாளர் கி. ராஜநாராயணன் (கி.ரா.) அவர்களின் நினைவினைப் போற்றும் வகையில், அவர் படித்த இடைச்செவல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை அரசு சார்பில் பழமை மாறாமல் புதுப்பிக்கப்படும் என்றும், அவரது படைப்பாளுமையை வெளிப்படுத்தும் வகையிலும், அவருடைய புகைப்படங்கள், படைப்புகள் ஆகியவற்றை மாணவர்களும், பொதுமக்களும் அறிந்துகொள்ளும் வகையிலும் ஓர் அரங்கம் நிறுவப்படும் என்றும், கரிசல் இலக்கியத்தை உலகறியச் செய்த பிதாமகர் கி.ரா.அவர்களுக்கு கோவில்பட்டியில் அரசு சார்பில் சிலை அமைக்கப்படும் என்றும் 18.05.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

அதன்படி, தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், இடைச்செவல் ஊராட்சியில், கரிசல் இலக்கியத்தின் முன்னத்தி ஏர் கி. ராஜநாராயணன் அவர்களின் நினைவாக அவர் பயின்ற இடைச்செவல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கட்டடம் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.10.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, கோவில்பட்டியில், 220 சதுர மீட்டர் பரப்பளவில் ரூ.1.51 கோடி மதிப்பீட்டில் முழு திருவுருவச்சிலையுடன் கூடிய நினைவரங்கத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். இந்நினைவரங்கத்தில் நூலகம், நிருவாக அலுவலகம், மின்னணு நூலகம், கண்காட்சி அறை ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.



"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 05.09.2022 அன்று சென்னை, பாரதி மகளிர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில், கல்வி என்னும் நிரந்தரச் சொத்தினைப் பெண்கள் அனைவரும் பெற்றிட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டத்தின்கீழ், அரசுப்பள்ளிகளில் 6 முதல் 12 வரை பயின்று உயர் கல்விப் பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 வீதம் உதவித்தொகை வழங்கும் "புதுமைப்பெண்" திட்டத்தினைத் தொடங்கிவைத்தார்."

தென்காசி மாவட்டத்தில் ரூ.182.56 கோடி மதிப்பில் 1,03,508 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை - 08.12.2022

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 08.12.2022 அன்று தென்காசி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், ரூ.22.20 கோடிச் செலவில் 57 முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்து வைத்து, ரூ.34.14 கோடி மதிப்பீட்டிலான 23 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 1,03,508 பயனாளிகளுக்கு ரூ.182.56 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பல்வேறு முடிவுற்ற திட்டங்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், ரூ.4.25 கோடிச் செலவில் மருதம்புத்தூர், வேலாயுதபுரம், இலத்தூர், விஸ்வநாதபேரி, குத்துக்கல் வலசை ஆகிய கிராமங்களில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், வலங்கைப்பலிசமுத்திரம், கரைகண்டார்குளம், களப்பாகுளம், அரியநாயகிபுரம், வீரிருப்பு, மைலப்பபுரம், ஐந்தான்கட்டளை, தேவிப்பட்டிணம், கூடலூர், சங்கனாப்பேரி, ஆகிய கிராமங்களில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டடங்கள். தென்காசி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள உணவுதானியக் கிடங்கு, ஆலங்குளம் ஒன்றியம், ஓடைமறிச்சான் ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கக் கட்டடம், மேலநீலிதநல்லூர் ஊராட்சி, கோ-மருதப்பபுரம், குலசேகரமங்கலம் ஆகிய கிராமங்களில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மையக் கட்டடம், குருவிகுளம் ஒன்றியம், பழங்கோட்டை ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள கலையரங்கக் கட்டடம், வாசுதேவநல்லூர் ஒன்றியம், நெற்கட்டும்செவல் ஊராட்சி, பச்சேரியில் கட்டப்பட்டுள்ள 45 பசுமை வீடுகள், கடையநல்லூர் ஒன்றியம், நெடுவயல் கிராமத்தில் கட்டப்பட்டுள்ள சமுதாயச் சுகாதார வளாகம், வாசுதேவநல்லூர் ஒன்றியம், முள்ளிகுளம் ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி, செங்கோட்டை ஒன்றியம் சீவநல்லூர், திருவெற்றியூரில் பயணிகள் நிழற்குடை;

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறைச் சார்பில் செங்கோட்டையில் ரூ.70 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மண்பரிசோதனைக்கூடம்;

வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில் ஊத்துமலை, வீரகேரளம்புதூர், ஆழ்வார்குறிச்சி ஆகிய இடங்களில் ரூ.1.16 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள்;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறைச் சார்பில் வல்லத்தில் ரூ.60 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள ஆரம்பச் சுகாதார நிலைய புற நோயாளிகள் பகுதி, கம்பனேரி, மடத்துப்பட்டி பகுதிகளில் ரூ.40 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள துணைச் சுகாதார நிலையங்கள், ரெட்டியபட்டி ஆரம்பச் சுகாதார நிலையத்தில் ரூ.25 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள செவிலியர் குடியிருப்பு;

பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் செவல்குளம் அரசு உயர்நிலைப் பள்ளியில் நபார்டு திட்டத்தின்கீழ் ரூ.2.15 கோடிச் செலவில்

திட்டப் பணிகள் சார்பில் மத்தளம்பாறை, ஐந்தாம் கட்டளை, நடுவக்குறிச்சி ஆகிய கிராமங்களில் ரூ.32.73 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள குழந்தைகள் மையக் கட்டடங்கள்;

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் தாட்கோ சார்பில் காரிசாத்தன், புளியங்குடி, சங்கரன்கோவில் ஆகிய இடங்களில் ரூ.2.02 கோடிச் செலவில் அரசு ஆதிதிராவிடர் நல நவீனச் சமுதாயக்கூடங்கள்;

கட்டப்பட்டுள்ள 8 வகுப்பறைகள், ஆய்வகம் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கான கழிப்பறைகள்;

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் சார்பில் தென்காசி நகராட்சியில் ரூ.50 இலட்சம் செலவில் பூங்கா மற்றும் மங்கம்மாள் சாலைப் பகுதியில் சுகாதார நலமையம், சங்கரன்கோவில் நகராட்சிப் பகுதியில் ரூ.3.17 கோடிச் செலவில் கசடு கழிவு மேலாண்மை மையம், கடையநல்லூர் நகராட்சியில் ரூ.1.17 கோடிச் செலவில் குமந்தாபுரம் மற்றும் மேலக்கடையநல்லூர் பகுதிகளில் நகர்ப்புற நலமையம், அண்ணாமலைப் பொய்கை மேம்படுத்தும் பணி, திருமால் விழுங்கி ஊரணி மேம்படுத்தும் பணிகள்;

பொதுப்பணித் துறை (கட்டடங்கள் மற்றும் பராமரிப்பு) சார்பில் அ.கரிசல்குளம், பழங்கோட்டை, வாசுதேவநல்லூர் ஆகிய கிராமங்களில் ரூ.63 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள வருவாய் ஆய்வாளர் குடியிருப்புகள், தலைவன்கோட்டை, சங்கரன்கோவில் மற்றும் கடையநல்லூர் ஆகிய பகுதிகளில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகளில் ரூ.52.50 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்ட சித்த மருத்துவப் பிரிவுகள், சங்கரன்கோவில் நடுவக்குறிச்சியில் ரூ.3.93 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவிகளுக்கான விடுதி;

வனத்துறை சார்பில் புளியங்குடித் தலையணை வனப்பகுதியில் வனத்தீ ஏற்படாமல் தடுக்க ரூ.3 இலட்சம் செலவில் தடுப்பணை;

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் கடையநல்லூர் நகராட்சியில் ரூ.40 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள நவீன மீன் விற்பனை அங்காடி;

சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்

என மொத்தம், ரூ.22.20 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள 57 முடிவுற்ற திட்டப்பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

பல்வேறு புதிய திட்டப் பணிகள்:

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் ரூ.1.57 கோடி மதிப்பீட்டில் நெற்கட்டும்செவலில் ஊராட்சி மன்றக் கட்டடம் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி, குத்தப்பாஞ்சான், மலையராமபுரம், செல்வவிநாயகபுரம், நாகல்குளம், இலத்தூர், சுமைதீர்த்தபுரம், காசிமேஜர்புரம், நெற்கட்டும்செவல், ஆண்டார்குளம் ஆகிய கிராமங்களில் நியாயவிலைக் கடைகள் கட்டும் பணி;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் தென்காசி அரசு மாவட்ட மருத்துவமனையில் ரூ.30.03 கோடி மதிப்பீட்டில் மகப்பேறு மையம், தாய்சேய் நலக் கட்டடம், சிறார் திறன் மேம்பாட்டு மையம் உள்ளிட்ட பல்வேறு கட்டடங்கள்;

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் சார்பில் கடையநல்லூர் வட்டாரத்தில் குமந்தாபுரம் உள்ளிட்ட 5 இடங்களில் ரூ.37.50 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையக் கட்டடங்கள்;

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் புளியங்குடி நகராட்சிப் பகுதியில் ரூ.1.44 கோடி மதிப்பீட்டில் எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி;

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பில் பாவூர்ச்சத்திரத்தில்

ரூ.72.55 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாட்டிலுள்ள நாட்டின நாய்களுக்கான இனப்பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மையம்;

என மொத்தம் ரூ.34.14 கோடி மதிப்பீட்டிலான 23 புதிய திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் 11,996 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், இ-பட்டாக்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் 6,246 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, முதிர்கன்னி உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 5,399 பயனாளிகளுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம், தூய்மை பாரத இயக்கம், பிரதம மந்திரி வீடு வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின்கீழ் நலத்திட்ட உதவிகள், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் 12,371 பயனாளிகளுக்குக் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், முதல்வரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம், நுண்ணீர் பாசனத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் நலத்திட்ட உதவிகள், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் 1,048 பயனாளிகளுக்குப் புதிய குடும்ப அட்டைகள், கூட்டுறவுத் துறை சார்பில் 3,400 பயனாளிகளுக்கு கறவை மாடு கடன், சிறுவணிகக் கடன், பணிபுரியும் மகளிர் கடன், வீட்டுவசதிக் கடன் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 124 பயனாளிகளுக்கு இலவசத் தேய்ப்புப் பெட்டி, தையல் இயந்திரம், உலமாக்களுக்கு இலவச மிதிவண்டி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறைச் சார்பில் 4,605 பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொறுத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், சக்கர நாற்காலிகள், நடைவண்டி, ஊன்றுகோல்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் 3,500 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ்ப் புதிய அட்டைகள், புதிய தலைமுறைத் தொலைக்காட்சி அலுவலக செய்திப் பிரிவில் செய்தியாளராகப் பணியாற்றி வந்த திரு.ச.முத்துகிருஷ்ணன் என்பவர் உயிரிழந்ததையொட்டி அவரது தாயாரிடம் பத்திரிகையாளர் குடும்ப உதவித் திட்டத்தின்கீழ் ரூ.3 இலட்சம், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.2 இலட்சம், என மொத்தம் ரூ.5 இலட்சம் நிவாரணத்தொகை எனப் பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 1,03,508 பயனாளிகளுக்கு ரூ.182.57 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

முன்னதாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தென்காசி, வேல்ஸ் வித்யாலயா பள்ளியில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளைப் பார்வையிட்டு, அப்பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலையையும் திறந்து வைத்தார்.

இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை :

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம். வானரங்கள் கனிகொடுத்து மந்தியோடு கொஞ்சும்! மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்! கானவர்கள் விழிஎறிந்து

வானவரை அழைப்பர்! கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பர்! தேன் அருவித் திரை எழும்பி வான்வழி ஒழுகும்! செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்! கூனல்இளம் பிறைமுடித்த வேணி அலங்காரர்! குற்றாலத் திரிகூட மலை எங்கள் மலையே! என்று போற்றிப் பாடப்பட்ட திருக்குற்றால வனப்பரப்புக்கு நான் வந்திருக்கிறேன்!

தென்காசி மாவட்டத்துக்கு வந்ததுமே, இந்த மண்ணைப் போலவே மனதும் குளிர்ச்சி அடைந்து விடுகிறது. எப்போதும் லேசான தூறல் – சாரலாகப் பெய்து வருவதைப் பார்க்கும்போது - சென்னை போன்ற வெப்பமான நகரத்தில் இருந்து வரும் எனக்கு இது மிகவும் இதமாக இருக்கிறது. ஆண்டுதோறும் சாரல் விழாவை அரசு கொண்டாடி வருகிறது.

❖ மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் இருக்கும் மாவட்டம்!

❖ குறிஞ்சி, மருதம், முல்லை ஆகிய மூன்றையும் உள்ளடக்கிய குற்றாலம் இருக்கக்கூடிய மாவட்டம்!

❖ அதிகமான அருவிகள் உள்ள மாவட்டம்!

❖ அணைகள் அதிகம் உள்ள மாவட்டம்!

மொத்தத்தில் இயற்கை எழில் கொஞ்சும் மாவட்டம் இந்தத் தென்காசி மாவட்டம்.

அது மட்டுமல்ல, வீரத்தின் விளைநிலமாக இருக்கும் பூலித்தேவன் மண் இது! இந்திய விடுதலைக்காகக் குரல் கொடுத்து, 1755ஆம் ஆண்டே ஆங்கிலேயர்க்கு வரி கட்ட மறுத்த பூலித்தேவன் மண் இந்த மண்.

1998ஆம் ஆண்டு நெற்கட்டான்செவலில் மாவீரன் பூலித்தேவனுக்கு மணிமண்டபமும் சிலையும் அமைத்துக் கொடுத்தவர் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

மாவீரன் பூலித்தேவனின் படைத் தளபதியாக இருந்த மாவீரன் ஒண்டி வீரனின் மண் இந்த மண். அந்த ஒண்டி வீரனுக்கு மணிமண்டபம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ததும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்! அவர் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது.

வடக்கே காசி இருப்பதைப் போல தெற்கேயும் ஒரு காசியை உருவாக்க வேண்டும் என்று மன்னன் பராக்கிரமப் பாண்டியன் நினைத்து உருவாக்கியதுதான் தென்காசிக் கோபுரம்! அரிகேசரி பராக்கிரம பாண்டியன், இங்கிருந்துதான் இலங்கைக்குப் படையெடுத்துச் சென்றான்.

500 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட தென்காசி கோயில் ராஜகோபுரத்தை மீண்டும் புதுப்பிக்க 1960ஆம் ஆண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது திருப்பணிக்குழுத் தலைவராக நியமிக்கப்பட்டவர்தான் நீதிக்கட்சித் தலைவர்களில் ஒருவராக இருந்த பி.டி.ராஜன் அவர்கள்.

பின்னர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களது ஆட்சிக் காலத்தில் 'தினத்தந்தி' அதிபர் பெருமதிப்பிற்குரிய பா. சிவந்தி ஆதித்தன் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. 25.06.1990 அன்று கழக ஆட்சிக் காலத்தில் - அன்றைய அறநிலையத் துறை அமைச்சராக இருந்த மரியாதைக்குரிய 'தினகரன்' கே.பி.கந்தசாமி அவர்கள் தலைமையில் ராஜகோபுர குடமுழுக்கு விழா நடைபெற்றது.

இப்படி, இயற்கைக்கும், வீரத்துக்கும், ஆன்மீகத்துக்கும் வேளாண்மைக்கும்,

விளைச்சலுக்கும் புகழ்பெற்ற தென்காசிக்கு வந்திருப்பதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன், பெருமைப்படுகிறேன், பூரிப்படைகிறேன். இந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சராக தன்னுடைய கடமையை ஆற்றிக்கொண்டிருக்கின்ற நம்முடைய அருமைச் சகோதரர் மாண்புமிகு கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!

விருதுநகரைச் சேர்ந்தவராக இருந்தாலும், அவரது உழைப்பின் விருதாகத் தென்காசி மாவட்டமும் இணைத்துப் பொறுப்பில் தரப்பட்டுள்ளது. இதையும் தனது சொந்த மாவட்டமாக நினைத்து, இரட்டைக் குதிரையில் திறம்படச் சவாரி செய்து, வெற்றிக் கொடி நாட்டக்கூடியவராக அவர் செயல்பட்டு வருகிறார்.

பிரம்மாண்டமாக, நேர்த்தியாக உழைப்பவர் மட்டுமல்ல – இட்ட பணியை ஈடு இணையில்லாமல் செய்து காட்டக் கூடியவர். சில வாரங்களுக்கு முன்னாலும் – சில நாட்களுக்கு முன்னாலும் அவர் உடல் நலிவுற்றார். ஆனால், உடல் நலிவுற்றிருந்தாலும், தென்காசி விழாவை மிகச்சிறப்பாக நடத்திக் காட்டவேண்டும் என்று முடிவு செய்து இங்கேயே வந்து தங்கித் தனது உடல்நிலையைப் பற்றிக் கூட பொருட்படுத்தாமல் இந்த மாவட்ட மக்களுடைய நன்மையை மட்டுமே மனதில் வைத்து நம்முடைய அமைச்சர் ராமச்சந்திரன் அவர்கள் இந்தக் கடமையை நிறைவேற்றித் தந்திருக்கிறார். எனவே, அவருக்கு என்னுடைய இதயப்பூர்வமான வாழ்த்துக்களை அரசின் சார்பில், இந்த மாவட்டத்தினுடைய மக்களின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, அவருக்குத் துணைநின்று பணியாற்றியிருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சியர், தென்காசி மாவட்டத்தினுடைய அரசு அதிகாரிகள், அலுவலர்கள் உள்ளிட்ட அத்தனை பேருக்கும் நான் என்னுடைய பாராட்டுக்களை அரசின் சார்பில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இது என்ன அரசு விழாவா? அல்லது எங்கள் கட்சியினுடைய மாநில மாநாடா? என்று சந்தேகப்படக்கூடிய அளவிற்குப் பெரிய எழுச்சி. மிகப்பெரிய அளவில், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவாக இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றால், அப்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கக்கூடிய இந்த நிகழ்ச்சியில், இங்கே வழங்கப்பட இருக்கக்கூடிய தொகையும் மிகப் பெரியதாக அமைந்திருக்கிறது.

- ரூ.22.20 கோடி மதிப்பீட்டிலான 57 முடிவுற்ற திட்டப்பணிகளை மக்களுடைய பயன்பாட்டிற்காக நான் துவக்கி வைத்திருக்கிறேன்.
- ரூ.34.14 கோடி மதிப்பீட்டில், 23 புதிய பணிகளுக்கு இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.
- 1,03,508 பேர் பயனடையும் வகையில், ரூ.182.56 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் இங்கு வழங்கப்படவிருக்கிறது.

ஒரே ஒரு விழாவில் 1 இலட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைய இருக்கின்றன என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு நான் தெரிவிக்கிறேன். கழக ஆட்சி மலர்ந்து பத்தொன்பது மாதங்கள் ஆகி இருக்கின்றன. இந்த 19 மாதக் காலங்களில் பல நூறு சாதனைகளைத் தமிழ்நாட்டு மக்களுக்கு நாங்கள் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம் என்பதைச் சாதாரணமாக இல்லை, நெஞ்சை நிமிர்த்தி நான் உங்கள் முன்னால் தெரிவிக்கிறேன்.

இவை வெறும் வாய் வார்த்தைகளால் அல்ல. பயனடைந்த மக்கள் – இந்த அரசைப் பல்லாண்டு காலம் வாழ்க, வாழ்க என்று வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். தென்காசி மாவட்டத்தில் பயனடைந்தவர்கள் எண்ணிக்கையை மட்டும் நான் சொல்கிறேன்.

- உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் 11,494 மனுக்கள் பெறப்பட்டு 11,490 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.
- மகளிர் சுயஉதவிக் குழுக்களின் ரூ.27.77 கோடி மதிப்பிலான கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

- 486 நபர்களுக்கு ரூ.24.23 இலட்சம் மதிப்பில் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.
- இல்லம் தேடிக் கல்வி திட்டத்தின்கீழ் 41,980 மாணவ, மாணவியர்கள் பயனடைந்திருக்கிறார்கள்.
- மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்துப் பயணத்திட்டத்தின் கீழ் 80 இலட்சம் முறை கட்டணமில்லாமல் பேருந்துப் பயணம் மேற்கொண்டு மகளிர் பயனடைந்திருக்கிறார்கள்.
- 2,935 திருநங்கைகள் பயனடைந்துள்ளார்கள்.
- 50,361 மாற்றுத்திறனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.
- 73,491 பயனாளிகளுக்கு ரூ.436 கோடி அளவிற்குப் பயிர்க் கடன் மற்றும் நகைக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.
- உழவர்களுக்கு புதிய மின் இணைப்பு வழங்கும் திட்டத்தின்கீழ் ரூ.13 கோடி செலவில் 1,823 பயனாளிகளுக்கு புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தில் 19,599 பேர் பயனடைந்துள்ளனர்.
- கொரோனா சிறப்பு நிவாரண நிதியாக 4,41,989 பேர் ரூ.4,000ம் பெற்றுள்ளார்கள்.
- 50 ஆயிரம் பனைவிதைகள் மற்றும் பனங்கன்றுகள் ரூ.1.95 இலட்சம் மதிப்பீட்டில் நடப்பட்டுள்ளன.
- வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ்ப் புதியதாக ஓய்வூதிய ஆணைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.
- 1,701 குடும்பங்களுக்கு வேளாண் கருவித் தொகுப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன.
- 150 திருக்கோயில்களில் பணிபுரியும் 84 அர்ச்சகர்கள், 6 பட்டாச்சாரியார்கள், 60 பூசாரிகளுக்கு ரூ.1,000 மாத ஊக்கத்தொகையாக மொத்தம் ரூ.1.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- சங்கரன்கோயிலில் புதிய வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் ரூ.2.12 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

- இப்படி சொல்லிக்கொண்டே போகலாம்.

இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்னதாக, தென்காசி மாவட்ட மக்களின் கோரிக்கைகள் சில என்னிடம் தெரிவிக்கப்பட்டன. உடனடியாக அதிகாரிகளை அழைத்து நான் பேசினேன். கலந்துரையாடினேன். அவைகள் சிலவற்றை நிறைவேற்றித் தருவதற்கான அறிவிப்பை இந்த மேடையிலேயே அறிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

- தென்காசி மாவட்டத்தின் முக்கிய இணைப்புச் சாலையாக விளங்கக்கூடிய புளியங்குடி சங்கரன்கோயில் நெடுஞ்சாலை மேம்படுத்தப்படும்.
- புதியதாக அமைந்துள்ள தென்காசி மாவட்டத்திற்குப் புதிய மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்கப்படும்.
- துரைசாமிபுரம் மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, பனையூர் கூடலூர் - துரைசிங்கபுரம் சாலை மேம்படுத்தப்படும்.
- தென்காசி குற்றாலம் இடையே இருக்கக்கூடிய இலாத்தூர் பெரிய ஏரி ஒரு முக்கிய மீன்பிடி மற்றும் சுற்றுலாத்தலமாக ரூ.10 கோடிச் செலவில் மேம்படுத்தப்படும்.
- சிவகிரி மற்றும் ஆலங்குளம் பகுதி விவசாயிகளினுடைய கோரிக்கையை ஏற்று அவர்கள் பயன்பெறக்கூடிய வகையில் ஆலங்குளத்தில் புதிய வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கப்படும்.

அதேபோல, இங்கே சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டவாறு, ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள இராமநதி, ஜம்புநதி, திட்டப்பணிகளுக்குக் கடந்த ஆட்சிக் காலத்தில் நிருவாக அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதற்கு முறையான அனுமதி பெறப்படாததால், திட்டப்பணிகள் துவக்கப்படாமலேயே இருந்தன. ஆனால், நமது ஆட்சி அமைந்த பிறகு இதற்கான முறையான வனத்துறை அனுமதிகள் பெறப்பட்டு, தற்போது இத்திட்டம் ஒன்றிய வனத்துறைக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த அனுமதியைப் பெறப்பட்டவுடன், இப்பணிகள் விரைவில் துவக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தகைய நலத்திட்ட சாதனைகளின் அரசுதான் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு.

தென்காசி அலங்கார் நகரைச் சேர்ந்த மாணவி சண்முகவள்ளி என்பவர் 2020இல் நடைபெற்ற

குடிமைப் பணித் தேர்வில் இந்திய அளவில் 108ஆவது இடத்தையும், தமிழக அளவில் 3ஆவது இடத்தையும், பெண்கள் பிரிவில் முதலிடம் பெற்று இந்த மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார். அவருக்கு இந்த விழாவின் மூலமாக முதலமைச்சர் என்கிற முறையில் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், வினைதீர்த்த நாடார்பட்டி ஊராட்சி ஒன்றியப் பள்ளியில், 3ஆம் வகுப்பு படிக்கக்கூடிய ஆராதனா எனும் குழந்தை, சமீபத்தில், எனக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தார். அந்தக் கடிதத்தில், தான் படிக்கும் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைத் கட்டித்தர வேண்டும் என்று கேட்டிருந்தார். பாருங்கள் ஒரு குழந்தை எழுதியிருக்கிறது. அந்தக் கடிதத்தைப் படித்ததும் எனக்குப் பெருமையாக இருந்தது. எத்தகைய நம்பிக்கையை அவர் என் மீது வைத்திருந்தால் இந்தக் கடிதம் எழுதி இருப்பார் என நான் நினைத்து மகிழ்ச்சி அடைந்தேன். குழந்தை ஆராதனாவின் கோரிக்கை ஏற்கப்பட்டது என்பதை இந்தக் கூட்டத்தில் இப்போது நான் அறிவிக்கிறேன்.

அதற்கு முதற்கட்டமாக, ரூ.35.50 இலட்சம் செலவில் இரண்டு வகுப்பறைகள் கட்டப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வளவு சிறு வயதிலேயே நம்பிக்கையோடு எனக்குக் கடிதம் எழுதிய அந்தக் குழந்தை ஆராதனா, அதே பள்ளியில் படித்து எதிர்காலத்தில் சிறப்பான நிலையை அடைய வேண்டும் என்று மீண்டும் அந்தச் சிறுமியை, அந்த குழந்தையை நான் வாழ்த்துகிறேன்.

இந்த மாவட்ட மக்களினுடைய நீண்டநாள் கோரிக்கை, தென்காசி மாவட்டம், சங்கரன்கோயில் வட்டம் மேலநீலித நல்லூர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரியை ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மீட்டுத் தனி அலுவலரை நியமித்த அரசுதான் தமிழ்நாடு அரசு, தி.மு.க அரசு.

1969ஆம் ஆண்டில் முக்குலத்தோர் கல்வி மேம்பாட்டிற்காக பி.கே.மூக்கையாத் தேவர் முயற்சியால் தென் மாவட்டத்தில் மூன்று கல்லூரிகள் தொடங்கப்பட்டன. முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா, நம்முடைய தலைவர் கலைஞர் ஆகியோர் பல்வேறு உதவிகளை இதற்காகச் செய்தனர். இதில் ஒரு கல்லூரி மேலநீலித நல்லூரில் தொடங்கப்பட்டது. அதை நிர்வகிக்க, தேவர் எஜூகேஷனல் சொசைட்டி - திருநெல்வேலி மாவட்டம் என்ற சங்கம் முன்னாள் சட்டப்பேரவைத் தலைவராக இருந்த திரு.செல்லப்பாண்டியன் அவர்கள் தலைமையில் அது உருவாக்கப்பட்டது. முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான் அன்றைக்கு அதற்கு அனுமதி வழங்கினார். இந்த வட்டாரத்தின் கல்வி வளர்ச்சிக்காக 44.94 ஏக்கர் அரசு நிலத்தை முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

ஆனால், காலப்போக்கில், சிலரால் இதன் நோக்கம் சிதைக்கப்பட்டுத் தனிநபர்களுடைய ஆக்கிரமிப்புக்கு ஆளானது. இதனை மீட்பதற்கு முன்னாள் மாணவர்கள் பலரும் போராடி வந்தார்கள்.

சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக மதுரை பொதுக்கூட்டத்தில் நான் பேசுகிறபோது சொன்னேன், 'கழக அரசு அமைந்ததும் தேவர் கல்லூரி தனிநபர் பிடியில் இருந்து மீட்டு அதற்கு ஒரு விடிவுகாலத்தை ஏற்படுத்துவேன், என்று உறுதிமொழி அளித்தேன். 'உங்கள் தொகுதியில் ஸ்டாலின்' நிகழ்ச்சியிலும் கோரிக்கை மனுக்கள் என்னிடத்தில் தரப்பட்டன.

ஆட்சி அமைந்ததும், தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் ஒழுங்காற்றுச் சட்டப்படி, அரசாணை எண் 146இன்கீழ்க் கல்லூரியை நிர்வகிக்க தனி அலுவலரை நியமித்திருக்கிறோம். என்ன நோக்கத்துக்காக மூக்கையாத்தேவர் அவர்களும், செல்லப்பாண்டியன் அவர்களும் இதனை உருவாக்கினார்களோ, அதனடிப்படையில் கல்லூரியை வளர்த்து, இந்தப் பகுதி மக்கள் பயனடையக்கூடிய வகையில் அதை நடத்திக்

காட்டுவோம் என்று அந்த உறுதியை இந்த மேடையில் நான் கூறுகிறேன்.

இப்படி ஒவ்வொருவருடைய தேவைகளையும் கேட்டுக் கேட்டு- ஒவ்வொரு பகுதியின் பிரச்சினையையும் அறிந்து, அறிந்து நிறைவேற்றித் தரும் அரசாக நம்முடைய அரசு செயல்பட்டு வருகிறது. இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத எதிர்கட்சித் தலைவர் அவர்கள், "திமுக ஆட்சிக்கு வந்ததும் எந்தச் சாதனையையும் செய்யவில்லை - எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை" என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். சில மாதங்கள் வரைக்கும் என்ன சொன்னார் என்றால், விடுபட்ட சில வாக்குறுதிகளை மட்டும் எடுத்து வைத்துக் கொண்டு "இதை நிறைவேற்றவில்லை, அதை நிறைவேற்றவில்லை" என்று சொல்லிவிட்டு இருந்தார், சொல்லிக்கொண்டு இருந்தார் என்று சொல்லக்கூடாது, புலம்பிக் கொண்டிருந்தார். அதையும் நாம் நிறைவேற்றியதும் - என்ன சொல்லுவது என்று தெரியாமல் எதையுமே நிறைவேற்றவில்லை அப்படி என்று ஒரே வரியில் சொல்லி இருக்கிறார்.

பூனை கண்ணை மூடிக்கொண்டு உலகமே இருண்டுவிட்டதா நினைக்குமாம். அதுபோல எதிர்க்கட்சித் தலைவர் நினைத்துக் கொண்டு இருக்கிறார். இவர் வேண்டுமென்றால் கண்ணை மூடிக்கொண்டு இருக்கலாம். ஆனால், தமிழ்நாட்டு மக்கள் 19 மாதத்துக்கு முன்பே விழித்துவிட்டார்கள். இருண்ட காலத்தை முடித்து வைத்து, உதயசூரியனின் காலத்தை உருவாக்கிவிட்டார்கள். எனவே, மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களின் எரிச்சல் வார்த்தைகளுக்கெல்லாம் நான் விரிவாகப் பதில் சொல்ல விரும்பவில்லை. நாங்கள் சொன்ன வாக்குறுதிகள் உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கே நேரம் கிடைக்கவில்லை. இதற்கெல்லாம் நாங்கள் பதில் சொல்லிக் கொண்டிருப்போம். ஏதோ அரசியலில் தாங்களும் இருக்கிறோம் என்று காட்டுவதற்காக நம்மை பற்றி விமர்சிக்கிறார்கள். ஆனால், எங்களை நம்பி வாக்களித்த மக்களுக்கு நாங்கள் உண்மையாக இருக்கிறோம். உணர்வுப்பூர்வமாக உழைக்கிறோம். தமிழ்நாட்டை இந்தியாவில் தலைசிறந்த மாநிலமாக ஆக்குவது ஒன்றுதான் என்னுடைய குறிக்கோள்.

கடந்த ஆண்டு இந்தியா டுடே-யில் ஓராண்டு நிறைவேற்றப்பட்ட பிறகு இந்தியாவில் இருக்கக்கூடிய முதலமைச்சர் வரிசைப்படுத்திய நேரத்தில் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தான் முதலிடம் என்று அவர்கள் கணக்கெடுத்து அறிவித்தார்கள். அப்போது நிருபர்கள் கேட்டபோது நான் சொன்னேன், எனக்கு இது பெருமையல்ல, என்னைப் பொறுத்தவரையில், நான் முதல்வனாக பொறுப்பேற்று முதலிடத்திற்கு வந்திருப்பதைவிட நான் முதல்வனாகப் பொறுப்பேற்று இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடத்திற்கு வரவேண்டும் இதுதான் என்னுடைய இலட்சியம் என்று நான் சொன்னேன். அதுதான் என்னுடைய குறிக்கோள். அதைத்தான் நாங்கள் எதிர்நோக்கி போய்க் கொண்டிருக்கிறோம்.

தொழில் வளர்ச்சியா? சிறுதொழில் மேம்பாடா? கல்வியா? சுகாதாரமா? உள்கட்டமைப்புப் பணிகளா? மகளிர் மேம்பாடா? ஒடுக்கப்பட்டவர்களுடைய மக்களின் மேம்பாடா? இளைஞர் நலனா? விளையாட்டா?

அனைத்திலும் தமிழகம் முன்னேற்றம் அடைய வேண்டும். அதற்கான திட்டங்களைத் தீட்டி வருவது மட்டுமல்ல, அந்தத் திட்டங்களால் தமிழகம் உயர்ந்து வருவதைக் கண்ணுக்கு முன்னால் நான் பார்க்கிறேன். நாள்தோறும் எங்களுக்குக் கிடைக்கும் செய்திகள் இதனை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறது. ஒன்றிய அரசாங்கத்தின் சார்பில் சில நேரங்களில் வெளியாகக்கூடிய புள்ளிவிவரங்களைப் பார்த்தீர்கள் என்றால், தமிழ்நாட்டின் வளர்ச்சி கண்ணுக்குத் தெரியும். சில தன்னார்வ அமைப்புகள் வெளியிடும் அளவீடுகளில் தமிழ்நாட்டின் வளர்ச்சி தெரியும். ஆங்கில ஊடகங்கள் வெளியிடும் கட்டுரைகளில் தமிழ்நாட்டின் வளர்ச்சியைப் பெருமைப்பட எழுதுகிறார்கள்.

இவை அனைத்தும் தமிழ்நாடு உயர்ந்து வருகிறது, எல்லாத் துறையிலும் உயர்ந்து வருகிறது, எல்லாப் பிரிவினரையும் உயர்த்தி வருகிறது என்பதற்கான திட்டவட்டமான சான்றுகளாக அமைந்திருக்கிறது! இவை அனைத்துக்கும் மேலாக, பயனடைந்த மக்களுடைய மனங்களில் உருவாகி வரும் மகிழ்ச்சியை நான் பார்க்கிறேன். தென்காசியிலிருந்து இந்த இடத்திற்கு வர எவ்வளவு நேரம் ஆகும்? மிஞ்சி, மிஞ்சிப் போனால் ஒரு 15 நிமிடத்திற்கு வந்து சேர்ந்துவிடலாம். ஆனால் இங்கு வருவதற்கு நாங்கள் ஒன்றரை மணி நேரம் ஆகியிருக்கிறது. என்ன காரணம்? வருகிற வழியெல்லாம் சாலையின் இருபுறங்களிலும், ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், மாணவர்கள், இருமருங்கிலும் நின்றுகொண்டு என்னை வரவேற்றது மட்டுமல்ல, வாழ்த்தியது மட்டுமல்ல, இந்த ஆட்சிதான் தொடரவேண்டும், இந்த

ஆட்சிதான் தொடரவேண்டும் என்று அவர்கள் என்னை ஊக்கப்படுத்திய அந்தக் காட்சியை நான் பார்த்தேன். இதுதான் நல்லாட்சியினுடைய அடையாளம்!

திட்டமிடுவது,திட்டமிட்டதைச்செயல்படுத்திக் காட்டுவது! அதை நிறைவேற்றுவதுதான் என்னுடைய நாள்தோறப் பணியாக இருக்கிறது! திட்டத்தை அறிவித்தோம் - நிதியை ஒதுக்கினோம்- அத்தோடு கடமை முடிந்துவிட்டது என்று இல்லாமல், ஒவ்வொரு நாளும் நான் அதைக் கண்காணிக்கிறேன். உரிய காலத்தில் அனைத்துத் திட்டங்களையும் முடிப்பதுதான் என்னுடைய இலக்கு என்று நான் தொடர்ந்து சொல்லி வருகிறேன். ஒவ்வொரு மாவட்டமாக சுற்றுப்பயணத்தை நடத்தி அரசு நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பல பணிகளை முடித்துக் கொண்டு வருகிறேன். திறப்பு விழா நிகழ்ச்சி, அடிக்கல் நாட்டு விழா, இதையெல்லாம் ஒவ்வொரு மாவட்டத்தில் முடித்துக் கொண்டு வருகிறேன்.

அடுத்தகட்டமாக, மாவட்டவாரியாக, இந்தத் திட்டப்பணிகள் குறித்துக் குறிப்பிட்ட மாவட்டத்திற்கு நான் வந்து ஆய்வு நடத்தத் திட்டமிட்டிருக்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்துக்கும் அறிவிக்கப்பட்ட பணிகள், நடைபெறுவதை நானே பார்த்து, அந்தப் பணிகளை முடுக்கிவிட இருக்கிறேன். அமைச்சர்களை உடன் வைத்துக்கொண்டு, அதிகாரிகள் - அலுவலர்களை நேரில் அழைத்துப் பேச இருக்கிறேன். நாங்கள் என்ன நோக்கத்திற்காக இந்தத் திட்டங்களைத் தீட்டித் தருகிறோமோ அதே நோக்கம் கடைநிலை அலுவலர்கள் வரை இருந்தால்தான் அந்தத் திட்டத்தின் நோக்கம் முழுமை அடையும்.

மக்களிடம் செல்! மக்களோடு வாழ்!

மக்களிடம் இருந்து கற்றுக் கொள்!

என்று சொன்னார் பேரறிஞர் அண்ணா.

அப்படி மக்களுக்கான அரசாக நம்முடைய அரசு செயல்படும். இங்கே அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டவாறு, திருநெல்வேலியிலிருந்து இந்த மாவட்டம் பிரிந்திருந்தாலும், இந்தத் தென்காசிக்குத் தேவையான அனைத்துத் திட்டங்களையும், நான் நிறைவேற்றித் தருவேன் அதில் யாருக்கும் எள்ளளவு சந்தேகம் இருக்க வேண்டிய அவசியமில்லை. எடுத்துச்சொன்ன உறுதிமொழிகள், கேட்டிருக்கக்கூடிய கோரிக்கைகள், அதில் எடுத்துச்சொன்ன பல்வேறு பிரச்சினைகள் இவையெல்லாம் ஏற்கெனவே வராமலில்லை. வந்திருக்கிறது. இருந்தாலும், நினைவுபடுத்தியிருக்கிறார்கள், சட்டமன்றத்தில் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அதற்குரிய நடவடிக்கையை நிச்சயமாக இந்த அரசு எடுக்கும், அதை நிறைவேற்றித் தருவோம், தென்காசி மாவட்டத்தினுடைய முன்னேற்றத்திற்கு நிச்சயமாக இந்த அரசு துணை நிற்கும், நான் அதற்குத் துணை நிற்பேன் என்ற அந்த உறுதியை மாத்திரம் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் ஒரு முறை என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து விடை பெறுகிறேன்!

தூய்மைப் பணியாளர்களின் நலன் காக்கும் "தூய்மைப் பணியாளர் மேம்பாட்டுத் திட்டம்"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கிவைத்தார் - 09.12.2022

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 09.12.2022 அன்று நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் மதுரை மாநகராட்சி அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாட்டில் உள்ள தூய்மைப் பணியாளர்களின் நலன் காக்கும் தூய்மைப் பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கி வைத்து, 53,301 தூய்மைப் பணியாளர்களுக்குப் பாதுகாப்பு உபகரணங்களை வழங்கிடும் அடையாளமாக 5 தூய்மைப் பணியாளர்களுக்குப் பாதுகாப்பு உபகரணங்களை வழங்கினார்.

நமது நகரங்களை ஆரோக்கியமாக வைத்திருப்பதில் முன்னணியாக தூய்மைப் பணியாளர்கள் உள்ளனர். இருப்பினும், அவர்கள் பல சமூகப் பொருளாதார சவால்களை எதிர்கொள்கின்றனர். சமூகத்தால் ஒதுக்கப்பட்ட போதிலும், தூய்மைப் பணியாளர்கள் நமது சுகாதார உள்கட்டமைப்பைப் பராமரிக்க தங்களை முழுமையாக அர்ப்பணிக்கும்பொழுது சில நேரங்களில் எதிர்பாராத ஆபத்தை எதிர் கொள்கிறார்கள். எனவே, தூய்மைப் பணியாளர்களின் சமூக, பொருளாதார வளர்ச்சி மற்றும் வாழ்வினை மேம்படுத்தும் பொருட்டு 2022-2023ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையில், "நகரம் தூய்மையாக இருப்பதற்கு நாள்தோறும் அயராது உழைத்து வரும் தூய்மைப் பணியாளர்கள் மீது இவ்வரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. இவர்களின் வாழ்வினை மேம்படுத்தவும், பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக தூய்மைப் பணியாளர்கள் மேம்பாட்டுத்திட்டம் செயல்படுத்தப்படும். அவர்களுக்கான பல்வேறு அரசு நலத்திட்டங்களை ஒருங்கிணைத்து, பயன்பெறச் செய்யவும், அவர்களின் குழந்தைகள் முறையான கல்வி பெறுவதை உறுதி செய்யவும், இயந்திரமயமாக்கப்படும் தூய்மைப்பணியில் அவர்களுக்குத் தேவையான திறன் பயிற்சியினை வழங்கி அவர்களை அப்பணியில் ஈடுபடுத்தவும் விருப்பத்தின் அடிப்படையில் அவர்களுக்கு

மாற்றுத்தொழில் தொடங்கவும் வங்கிகள் மூலம் கடன் உதவி வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தூய்மைப் பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கி வைத்து, இத்திட்டத்திற்கான இலட்சினையை வெளியிட்டார். பின்னர், தூய்மைப் பணியாளர்களைக் கண்டறிந்து கணக்கெடுக்கும் பணியினை மேற்கொள்வதற்கான தூய்மைப் பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்ட மொபைல் செயலியையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஐந்து தூய்மைப் பணியாளர்களுக்குத் தலைக்கவசம், கையுறை, கால் உறை, ஒளிரும் மேல்சட்டை ஆகிய பாதுகாப்பு உபகரணங்களை வழங்கி, தூய்மைப் பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்ட கள ஆய்வுப் பணிகள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்ட குறும்படங்களைப் பார்வையிட்டார்.

இத்திட்டத்தின் மூலம் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் 18,859 நிரந்தரப் பணியாளர்கள் மற்றும் 34,442 தற்காலிக ஒப்பந்தப் பணியாளர்கள் என மொத்தம் 53,301 பணியாளர்கள் மட்டுமல்லாமல் தனியார் துறைகள், நிறுவனங்கள் மற்றும் தூய்மைப் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து முறைசாராப் பணியாளர்களும் இத்திட்டத்தின் மூலம் பயனடைவார்கள்.

இத்திட்டத்தினை அகமதாபாத்தில் உள்ள நகர்ப்புர மேலாண்மை மையத்தின் (Urban Management Centre) உதவியுடன் சிறப்பாகச் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. நகர்ப்புர மேலாண்மை மையத்தின் உதவியுடன் தமிழ்நாட்டில் கழிவு மற்றும் கசடு தொடர்புடைய பணிகளில் ஈடுபட்டிருக்கும் தூய்மைப் பணியாளர்களின் பாதுகாப்பை மேலும் மேம்படுத்த முன்னோடித் திட்டமாகச் (Pilot basis) சென்னை மாநகராட்சியில் மண்டலம்-6 திரு.வி.க. நகரிலும், மதுரை மாநகராட்சி, புதுக்கோட்டை, பொள்ளாச்சி நகராட்சிகள், சேரன் மகாதேவி பேரூராட்சி ஆகிய 5 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை தேர்ந்தெடுத்துத் தூய்மைப் பணியாளர்களைக் கண்டறிந்து அவர்களுக்கான திட்டங்களைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதற்கட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஐந்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் தொடங்கி வைத்தார். இத்திட்டம் பின்னர், படிப்படியாகத் தமிழ்நாட்டில் உள்ள மற்ற அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் செயல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் மாநிலமெங்கும் உள்ள தூய்மைப் பணியாளர்கள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு உரிய திறன் பயிற்சிகள், அவர்களது குழந்தைகளுக்கு முறையான கல்வி வசதி வழங்குதல் மற்றும் மாற்றுத்தொழில் தொடங்க வங்கிகள் மூலம் கடன் உதவி, ஓய்வூதியம், காப்பீடு போன்ற அரசு திட்டங்களை இணைப்பதற்கான வழிமுறைகளும் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் மூலம் தூய்மைப் பணியாளர்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து, பொருளாதாரம் மேம்பாடு அடையும்.

மாநில மனித உரிமைகள் ஆணையத்தால் பெறப்பட்ட 2,45,688 புகார்களில் 2,06,762 புகார்களுக்குத் தீர்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
"சர்வதேச மனித உரிமைகள் நாள்"
செய்தி - 09.12.2022

"**ம**னித உரிமைகள்" என்ற உள்ளார்ந்த அடிப்படைக் கொள்கை உலகம் முழுவதும் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். உலகில் படைக்கப்பட்ட மனிதர்கள் அனைவரும் சமம் என்ற அடிப்படையிலும், மதிப்பு மற்றும் உரிமைகள் அனைவருக்கும் அளிக்கப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டும், அனைவரும் மனசாட்சியுடனும் சகோதர மனப்பான்மையுடனும் செயல்படவேண்டும் என்ற நோக்கில் "சர்வதேச மனித உரிமைகள் நாள்" ஆண்டுதோறும் டிசம்பர்-10 அன்று கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

1948ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை (United Nation General Assembly) பன்னாட்டு மனித உரிமைகள் பிரகடனத்தை ஏற்றுக்கொண்டதிலிருந்து, மனித உரிமைகளை நடைமுறைப்படுத்துவதில் பல நாடுகள் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளன. இதன்மூலம் மக்களின் விடுதலை, சுயமரியாதை மற்றும் மனித நேயத்தை முழுமையாக அனுபவிப்பதைத் தடுக்கும் தடைகள் அகற்றப்பட்டுள்ளன; பல நாடுகளில் இனவெறிச் சட்டங்கள் அகற்றப்பட்டுவிட்டன; பெண்களை இரண்டாம் தர நிலைக்குத் தள்ளும் சட்ட மற்றும் சமூக நடைமுறைகள் ஒழிக்கப்பட்டுவிட்டன; சிறுபான்மையினர் தங்கள் மத நம்பிக்கையை எந்தவித அச்ச உணர்வுமின்றிக் கடைப்பிடிக்க வழி ஏற்பட்டுள்ளது.

1948ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை பன்னாட்டு மனித உரிமைகள் பிரகடனத்தை ஏற்றுக்கொண்டதில் இந்தியாவின் பங்கு மகத்தானது. இதன் தொடர்ச்சியாக, இந்தியாவில் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டமானது 28.09.1993 அன்று நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின், சட்டப்பிரிவு 3, 21இன் கீழ் தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஒன்றியத்திலும், மாநில மனித உரிமைகள் ஆணையம் மாநிலத்திலும் நிறுவப்பட்டன.

மாநில மனித உரிமைகள் ஆணையம் அமைக்கப்பட்ட பல மாநிலங்களில், தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. தமிழகத்தில் மாநில மனித உரிமைகள் ஆணையம் 17.04.1997 முதல் செயல்பட்டுவருகிறது. செயல்படத் துவங்கிய முதல் ஆண்டிலேயே 2,162 புகார்கள் இந்த ஆணையத்தால் பெறப்பட்டு உரிய தீர்வுகள் காணப்பட்டுள்ளன. 1997ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் ஆகஸ்ட் 2022 வரை இவ்வாணையத்திற்கு வரப்பெற்ற 2,45,688 புகார்களில் 2,06,762 புகார்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

1993ஆம் ஆண்டின் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காகத் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. சட்டம், மனித உரிமைகள் கல்வி, உளவியல், குற்றவியல் ஆகியவற்றைப் பாடமாகப் பயிலும் கல்லூரி மாணவர்களுக்கு, தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தில் 'நிலையப் பயிற்சி' (Internship) வழங்கப்படுகிறது. மேலும், இக்கல்லூரி மாணவர்கள் மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், ஆணையத்தின் செயல்பாட்டைப் பற்றிய தகவல்களைப் பரப்புவதற்கும் ஊக்குவிக்கப்படுவது பாராட்டுக்குரியது.

இந்தியாவிலேயே மற்ற மாநில அரசுகளுக்கு முன்மாதிரியாக
“தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்”

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார் - 09.12.2022

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 09.12.2022 அன்று சென்னையில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில் நடைபெற்ற தமிழ்நாடு காலநிலை மாற்ற மாநாட்டில், தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தைத் தொடங்கி வைத்தார்.

சென்னையில் 08.12.2022 அன்று தொடங்கிய காலநிலை மாற்ற மாநாட்டில் தமிழ்நாட்டைக் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளத்தக்க மாநிலமாக மாற்றுவதற்குரிய வழிவகைகள் குறித்துப் பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசு உயர் அலுவலர்கள், காலநிலை மாற்ற வல்லுநர்கள் மற்றும் பல பன்னாட்டு நிறுவனங்களைச் சார்ந்த நிர்வாகிகள் கலந்துகொண்டு ஆலோசனை மேற்கொண்டனர்.

2021-2022ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில், காலநிலை மாற்ற மேலாண்மை மற்றும் தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, “தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்” ரூ.500 கோடிச் செலவில் தொடங்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்திருந்தது. அதன் தொடர்ச்சியாக, பசுமைத் தமிழ்நாடு இயக்கம், தமிழ்நாடு ஈரநில இயக்கம், தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் ஆகிய மூன்று முக்கிய திட்டங்களைச் செயல்படுத்தும் நோக்கத்துடன், இந்தியாவில் முதன்முதலாகத் ‘தமிழ்நாடு பசுமைக் காலநிலை நிறுவனத்தை’ (TNGCC) தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது.

மேலும், வாகனங்களிலிருந்து வெளியேறும் மாசினைக் குறைத்தல், கடலோர வாழ்விடங்களைப் புனரமைத்தல், சதுப்புநிலக் காடுகள் மற்றும் பிற சிறப்பினங்களை உருவாக்குதல், கழிவுகளிலிருந்து எரிசக்தி, பசுமை மின் உற்பத்தி செய்வதற்கான முயற்சிகள் உள்ளிட்ட கடலோரப் பகுதிகளில் உயிர்க்கவசங்களை உருவாக்குதல், காலநிலை கல்வியறிவு மற்றும் சீர்மிகு கிராமங்கள் தொடர்பான அடிப்படை ஆய்வுகளை மேற்கொள்வதற்காக 2021-2023ஆம் ஆண்டுகளில் ரூ.77.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு மார்ச் மாதம், மாவட்ட அளவில் காலநிலை இயக்கங்கள் அமைக்கப்பட்டன. குறிப்பிடத்தக்க ஒரு நடவடிக்கையாக, மாவட்ட வன அலுவலர்கள் (DFO) காலநிலை அலுவலர்களாகத் தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடற்கரைகளுக்கான நீலக்கொடி சான்றிதழ் திட்டம்

நிலையான சுற்றுலா மற்றும் ஆரோக்கியமான கடலோர நிருவாகத்தைத் திட்டமிடவும்,

மேம்படுத்தவும், கடற்கரைகளில் உள்ள மாசுக்களைக் குறைக்கவும் மற்றும் சர்வதேசத் தர அளவீட்டிற்குக் கடற்கரைகளை உயர்த்தவும் தேவையான அம்சங்களுடன் கடற்கரைகளுக்கான நீலக்கொடிச் சான்றிதழ் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தினைத் தமிழகத்தில் சீரிய முறையில் செயல்படுத்தும் வகையில், தமிழ்நாட்டில் உள்ள பத்துக் கடற்கரைகளுக்கு நீலக்கொடிச் சான்றிதழ் பெறும்வகையில், பத்துக் கடற்கரைகளில் அடிப்படை ஆய்வுகளை மேற்கொள்ளும் பொறுப்பினைத் தேசியக் கடலோர நிலைத்திட்ட மேலாண்மை மையத்துக்கு வழங்குவதற்கான ஒப்பந்தக் கடிதத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

திறன்மிகு கிராமங்கள் திட்டம்

சூரிய ஒளி ஆற்றலை முழு அளவில் பயன்படுத்துதல், காலநிலை மாற்றம் தொடர்பான தகவல்களை அளித்தல், கழிவு மற்றும் நீர் மேலாண்மை, மழைநீர் சேகரிப்பு மற்றம் பசுமை மேம்பாடு ஆகியவற்றினைக் கிராமங்களில் உருவாக்கி, அந்த கிராமத்தினைத் திறன்மிகு கிராமமாக மாற்றும் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் உள்ள 10 கிராமங்களைத் தேர்வு செய்து, அவற்றிற்கான விரிவான திட்ட அறிக்கையைத் தயாரித்துச் செயல்படுத்த, உலக வள ஆதார நிறுவனத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒப்பந்தக் கடிதத்தை வழங்கினார்.

பசுமைப் புத்தாய்வுத் திட்டம்

காலநிலை மாற்றத்தின் சவால்களை எதிர்கொள்ளவும், அதனை ஏற்று வாழ்வதற்குரிய பல்வேறு உத்திகளைக் கண்டறியவும், மாவட்ட நிருவாகத்துடன் இணைந்து, மாவட்டத்திற்கு உகந்த காலநிலை மாற்றம் தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்கும், மாவட்டந்தோறும் பசுமைத் திறனாளர்கள் தேர்வு செய்யும் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காகவும், பசுமைத் திறனாளர்களைத் தேர்வு செய்யும் பொறுப்பினை, அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆற்றல் கல்வி மையத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒப்பந்தக் கடிதத்தை வழங்கினார்.

பசுமைத் தொன்மங்கள் திட்டம்

தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் ஒரு பகுதியாக பசுமைத் தொன்மங்கள் திட்டம் நிறைவேற்றப்படும். இத்திட்டத்தில் முதலாவதாக, தமிழகத்தில் இரு கோவில்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுக் காலநிலை மாற்றத்தை ஏற்றுக்கொள்ளும் வகையில் மாதிரி கோவில்களாக உருவாக்கப்படும். இவை மீள்திறன், நீர் உபயோகத்திறன், கழிவு மேலாண்மை போன்ற பல்வேறு வகையில் காலநிலை மாற்றத்தைத் தாங்கக்கூடியவையாக மாற்றப்படும்.

பசுமைப் பள்ளிகள் திட்டம்

மாணவர்களிடையே சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மரங்களின் அருமை பெருமைகளை உணர்த்தவும், மரபுசாரா எரிசக்தியின் பயன்பாட்டை உணரவும், மாநிலத்தில் 25 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு, அப்பள்ளிகளில் சூரிய ஒளி தகடுகளை அமைத்து, அதன்மூலம் பெறப்படும் மின்சாரத்தைப் பள்ளிகளின் பயன்பாட்டுக்கும், மின் மோட்டார் மூலம் அங்குள்ள மூலிகை, காய்கறித் தோட்டங்கள் அமைத்து, அப்பள்ளிகள் பசுமைப் பள்ளிகளாக செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்தும் முகமையாகப் பள்ளிக்கல்வித்துறை செயல்பட்டு வருகிறது.

இவ்விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு, காலநிலை மாற்ற இயக்கத்தின் திறன்மிகு காலநிலைக் கிராமங்கள், பசுமைப் பள்ளிகள், பசுமைத் தொன்மங்கள் ஆகிய திட்டங்களைத் தொடங்கிவைத்து, காலநிலை மாற்றத்திற்கான முன்னெடுப்புகள் குறித்த குறும்படத்தைப் பார்வையிட்டார்.

இவ்விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய மாலை வணக்கத்தை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டுக்காக மட்டுமல்ல, இந்தியாவுக்காக மட்டுமல்ல, உலகத்தின் நன்மைக்காக இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இயற்கைக்கு எல்லை இல்லை. இயற்கைக்கு வரையறை இல்லை. இயற்கை என்பது அனைவருக்கும் பொதுவானது. இயற்கையைக் காக்க வேண்டிய கடமையும் அனைவருக்கும் உரியது என்கின்ற அடிப்படையில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது இந்தியாவுக்கான பிரச்சினை மட்டுமல்ல! இது உலகளாவிய பிரச்சினை! அரசாங்கம் மட்டுமே தீர்த்துவிடக்கூடிய பிரச்சினை அல்ல! அதனால்தான், நார்வே நாட்டைச் சேர்ந்த திரு. எரிக் சோல்ஹிம்; இந்தியத் திட்டக் குழுவின் முன்னாள் துணைத்தலைவர் திரு. மாண்டேக் சிங் அலுவாலியா அவர்கள், அரசு சாரா உறுப்பினர்களும் இணைந்து இது ஒரு மாநாடாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இன்றைக்கு ஐ.நா. அமைப்பாக இருந்தாலும், உலகின் பல நாடுகளாக இருந்தாலும் ஒரே ஒரு பிரச்சினையைப் பற்றித்தான் அனைவரது கவலையும்! அதுதான் காலநிலை மாற்றம்! மானுடத்தின் மிக முக்கியப் பிரச்சினையாக காலநிலை மாற்றம் என்பது இருக்கிறது. இதனைத் தமிழ்நாடு அரசும் மிக முக்கியப் பிரச்சினையாகக் கருதுகிறது என்பதை ஆட்சிக்கு வந்தது முதல் நான் தொடர்ந்து சொல்லி வருகிறேன். அதனால்தான், இந்தியாவிலேயே மற்ற மாநில அரசுகளுக்கு முன்மாதிரியாகக் காலநிலை மாற்ற இயக்கத்தைத் துவக்கி வைப்பதில் நான் பெருமை அடைகிறேன்.

இதனை ஒரு வரலாற்றுக் கடமையாக மட்டுமல்ல; எனது வாழ்க்கைக் கடமையாகவும் நான் பார்க்கிறேன். "நிலம் - தீ - நீர் - வளி - விசும்பொடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்" என்று தொல்காப்பியம் தொடங்கி, "நீரின்றி அமையாது உலகம்" என்ற வள்ளுவம் வரை, சூழலைப் போற்ற வேண்டியதன் தேவையை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வலியுறுத்தியது தமிழ்ச் சமூகம். அதனால்தான், அந்தப் பாதையில் நமது அரசு இன்று செயல்பட்டு வருகிறது.

உங்களை நீங்கள் எப்படி அடையாளப்படுத்திக் கொள்வீர்கள் என்று தந்தை பெரியாரிடம் கேட்டபோது, "நான் இயற்கை மனிதன்" என்று சொன்னார். "செயற்கையான அடையாளங்கள் எதுவும் எனக்குக் கிடையாது" என்றார். "மானுடப்பற்று மட்டுமே எனக்கு உண்டு" என்று சொன்னார். அத்தகைய இயற்கை மனிதர்களாக; மானுடப்பற்று மட்டுமே கொண்டவர்களாக நாம் வாழ வேண்டும். வாழ்ந்தால் எந்தப் பிரச்சினையும் இல்லை என்பதை நமக்கு இயற்கை உணர்த்திக் கொண்டே இருக்கிறது.

அதிகமான வெயில், அதிகமான மழை, காலம் தவறிப் பெய்யக்கூடிய மழை, மழை பெய்யாமலே போவது, அதிகப்படியான வெப்பம், வெள்ளம், சுனாமி, நிலநடுக்கம், நிலச்சரிவு, புதிய புதிய நோய்கள், உடல்நலமும் மனநலமும் பாதிக்கப்படுவது, உணவுப்பொருள் தட்டுப்பாடு, மண் வளம் குறைதல், காற்று மாசுபடுதல் இவை அனைத்தும் அதிகமாக ஏற்படுவதை இன்று கவனித்து வருகிறோம்.

- பெங்களூர், சென்னை மட்டுமல்ல; உலக அளவில் பல பெருநகரங்களில் ஏற்படும் வெள்ளம்,
- தெலுங்கானாவில், உத்தராகண்டில் மேகவெடிப்பால் ஏற்பட்ட உயிரிழப்புகள்,
- கேரளாவில் ஏற்படும் நிலச்சரிவுகள்

- என எல்லாப் பக்கமும் நாம் பேரிடர்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

வளிமண்டலத்தில் உள்ள கார்பனின் அளவு அதிகரித்ததன் காரணமாக, புவியின் வெப்பநிலை அதிகரித்துக் காலநிலையில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்கின்றன. இதன் காரணமாக, மனிதர்கள் மட்டுமல்லாமல் பல்லுயிர்களும் பாதிக்கப்பட்டன. இந்தப் பாதிப்பின் விளைவுகளைத்தான் நேரடியாகக் கண்டு வருகிறோம். இவை நமக்கு மட்டுமல்ல, அனைத்து மாநிலங்களுக்கும், அனைத்து நாடுகளுக்குமான பிரச்சினை!

காலநிலை மாற்றத்தை உலகம் எதிர்கொள்ள, அதன் தாக்கத்தை மட்டுப்படுத்த, 2050ஆம் ஆண்டுக்குள் கார்பன் சமநிலையை எட்டவேண்டும் என்று பல்வேறு பன்னாட்டு ஆய்வுகளும் உச்சி மாநாடுகளும் அறிவுறுத்துகின்றன.

கடந்த ஆண்டு க்ளாஸ்கோவில் (Glasgow) நடைபெற்ற சர்வதேச உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட இந்தியப் பிரதமர் அவர்கள், "இந்தியா வரும் 2070ஆம் ஆண்டிற்குள் கார்பன் சமநிலையை எட்டிவிடும்" என்று அறிவித்திருந்தார். இது எவ்வளவு தீவிரமான பிரச்சினை என்பதைத்தான் பிரதமரின் உரையும் உணர்த்துகிறது.

கடந்த ஆண்டு கழக அரசு பொறுப்பேற்றதும் பல முன்னெடுப்புகளை அறிவித்துச் செயல்படுத்த ஆரம்பித்துள்ளது. இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் முன்னெடுக்காத பல்வேறு செயல்களை நமது திராவிட மாடல் அரசு மேற்கொண்டு வருகிறது.

- துறையின் பெயரைச் "சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை" என்று அறிவித்தோம்.
- தமிழகத்திற்கான காலநிலைத் திட்டத்தை அறிவித்தோம்.
- நிதிநிலை அறிக்கையில் அதற்கென ரூ.500 கோடியை ஒதுக்கி இருக்கிறோம்.
- தமிழ்நாடு பசுமை இயக்கத்தின் மூலம் தமிழகத்தின் காடுகளின் பரப்பளவை 21 விழுக்காட்டில் இருந்து 33 விழுக்காடாக அடுத்த பத்தாண்டுகளுக்குள் உயர்த்த திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தைச் சில மாதங்களுக்கு முன்னர் நான் துவக்கி வைத்தேன்.
- இதுவரை சுமார் 2.8 கோடி மரக்கன்றுகள் பதியன் போடப்பட்டு, அவற்றை நடும் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் தமிழ்நாட்டின் பசுமைப் போர்வையை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், கார்பனை உள்வாங்கவும் பயன்படும்.
- பொதுவாகவே வெப்பமண்டல நாடுகளில் உள்ள காலநிலையை, பருவங்களைக் கணிப்பது கடினம். இதற்காகவே அண்ணா பல்கலைக்கழகத்தில் "காலநிலை ஸ்டூடியோ" ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டுக்கு எனத் தனியான மாதிரிகளை உருவாக்கவும் அதற்கான ரேடார்களை அமைக்கவும் ரூ.10 கோடியை ஒதுக்கி, திட்டங்களை முன்னெடுத்திருக்கிறோம்.
- ஒரு மாநிலத்தைக் கார்பன் சமநிலையை எட்டிய மாநிலமாக அறிவிக்க வேண்டுமெனில், அம்மாநிலத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளும் கார்பன் சமநிலையை அடையவேண்டும். தமிழ்நாட்டில் உள்ள 10 கிராமங்களை மீள்தன்மையுடைய கிராமங்களாக மாற்றுவதற்குத் திட்டம் இன்று துவக்கப்படுகிறது.
- காலநிலை மாற்றம் குறித்துப் பள்ளி - கல்லூரி மாணவர்கள், தொழில்முனைவோர் எனச் சமூகத்தின் அனைத்து மக்களுக்கும் கொண்டுசேர்க்க "காலநிலை அறிவு இயக்கத்தை" (Climate literacy) தமிழகத்தில் செயல்படுத்தப்போகிறோம். அதற்கான அறிவிப்புகள் விரைவில் வெளிவரும்.
- கடல் அரிப்பைத் தடுக்கவும், கடற்கரையின் பல்லுயிரியத்தைப் பேணவும் பனை மரங்களை நடும் திட்டம் செயல்படுத்தப்படும்.
- பல்லுயிரியத்தைப் பாதுகாப்பதை இந்த அரசினுடைய முக்கியமான கடமையாகக் கருதுகிறோம். கடந்த பல ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் ராம்சார் அங்கீகாரம் பெற்ற ஒரே ஒரு சதுப்புநிலம்தான் இருந்தது. அதை நாங்கள் 13 ஆக உயர்த்தியுள்ளோம்.
- அருகிவரும் உயிரினங்களான கடல்பசு, தேவாங்கு உள்ளிட்ட உயிரினங்களைப் பாதுகாக்க காப்பகங்களை ஏற்படுத்தியுள்ளோம்.
- இந்த அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைக்க இந்தியாவிலேயே முதன்முறையாக "Tamil Nadu Green Climate Company" உருவாக்கப்பட்டு இவற்றைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.
- மக்கள் கடைகளுக்குச் செல்லும்போது வீட்டிலிருந்தே பைகளை எடுத்துச் செல்லவேண்டும், பிளாஸ்டிக் பைகளைத் தவிர்க்க வேண்டும் என்பதற்கான குறியீடாக "மீண்டும் மஞ்சப்பை" இயக்கம் துவக்கப்பட்டுள்ளது.

இவை அனைத்தையும் ஒருங்கிணைக்க, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள, "காலநிலை மாற்ற நிருவாகக் குழு" எனது தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. அதில் பல்வேறு விஷயங்களை ஒருங்கிணைத்துச் செயல்படுத்த அரசு சாராத பலரும் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

இந்நிலையில் இன்னும் சில முக்கியமான அறிவிப்புகளை இன்று வெளியிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

- "பசுமைத் திட்டங்களுக்கான" அனுமதியை இனிமேல் ஒற்றைச் சாளர முறையில் வழங்கும் வகையில், தொழில்துறையில் உள்ள Guidance TN-ஆல் திட்டங்கள் வகுக்கப்படும். இந்த முடிவு 2030க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை ஒரு ட்ரில்லியன் டாலராக உயர்த்தும் முயற்சியில் பெரும் பங்கு வகிக்கும்.
- புதுப்பிக்கக்கூடிய ஆற்றலைப்ப யன்படுத்தி உற்பத்தியாகும் மின்சாரத்தை அதிகரிக்கவும் அவற்றை எடுத்துச்செல்லவும் தனியான பசுமை வழித்தடம் (Green Corridor) உருவாக்கப்படும்.
- காற்றாலைகளைப் புதுப்பிப்பதற்கான புதிய கொள்கை (Re-Powering Policy) எரிசக்தித் துறையால் வெளியிடப்படும்.
- அனைத்துத் திட்டங்களையும், கொள்கைகளையும் காலநிலை மாற்றப் பார்வையில் பார்த்து, ஆய்வுசெய்து செயல்படுத்தவிருக்கிறோம்.
- தமிழ்நாடு அரசு ரூ.1,000 கோடியில் Green Climate Fund - பசுமை நிதியம் ஒன்றை உருவாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். அதன் முதற்கட்டமாக, ரூ.100 கோடி தமிழ்நாடு அரசின் சார்பில் வழங்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் சூழல் சார்ந்த கட்டுமானங்களை உருவாக்குவதற்குத் தேசிய அளவிலும் உலக அளவிலும் நிதி திரட்ட இந்த நிதியம் பயன்படுத்தப்படும்.
- காலநிலை மாறுபாடு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, சுழற்சிப் பொருளாதாரம், வளங்குன்றா வளர்ச்சி போன்ற துறைகளில் புதிய நிறுவனங்களைத் துவங்குவோருக்குத் தமிழ்நாடு அரசு சிறப்புத் திட்டங்களை அறிவிக்கும்.

தமிழ்நாடு இந்தியாவிற்குச் சமூகநீதியில் மட்டுமல்ல, சூழலியல் நீதியிலும் வழிகாட்டும் என்று உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். வளர்ச்சி - தொழில் மேம்பாடு என்பதில் ஒரு பக்கம் அக்கறை செலுத்தினாலும் இன்னொரு பக்கம் சுற்றுச்சூழல், இயற்கை ஆகியவற்றிலும் அக்கறை செலுத்தியாக வேண்டும். இயற்கையுடன் இயைந்த வாழ்வும் வேண்டும். இயற்கையைக் கெடுக்காத வளர்ச்சியும் வேண்டும். இதுதான் எங்கள் அணுகுமுறை!

இந்தியா கார்பன் சமநிலையை அடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ள 2070ஆம் ஆண்டிற்கு முன்னராகவே தமிழ்நாடு கார்பன் சமநிலையை அடையும் என்று சொல்லிக்கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன். அதற்கான அனைத்துத் திட்டங்களையும் அரசு செயல்படுத்தும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சுற்றம் காப்போம்! சூழலையும் காப்போம்!

மண்ணையும் காப்போம்! மக்களையும் காப்போம்!

இயற்கையைக் காப்போம்! இன்னுயிர் காப்போம்!

பல்லுயிர் காப்போம்! மானுடப் பண்பாடு காப்போம்!

அரசுப் பள்ளிகளை மேம்படுத்தும் "நம்ம ஸ்கூல் ஃபவுண்டேசன்" திட்டம்

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டின் கல்வித் துறை அமைச்சராக இருந்து எண்ணற்ற பல சாதனைகளை அந்தத் துறையில் நிகழ்த்தியிருக்கக்கூடியவர்தான் இனமானப் பேராசிரியர் அன்பழகன் அவர்கள். அவருடைய நூற்றாண்டை நாம் இன்றைக்கு அரசின் சார்பிலே மட்டுமல்ல, தமிழருடைய உள்ளங்களிலும், இல்லங்களிலும் அந்த விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இந்த ஆண்டு அரசின் சார்பில் பல நிகழ்ச்சிகளை நாம் நடத்தியிருக்கிறோம், நடத்திக் கொண்டிருக்கிறோம். இன்று காலை அவருடைய நூற்றாண்டு நிறைவையொட்டி, நுங்கம்பாக்கத்தில் இருக்கக்கூடிய பள்ளிக் கல்வி இயக்ககத்திற்குப் பேராசிரியருடைய பெயரைச் சூட்டி மகிழ்ந்திருக்கிறோம். பேராசிரியருடைய பெயரால் ஏற்கெனவே ரூ.7,500 கோடி மதிப்பீட்டிலான பேராசிரியர் அன்பழகனார் பள்ளிகள் மேம்பாட்டுத் திட்டத்தையும் செயல்படுத்தத் தொடங்கியிருக்கிறோம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் 19.12.2022 அன்று, சென்னையில் பள்ளிக் கல்வித் துறை சார்பில் "நம்ம ஸ்கூல் ஃபவுண்டேசன்" திட்டத்தைத் தொடங்கி வைத்து, ஆற்றிய உரை.

அதன் தொடர்ச்சியாகத்தான் இன்று அவருடைய பிறந்தநாளில், அரசுப் பள்ளிகளைத் தனியார் பங்களிப்போடு மேம்படுத்தும் மற்றுமொரு முன்னோடித் திட்டம் இங்கு தொடங்கப்படுகிறது.

உங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத காலம் எது என்று யாரைக் கேட்டாலும், "அது என்னுடைய பள்ளிக் காலம்தான்" என்று பலரும் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். பள்ளிப் பருவத்தில் துள்ளித் திரிந்த அந்தக் காலத்தைத்தான் யாராலும் மறக்க முடியாது. அதேபோல், உங்களுக்கு நெருக்கமான நண்பர் யார் என்று கேட்டால், பெரும்பாலும் பள்ளிக்காலத் தோழர்களைத்தான் நாம் சொல்வதுண்டு. நேற்றுப் பார்த்தவரைக்கூட மறந்துவிடுவோம். ஆனால், நாம் குழந்தைகளாக இருந்தபோது, கற்றுக் கொடுத்த ஆசிரியர்கள் பெயரை நிச்சயமாக நாம் மறக்க மாட்டோம். அவர்கள் முகங்கள் நமக்கு அடிக்கடி வந்து நிழலாடும். அந்தளவுக்கு ஒவ்வொருவருடைய

வாழ்விலும் வசந்தகாலம் என்பது பள்ளிக் காலம்தான்.

நாம் இந்தளவிற்கு உயர்வதற்கு, இந்த உயரத்தை அடைவதற்கு உதவியாக இருந்தது அந்தப் பள்ளிக்கூடம்தான். அந்தப் பள்ளிக் கூடங்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டாமா? என்ற உன்னதமான நோக்கத்தோடு "நம்ம ஸ்கூல் ஃபவுண்டேசன்" நம்ம ஊர் பள்ளி என்ற பெயரில் இந்த அமைப்பு தொடங்கப்பட்டிருக்கிறது.

எல்லாவற்றையுமே அரசாங்கம் செய்துவிட முடியாது. மக்களும் கைகோர்க்க வேண்டும்; பயன்பெற்றவர்கள் தங்களது நன்றியின் அடையாளத்தைத் தெரிவிக்கலாம். அதற்கான வாசற்படிதான் இந்த நம்ம ஊர் பள்ளித் திட்டம்!

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்து, அனைத்துத் துறைகளிலுமே மிகப்பெரிய வளர்ச்சியை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கிறோம்.

நம்முடைய மதிப்பிற்குரிய திரு. வேணு சீனிவாசன் அவர்கள், இந்தியா டுடே-ல் இந்த வாரம் வெளிவந்திருக்கக்கூடிய ஒரு கருத்துக் கணிப்பைச் சுட்டிக்காட்டி, அதிலே தமிழகம் முன்னோடி மாநிலமாக இந்தியாவில் வந்திருப்பதை எடுத்துச் சொல்லி எனக்கு வாழ்த்துச் சொன்னார், பெருமைதான் எனக்கு. நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள், நாம், ஆட்சிக்கு வந்து முதல் ஆண்டு இதே இந்தியா டுடே ஒரு கருத்துக் கணிப்பை வெளியிட்டது. அப்படி வெளியிட்டபோது, நம்பர் ஒன் முதலமைச்சர் இந்தியாவிலேயே தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர்தான் என்று ஒரு கருத்துக் கணிப்பை முதல் ஆண்டு வெளியிட்டார்கள். அப்போது பத்திரிகை நிருபர்களெல்லாம் இதை எப்படிப் பார்க்கிறீர்கள் என்று என்னிடத்தில் வந்து கேட்டார்கள், உள்ளபடியே பெருமைப்படுகிறேன், ஆனால், இதைவிட எனக்கு என்ன பெருமை வந்து சேர வேண்டும் என்று ஆசைப்படுகிறேன் என்றால், நம்பர் ஒன் முதலமைச்சர் என்பதைவிட நம்பர் ஒன் தமிழ்நாடு என்று வர வேண்டும் என்று நான் முதல் ஆண்டே தெரிவித்தேன். அது, இந்த இரண்டாம் ஆண்டு நெருங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில், அந்தச் சூழ்நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது. அதிலே எனக்கு உள்ளபடியே பெருமை, அதற்காகத்தான் நம்முடைய திரு. வேணு சீனிவாசன் அவர்கள் எனக்கு வாழ்த்துச் சொல்லியிருக்கிறார்கள். அதேபோல் நீங்களும் இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்.

இன்றைக்கு பள்ளிக் கல்வித் துறையின் பணி மிக முக்கியமானதாக இருக்கிறது. தரமானக் கல்வி வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு இன்றைக்கு இரண்டாவது இடத்தில் இருந்து கொண்டிருக்கிறது. முதலிடத்திற்கு முந்துவதற்கான அனைத்துப் பணிகளையும் பள்ளிக் கல்வித் துறை இன்றைக்குச் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறது.

- அனைவருக்கும் கல்வி என்ற அடிப்படை இலக்கை மையமாகக் கொண்டு நம்முடைய அரசு செயல்பட்டு வருகிறது. 'இல்லம் தேடிக் கல்வித் திட்டம்' முழு வெற்றியை நமக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.
- செயலி மூலமாகப் பள்ளி செல்லாத பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்குள் மீண்டும் அழைத்துக் கொண்டு வரக்கூடிய ஒரு சூழலை ஏற்படுத்தியிருக்கிறோம்.
- எண்ணும் எழுத்தும் இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.
- மாதிரிப் பள்ளிகள் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- 9 முதல் 12 வரையிலான மாணவர்களுக்கு 'நான் முதல்வன்' திட்டத்தின்படிப் பயிற்சி அளிக்க இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது.
- சிறப்புக்கவனம் தேவைப்படும் குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களுக்குச் சிகிச்சையும், தேவையான பொருள்களும் கல்வியோடு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.
- 'நம் பள்ளி - நம் பெருமை' என்ற திட்டத்தை நான் இங்கே தொடங்கி வைத்திருக்கிறேன்.
- பள்ளியில் படிக்கும் குழந்தைகளின் பெற்றோர்கள், தலைமையாசிரியர், ஆசிரியர், உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகள், கல்வியாளர்கள் போன்றோரைக் கொண்டதாகப் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த வகையில் பள்ளிப் பிள்ளைகள் எந்தவிதமான தடங்கலும் இல்லாமல் மனநிறைவோடு கற்கக்கூடிய சூழலைத் திராவிட மாடல் ஆட்சி உருவாக்கித் தந்துகொண்டு இருக்கிறது.

கல்விதான் யாராலும் திருட முடியாத சொத்து. அந்த அறிவுச்சொத்தை உருவாக்கித் தந்து

வருகிறோம். இதன் தொடர்ச்சியாக, நம்ம ஊர் பள்ளித் திட்டத்தை உருவாக்கி இருக்கிறோம். அரசுப் பள்ளிகள் என்பவை அரசின் சொத்துகள் மட்டுமல்ல, அது மக்களுடைய சொத்துக்களுமாகும்!

இதனை மனதில் வைத்துத்தான் பள்ளி மேலாண்மைக் குழுக்களை அமைத்தோம். 37,558 பள்ளி மேலாண்மைக் குழுக்கள் மறுசீரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. அவை மூலம், பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள், முன்னாள் மாணவர்கள், ஊராட்சிகள் மற்றும் சமூகத்தின் நலம்விரும்பிகள் அனைவரும் ஒரு கட்டமைப்பாக, நிறுவனமாக ஒன்றிணைந்தனர். தங்கள் பள்ளிக்கு எது தேவையோ அதனை அவர்களே உருவாக்கித் தர முன்வந்துள்ளார்கள்.

இந்த எண்ணங்களை அரசு மட்டுமே தனியாகச் செய்திட முடியாது. உங்கள் அனைவருடைய உதவியும் ஆதரவும் இதற்கு நிச்சயம் தேவை. இப்போதும் எப்போதும் தமிழ்நாட்டுக் குழந்தைகளுக்கு ஆதரவு அளிக்க ஒன்றிணைய விரும்பக்கூடிய உங்கள் எல்லோருடனும் கைகோர்க்க நம்முடைய அரசு விரும்புகிறது. உள்ளூர் மக்களுடன் முன்னாள் மாணவர்களுடன், தொழிற்துறையுடன், உலகமெங்கும் வாழும் தமிழர்களுடன் கைகோர்ப்பதற்காகவும் 'நம்ம ஊர் பள்ளி' அடித்தளம் அமைத்திருக்கிறது. நீங்கள் செலுத்தக்கூடிய ஒரு ரூபாய் நன்கொடையும் கூட கூடுதல் வெளிப்படைத்தன்மையுடனும், கடமையுணர்வுடனும், நம் பள்ளிகள், நம் ஆசிரியர்கள், நம் குழந்தைகளின் வளர்ச்சிக்கென அது செலவிடப்படும்.

இது அரசுக்கும் உங்களுக்குமான நீடித்த உறவாக இருக்கும் என்று நான் உறுதியோடு கூறுகிறேன். உங்களுடைய சி.எஸ்.ஆர். நிதி பயனுள்ள முறையில் செலவிடப்படுவதை உறுதி செய்யுங்கள். எங்கள் தரப்பிலிருந்து உங்கள் பங்களிப்பைத் தமிழ்நாட்டுக் குழந்தைகளின் எதிர்காலத்திற்காகப் பொறுப்புடன் பயன்படுத்துவோம் என்று நான் உறுதி அளிக்கிறேன்.

நம்ம ஊர் பள்ளி தொடங்கி வைக்கும் இந்த நேரத்தில், உங்கள் இளமைக் காலத்தில் நீங்கள் பயின்ற பள்ளிக்கும், உங்கள் ஊருக்குமான உறவை, நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ள Virtual pavilion வழியாகப் புதுப்பிக்குமாறு உலகெங்கும் வாழும் தமிழ் மக்களை இந்த விழாவின் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் தமிழ்நாட்டிலும் உங்கள் சொந்த ஊரிலும் உங்கள் வேர்கள் வலுப்படவேண்டும். உங்களை வளர்த்த உங்கள் மண்ணுக்கு நீங்கள் திருப்பிச் செய்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பு நம்ம பள்ளி வாயிலாக நமக்கெல்லாம் கிடைத்திருக்கிறது. நம்முடைய குழந்தைகள் வளர்ந்து உங்கள் நிறுவனங்களையும், பெருநிறுவனங்களையும், தமிழ்நாட்டின் கிராமங்களையும், நகரங்களையும் முன்னேற்றுவார்கள்; அவர்கள் நம் வளத்தையும், நம்பிக்கையையும் திட்டங்களையும் வளர்த்தெடுப்பார்கள்.

தமிழ்நாட்டில் அதிகம் கொண்டாடப்படும் இருவர் நம்ம ஊர் பள்ளி நடைபோட முன்வந்துள்ளதற்கு நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

தமிழ்நாட்டின் தொழிற்துறையில் மிகச் சிறப்பான நிலையில், முன்னிலையில் இருக்கக்கூடிய திரு. வேணு சீனிவாசன் அவர்கள், இந்த நம்ம ஸ்கூல் ஃபவுண்டேஷனின் தலைவராக இருப்பதும், ஃபவுண்டேஷனின் தூதுவராக கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் அவர்கள் இருப்பதும் நமக்கெல்லாம் கிடைத்திருக்கக்கூடிய பெருமை!

அறிவுப்பூர்வமான விளையாட்டான செஸ் விளையாட்டு வீரராகத் தமிழ்நாட்டுக்கும், இந்தியாவுக்கும் பல்வேறு பெருமைகளைத் தேடித் தந்த திரு. விஸ்வநாதன் ஆனந்த் அவர்களைவிட சிறந்த தூதுவர் வேறு யாரும் நிச்சயமாக இருக்க முடியாது என்று நாம் நம்புகிறோம்.

திரு. வேணு சீனிவாசன் அவர்களின் அறிவார்ந்த வழிகாட்டுதலிலும், திரு. விஸ்வநாதன் ஆனந்த் அவர்கள் போன்ற ஒரு தூதுவரின் துணையோடும் நம் அரசுப்பள்ளிகளை மேலும் வலுப்படுத்துவதற்காகத் தொடங்கப்பட்டுள்ள நம்ம ஸ்கூல், நம்ம பள்ளி ஃபவுண்டேஷனுக்கு நிதியுதவி செய்து, பிறருக்கு எடுத்துக்காட்டாக, ஆதரவளிக்க ஒவ்வொருவரும் முன்வருவீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நம்புவது மட்டுமல்ல, அதற்குத் தொடக்கமாக நானே முதல் நபராக எனது சொந்த நிதியிலிருந்து ஐந்து இலட்சம் ரூபாயை இந்தத் திட்டத்திற்காக நான் அளிக்கிறேன். நம்முடைய குழந்தைகளுடைய கல்விக்காக, பள்ளிகளின் வளர்ச்சிக்காகத்தான் இந்தத் திட்டம். ஆகவே என்னுடைய அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற,

நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அரசு ஊழியர்கள், தனியார் துறை ஊழியர்கள், தொழிலதிபர்கள், வணிகர்கள், திரைக் கலைஞர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பரந்த உள்ளத்தோடு தன்னுடைய பங்களிப்பினை வழங்குமாறு இந்த நிகழ்ச்சியின் மூலமாக அன்போடும், உரிமையோடும் கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

உங்கள் ஒவ்வொரு ரூபாயும் அரசுப் பள்ளிகளுக்கே செலவிடப்படும் என உறுதி கூறுகிறேன். நம் பிள்ளைகளின் கல்விக்கென உங்களிடம் நிதியுதவி வேண்டி நிற்கும் இந்தக் கோரிக்கையை ஏற்று நம் பள்ளிக்கூடங்களை மேம்படுத்துவதற்காக வாரி, வாரி வழங்கிட வேண்டும். அரசுப் பள்ளிகளின் தரம் உயர்த்துவோம், நாம் காண விரும்பிய கனவுப் பள்ளியை நாம் உருவாக்குவோம்.

"செங்கரும்பைப்போல் மக்கள் வாழ்வு தித்திக்கட்டும்"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் வாழ்த்துச் செய்தி - 14.01.2023

தாய்த் தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் இன்பம் பொங்கும் இனிய பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்!

உழவே தலை என வாழ்ந்த உழைப்புச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் நாம். மண்ணையே குணத்தால் பிரித்து நிலத்தைப் போற்றிய மக்கள் நம் முன்னோர்கள். மனிதன் மட்டுமல்ல மற்ற உயிரினத்தையும் தன்னோடு இணைத்து வாழ்ந்த சமூகம் நம்முடையது.

இனம் - மண் - மக்கள் - விளைச்சல் - உணவு - மற்ற உயிரினங்கள்- இவை அனைத்துக்கும் சேர்த்துக் கொண்டாடும் ஒற்றை விழாதான்

பொங்கல் பெருவிழா! புனைவுகள் இல்லாத பண்பாட்டுப் பெருவிழா!

வானம் கொடுத்தது; பூமி பெற்றது என்ற அன்பான உறவை நிலத்தின் மீது நின்று வான்நோக்கி கரம் குவித்து உதயசூரியனை வணங்குவதன் மூலமாக உலகுக்கு நாம் உணர்த்துகிறோம்.

புதுப்பானையில் புத்தரிசி போட்டுப் புத்தொளி ஊட்டி, அடுப்பு மூட்டிப் பானைக்கு மேலே வழிந்தோடும் அன்பு நுரையைப் போல நாடு முழுவதும் அனைவர் உள்ளங்களிலும் மகிழ்ச்சி பொங்கிப் பரவ வேண்டும் என்று விரும்புகிறேன்!

"தைப் பிறந்தால் வழி பிறக்கும்" என்பார்கள். அதனால்தான் இந்தத் தை மாதத்தைத் தமிழ் மொழியின் பெருமையைப் பறைசாற்றும் மாதமாகவும் நாம் கொண்டாடி வருகிறோம். பொங்கல் திருநாளைத் தமிழ்நாட்டு மக்கள் ஏற்றத்துடன் கொண்டாட ஆயிரம் ரூபாய் ரொக்கம், பச்சரிசி, சர்க்கரை, செங்கரும்பு எனப் பொங்கல் பரிசுத் தொகுப்பை வழங்கியுள்ளோம்.

சாதி மதப் பாகுபாடுகள் எவையும் இல்லாமல் தமிழர்கள் அனைவரும்- தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் கொண்டாடும் சமத்துவப் பொது விழாவாகவே பொங்கல் விழா என்றும் திகழ வேண்டும்!

தாய்த் தமிழ்நாட்டு மக்களின் இதயங்களில் என்றும் இன்பம் பொங்கட்டும்!

"செங்கரும்பைப்போல மக்கள் வாழ்வு தித்திக்கட்டும்" என்று கூறி அனைவருக்கும் எனது தைத்திருநாள் – தமிழர்ப் பெருநாள் பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ❖

"எல்லார்க்கும் எல்லாம்" என்ற இலக்கை நோக்கி இவ்வையகம் உயரப் பேராசிரியரின் 101ஆவது பிறந்தநாளில் உறுதி ஏற்போம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
பேராசிரியர் பிறந்தநாள் செய்தி - 19.12.2022

இனமானப் பேராசிரியர் அன்பழகனார் அவர்களின் நூற்றாண்டு விழா நிறைவு பெற்று, 101ஆவது பிறந்தநாள் இன்று! இனமானமும், தன்மானமும், மொழி உணர்வும், இன உணர்வும் பிறந்த நாள் இன்று!

ஒன்பது முறை சட்டமன்ற உறுப்பினர், 1967-1971 வரையில் திருச்செங்கோடு மக்களவைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர், இருமுறை கல்வித் துறை அமைச்சர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், சமூகநலத்துறை அமைச்சர், முத்தமிழறிஞர் கலைஞர் ஐந்தாம் முறையாக முதலமைச்சர் பொறுப்பேற்ற 2006-2011 காலத்தில் நிதியமைச்சர், 1977ஆம் ஆண்டு தொடங்கி 2020 வரையிலும் கழகத்தின் பொதுச் செயலாளர் எனத் தமிழ்நாட்டின் அரசியலிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றிலும் எவராலும் அழிக்க முடியாத் தடத்தை விட்டுச் சென்றுள்ளார் பேராசிரியர்.

சுயமரியாதை இயக்க காலந்தொட்டு - இன்றைய திராவிட மாடல் ஆட்சிக்காலம் வரையில் தனது உரையால் வழிநடத்திக் கொண்டு இருந்த பேராசிரியப் பெருந்தகை அவர்கள் இப்போதும் உணர்வால் வழிநடத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், காஞ்சி தந்த வள்ளுவன் பேரறிஞர் அண்ணா, தமிழினத் தலைவர் கலைஞர் ஆகியோரைப் போலவே இனமானப் பேராசிரியர் அவர்களின் சிந்தனையும் தொண்டும் கடந்த முக்கால் நூற்றாண்டு காலமாகத் தமிழகத்துக்கு முழுப்பயனைக் கொடுத்த மூலக்கருத்தியல் சிகரம் ஆகும். திராவிடவியல் கோட்பாட்டுக்கு விளக்கவுரை தீட்டியவர் மட்டுமல்ல, விளக்காகவும் இருந்தவர் பேராசிரியர். அவர் காட்டிய இனமான ஒளியில் நமது பயணம் தொடர்கிறது.

இந்தியத் துணைக் கண்டத்தின் நிலப்பரப்பில் தமிழன் யாருக்கும் தாழ்ந்தவனல்ல என்பதை மெய்ப்பிக்கும் தொண்டே தனது பணி என்று சொன்னவர் பேராசிரியர் அவர்கள். அத்தகைய இலக்கைக் கொண்டதாகவே திராவிட மாடல் ஆட்சி நடைபெற்று வருகிறது. முதலமைச்சர்களில் முதலிடம், மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் என்ற இலக்கைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு அடைந்துள்ளது என்றால் இதுதான் பேராசிரியர் காணவிரும்பிய கனவுத் தமிழ்நாடு.

நீதிக்கட்சிக்காலத்துச்சமூகநீதி-வகுப்புரிமை - ஆகியவை எந்தக் காலத்திலும் எந்தச் சூழலிலும் பட்டுப்போய்விட அனுமதிக்கக் கூடாது என்பதைப் பேராசிரியர் அவர்கள் மேடைதோறும் வலியுறுத்திக் கொண்டு இருந்தார்கள். சமூகநீதிக் கருத்தியல், வகுப்புரிமை இன்று இந்தியா முழுமைக்கும் ஒலிக்கும் சொல்லாக - யார் நினைத்தாலும் அதில் கை வைக்க முடியாத கருத்தியலாக இருக்கிறது.

மாநிலச் சுயாட்சி - மாநில உரிமைகள் குறித்து இந்திய நாடாளுமன்றத்தில் ஓங்கிக் குரல் கொடுத்தவர் பேராசிரியர் அவர்கள். இன்று இந்திய ஒன்றியத்தின் அனைத்து மாநிலங்களிலும் மாநிலச் சுயாட்சிக் குரல்கள் கேட்கத் தொடங்கி இருக்கிறது. அகில இந்தியக் கட்சிகளே மாநில சுயாட்சிக் கொள்கைகளைப் பேசத் தொடங்கி இருக்கும் காட்சியை இப்போது பார்க்கிறோம். நூற்றாண்டு விழா காணும் காலத்தில் பேராசிரியரின் பெரும்பாலான கனவுகள், பெரும்பாலானவர்களின் கனவுகளாக விரிவடைந்து வருகின்றன.

"ஒவ்வொரு நாளும் உறங்கப்போகுமுன் தமிழின மீட்சிக்கு இன்று நாம் என்ன செய்தோம் என்பதை எண்ணிப் பாரீர்!" என்று வேண்டுகோள் வைத்தார் பேராசிரியர் அவர்கள். இதனை மனதில் நிறுத்தி ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற இலக்கை நோக்கி இவ்வையகம் உயரப் பேராசிரியரின் 101ஆவது பிறந்தநாளில் உறுதி ஏற்போம்.

ஒடிசா மாநிலத்தில் ஜனவரி 2023இல் நடைபெறவுள்ள ஹாக்கி உலகக்கோப்பைப் போட்டிக்கான கோப்பைப் பயணம் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களிடம் காண்பித்து வாழ்த்து

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களிடம் 21.12.2022 அன்று தலைமைச் செயலகத்தில், ஒடிசா மாநிலம், புவனேஷ்வர்-ரூர்கேலாவில் 13.01.2023 முதல் 29.01.2023 வரை நடைபெற உள்ள உலகக் கோப்பை ஹாக்கி போட்டியின் (2023 Men's FIH Hockey World Cup) கோப்பையை, தமிழ்நாடு ஹாக்கி விளையாட்டுச் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் விளையாட்டு வீரர்கள் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பயணம் மேற்கொள்ளும் ஹாக்கி உலகக் கோப்பை மஹாராஷ்டிரா மாநிலம், மும்பையிலிருந்து விமானம் மூலமாகச் சென்னை வந்தடைந்தது. இந்த ஹாக்கி உலகக் கோப்பைக்குச் சென்னை விமான நிலையத்தில் ஹாக்கி விளையாட்டு வீரர், வீராங்கனைகள், தமிழ்நாடு ஹாக்கி சங்கம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அலுவலர்கள் உள்ளிட்டோர் வரவேற்பு அளித்தனர்.

ஹாக்கி உலகக்கோப்பை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி மேலும் பிரபலப்படுத்தும் வகையில், உலகக்கோப்பை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் இந்திய ஹாக்கி செயலாளர் திரு. சேகர் மனோகரன் மற்றும் நிருவாகிகள் வழங்கினர். இதையடுத்து, உலகக் கோப்பையை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இக்கோப்பையானது, தமிழ்நாட்டின் முன்னணி ஹாக்கி வீரர்கள் உள்ளிட்டோரால் அண்ணா பல்கலைக்கழகம், எம்.ஓ.பி. வைஷ்ணவா மகளிர் கல்லூரி ஆகிய இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு, மாலை மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்திற்குக் கொண்டு வரப்படும். அங்கு, பாரம்பரிய முறையில் மேள தாளங்கள் முழங்க கோப்பைக்கும், வீரர்களுக்கும் உற்சாக வரவேற்பு அளிக்கப்படும்.

பின்னர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அணி மற்றும் காவல்துறை அணிகளிடையே சிறப்புக் கண்காட்சிப் போட்டி நடைபெறவுள்ளது. கண்கவர் கலைநிகழ்சிகளும் நடைபெறவுள்ளன. அதனையடுத்து, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், ஹாக்கி உலகக் கோப்பையைக் கேரளா ஹாக்கி நிருவாகிகளிடம் வழங்குவார். இதனைத் தொடர்ந்து தமிழ்நாடெங்கும் அடுத்த 15 நாட்களில் 100 பள்ளிகளில் விழிப்புணர்வு ஹாக்கி போட்டிகளை இந்திய ஹாக்கி அமைப்பு, தமிழ்நாடு ஹாக்கி சங்கம் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இணைந்து நடத்தவுள்ளது.

தமிழறிஞர்களுக்குத் தமிழ்ச் செம்மல் விருது மற்றும் சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதுகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 21.12.2022 அன்று, தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் புதுதில்லி, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில், 'தமிழ் இலக்கியவியல்' என்ற தனித்துறை உருவாக்கிட ரூ.5 கோடிக்கான காசோலை, வாழ்ந்து கொண்டிருக்கும் மூன்று தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு நூலுரிமைத் தொகை, மறைந்த ஐந்து தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களுடைய மரபுரிமையரிடம் நூலுரிமைத் தொகை ஆகியவற்றை வழங்கினார். மேலும், 2021ஆம் ஆண்டிற்கான தமிழ்ச் செம்மல் விருதுகளை 38 தமிழறிஞர்களுக்கும், சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதுகளை 10 நபர்களுக்கும் வழங்கினார்.

ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில், 'தமிழ் இலக்கியவியல்' என்ற தனித்துறை உருவாக்கிட ரூ.5 கோடி நிதி

புதுதில்லி, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில், 'தமிழ் இலக்கியவியல்' என்ற தனித்துறை உருவாக்கிட ரூ.5 கோடிக்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சாந்திஸ்ரீ துலிப்புடி பண்டிட் அவர்களிடம் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார். (21.12.2022)

வாழ்ந்து கொண்டிருக்கும் மூன்று தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு நூலுரிமைத் தொகை வழங்கப்பட்டது

வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழறிஞர்களான திரு. நெல்லை செ. திவான், திரு. விடுதலை இராஜேந்திரன், திரு. நா. மம்மது ஆகியோரின் நூல்கள் அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டு, இவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.15 இலட்சத்திற்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மறைந்த ஐந்து தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களுடைய மரபுரிமையரிடம் நூலுரிமைத் தொகை வழங்கப்பட்டது

மறைந்த தமிழறிஞர்கள் திரு.நெல்லைகண்ணன் அவர்களின் நூல்களுக்கு ரூ.15 இலட்சத்திற்கான காசோலையும், திரு. கந்தர்வன் என்கிற நாகலிங்கம் அவர்களின் நூல்களுக்கு ரூ.10 இலட்சத்திற்கான காசோலை, திரு. சோமலெ அவர்களின் நூல்களுக்கு ரூ.10 இலட்சத்திற்கான காசோலை, முனைவர் ந. இராசையா அவர்களின் நூல்களுக்கு ரூ.10 இலட்சத்திற்கான காசோலை, தஞ்சை திரு. பிரகாஷ் அவர்களின் நூல்களுக்கு ரூ.10 இலட்சத்திற்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மறைந்த ஐந்து தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டதற்காக அவர்களின் மரபுரிமையரிடம் வழங்கினார்.

தமிழ்ச் செம்மல் விருது

2021ஆம் ஆண்டிற்கான தமிழ்ச் செம்மல் விருதுகளை, அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சி. சிவசிதம்பரம் அவர்களுக்கும், இராணிப்பேட்டை மாவட்டத்தைச் சேர்ந்த கவிஞர் மா. சோதி அவர்களுக்கும், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த புலவர் அ. மாயழகு அவர்களுக்கும், ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த திரு. முத்துரத்தினம் அவர்களுக்கும், கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு.ஆ.நாகராசன் அவர்களுக்கும், கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த முனைவர் கடவூர் மணிமாறன் அவர்களுக்கும், கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. இரா.துரைமுருகன் அவர்களுக்கும், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த புலவர் சு. கந்தசாமி பிள்ளை அவர்களுக்கும், காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மறைந்த திரு. இரா. எல்லப்பன் அவர்களின் சார்பில் அவரது குடும்பத்தினரிடமும், கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஆ. இரத்தினகுமார் அவர்களுக்கும், கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. மானூர் புகழேந்தி அவர்களுக்கும்;

சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த முனைவர் வ. தேனப்பன் அவர்களுக்கும், செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த திரு. எம்.கே. சுப்பிரமணியன் அவர்களுக்கும், சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி வே. மாணிக்காத்தாள் அவர்களுக்கும்,

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. இரா. மோகன் குமார் அவர்களுக்கும், தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுக சீதாராமன் அவர்களுக்கும், தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த கவிஞர் கண்ணிமை அவர்களுக்கும், திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. துரை. தில்லான் அவர்களுக்கும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த மறைந்த திரு. க. பட்டாபிராமன் அவர்களின் சார்பில் அவரது குடும்பத்தினரிடமும், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. வ.பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும்;

திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி தெய்வ. சுமதி அவர்களுக்கும், திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. அ.லோகநாதன் அவர்களுக்கும், திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. க. பரமசிவன் அவர்களுக்கும், திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. செ.கு.சண்முகம் அவர்களுக்கும், திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. இரெ. சண்முக வடிவேல் அவர்களுக்கும், தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த கவிஞர் அ. கணேசன் அவர்களுக்கும், தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஆ. சிவராம கிருஷ்ணன் அவர்களுக்கும், தேனி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. தேனி சீருடையான் அவர்களுக்கும்;

நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. மு. சொக்கப்பன் அவர்களுக்கும், நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சி. கைலாசம் அவர்களுக்கும், நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. போ. மணிவண்ணன் அவர்களுக்கும், புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த திரு.வீ.கே. கஸ்தூரிநாதன் அவர்களுக்கும், பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி செ. வினோதினி அவர்களுக்கும், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. நெல்லை. ந. சொக்கலிங்கம் அவர்களுக்கும், மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ச. பவுல்ராஜ் அவர்களுக்கும், விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. அ. சுப்பிரமணியன் அவர்களுக்கும், விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த மறைந்த பேராசிரியர் ப. வேட்டவராயன் அவர்களின் சார்பில் அவரது குடும்பத்தினரிடமும், வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ம. நாராயணன் ஆகிய 38 தமிழறிஞர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்ச் செம்மல் விருதுடன், விருதுத்தொகையாக தலா ரூ.25 ஆயிரத்திற்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கி, பொன்னாடை அணிவித்துச் சிறப்பித்தார்.

சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது

2021ஆம் ஆண்டுக்கான சிறந்த மொழி பெயர்ப்பாளர் விருதுகளை திரு. செ.சுகுமாரன், திருமதி செ. இராஜேஸ்வரி, முனைவர் மு. வளர்மதி, முனைவர் இராக. விவேகானந்த கோபால், முனைவர் அ.சு. இளங்கோவன். முனைவர் வீ. சந்திரன், முனைவர் ரா. ஜமுனா கிருஷ்ணராஜ், பேராசிரியர் தமிழ்ச்செல்வி, மறைந்த திரு. ந.தாஸ், முனைவர் மா. சம்பத்குமார் அவர்களின் சார்பில் அவரது குடும்பத்தினரிடமும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதுடன் ஒவ்வொருவருக்கும் விருதுத் தொகையாக இரண்டு இலட்சம் ரூபாய்க்கான காசோலை, தகுதியுரை ஆகியவற்றை வழங்கி, பொன்னாடை அணிவித்துச் சிறப்புச் செய்தார்.

ஒரு கோடியே ஒன்றாவது பயனாளிக்கு "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்தில் மருத்துவப் பெட்டகம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 29.12.2022 அன்று, திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம், சன்னாசிப்பட்டி கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தின்கீழ், ஒரு கோடியே ஒன்றாவது பயனாளிக்கு மருந்து பெட்டகத்தை வழங்கினார். மேலும், ரூ.12.39 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள மருத்துவத் துறை கட்டடங்களைத் திறந்து வைத்து, அரசு மருத்துவமனைகளில் நிறுவப்பட்டுள்ள மருத்துவக் கருவிகளின் சேவைகளையும் தொடங்கி வைத்தார்.

மக்களைத் தேடி மருத்துவம்

'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தைக் கடந்த 05.08.2021 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், சாமனப்பள்ளிக் கிராமத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின்கீழ், 45 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கு, உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு மற்றும் பிற நோய்களால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சையில் உள்ளவர்களுக்கு அவர்களின்

வீடுகளுக்கே சென்று தேவையான மருந்துகள் வழங்குதல், நோய் ஆதரவுச் சேவைகள் (Palliative Care), இயன்முறை மருத்துவச் சேவைகள் (Physiotherapy) சிறுநீரக நோயாளிகளுக்கு சுய டையாலிசிஸ் செய்துகொள்வதற்கான (CAPD) பைகள் வழங்குதல் போன்ற ஏழை எளிய மக்களுக்குத் தேவையான அனைத்துச் சுகாதாரச் சேவைகளையும் களப்பணியாளர்கள் மூலம் பயனாளிகளின் இல்லங்களிலேயே வழங்கப்படுகின்றன.

'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தின் கீழ், 10,969 பெண் சுகாதாரத் தன்னார்வலர்கள், 4,848 இடைநிலைச் சுகாதாரச் செவிலியர்கள், 2,448 சுகாதார ஆய்வாளர்கள், 2,650 ஆஷா பணியாளர்கள் சேவைகளை வழங்கி வருகிறார்கள். இத்திட்டத்திற்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட 463 வாகனங்களில், ஒரு இயன்முறை பணியாளர் மற்றும் ஒரு நோய் ஆதரவுச் செவிலியர் அடங்கிய 463 குழுக்கள் தமிழ்நாடு முழுவதும் உள்ள கிராமங்கள் மற்றும் நகர்புரங்களில் சேவைகளை வழங்கி வருகின்றன.

இத்திட்டத்தின் முதல் பயனாளியான கிருஷ்ணகிரி மாவட்டம், சாமனப்பள்ளிக் கிராமத்தில் வசிக்கும் திருமதி சரோஜா அவர்களுக்கு 05.08.2021 அன்றும், 50 இலட்சத்து ஒன்றாவது பயனாளியான செங்கல்பட்டு மாவட்டம், சித்தாளப்பாக்கம் கிராமத்தில் வசிக்கும் 75 வயதுடைய திருமதி பாஞ்சாலை அம்மாள் அவர்களுக்கு 23.02.2022 அன்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மருத்துவப் பெட்டகம் வழங்கப்பட்டது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம், சன்னாசிப்பட்டிக் கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒரு கோடியே ஒன்றாவது பயனாளியான திருமதி மீனாட்சி அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மருத்துவப் பெட்டகத்தை வழங்கினார்.

இந்தத் திட்டத்தின் சேவையை மேலும் மேம்படுத்திட 10,969 பெண் சுகாதாரத் தன்னார்வலர்கள் மற்றும் 15,366 அங்கன்வாடி மைய ஊழியர்களுக்கு இரத்த அழுத்தம் கண்டறியும் டிஜிடல் இரத்த அழுத்தக் கருவிகளை (Digital B.P. Apparatus) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்து வைத்தல்

கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.4.89 கோடிச் செலவில்

கட்டப்பட்டுள்ள மருத்துவப் பதிவேடு அறை, கருத்தரங்குக் கூடம் மற்றும் விரிவுரைக் கூடம், விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.1.50 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள கதிர்வீச்சுப் புற்றுநோயியல் பிரிவுக் கட்டடம், காஞ்சிபுரம் மற்றும் இராணிப்பேட்டை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் தலா ரூ.1.13 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குழந்தைகள் நல மாவட்ட ஆரம்ப இடையீட்டு மையங்கள், திருப்பூர் மாவட்டம், நம்பியாம்பாளையம் அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்தில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம், வேலூர் மாவட்டம், மேல்பட்டியில் மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையத்தில் ரூ.2.24 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடம், என ரூ.12.39 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள மருத்துவத் துறைக் கட்டடங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

அரசு மருத்துவமனைகளில் நிறுவப்பட்டுள்ள மருத்துவக் கருவிகளின் சேவைகளைத் தொடங்கி வைத்தல்

விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரியில் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள புற்றுநோய்ச் சிகிச்சை கதிரியக்க டெலிகோபால்ட் கருவி, செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் அரசு காசநோய் மருத்துவமனையில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள அதிநவீன சி.டி. ஸ்கேன் கருவி ஆகிய மருத்துவக் கருவிகளின் சேவைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மேலும், 2025ஆம் ஆண்டிற்குள் காசநோய் இல்லாத் தமிழ்நாடு எனும் இலக்கை அடைய, காசநோய், மருந்து எதிர்ப்புக் காசநோய் (MDR-TB) ஆகியவற்றை உடனடியாகக் கண்டறியும் CB – NAAT என்ற 46 புதிய கருவிகள் பெறுவதற்கான ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தைச் செயல்படுத்திடும் சுகாதாரப் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம்

'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தைச் செயல்படுத்திடும், பெண் சுகாதாரத் தன்னார்வலர்கள், இடைநிலைச் சுகாதாரச் செவிலியர்கள், சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் ஆஷா பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மணிகண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள மூன்று அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்பட்ட தேசியத் தரச் சான்றிதழ்கள்

தமிழ்நாட்டில் முதன்முறையாகத் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணிகண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள மூன்று அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் பெற்ற தேசிய தரச் சான்றிதழ்களை மருத்துவ அலுவலர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் காண்பித்து, வாழ்த்துப் பெற்றார்கள்.

மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு 2021-2022ஆம் ஆண்டில் ரூ.21,392.52 கோடிக் கடன் வழங்கப்பட்டு, 2022-2023ஆம் ஆண்டில் ரூ.25 ஆயிரம் கோடிக் கடன் வழங்க இலக்கு நிர்ணயம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ரூ.238.41 கோடிச் செலவில் 5,635 முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்து வைத்து ஆற்றிய உரை - 29.12.2022

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 29.12.2022 அன்று திருச்சிராப்பள்ளி, அண்ணா விளையாட்டு அரங்கில் நடைபெற்ற அரசு விழாவில், ரூ.238.41 கோடிச் செலவில் 5,635 முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, ரூ.308.29 கோடி மதிப்பீட்டிலான 5,951 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 22,716 பயனாளிகளுக்கு ரூ.79.06 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நடைபெற்ற மாபெரும் அரசு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அம்மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு முடிவுற்ற திட்டங்களைத் தொடங்கி வைத்தார். அதன் விவரங்கள்:

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் ரூ.33.96 கோடிச் செலவில் பாலகிருஷ்ணம்பட்டி, உப்பிலியபுரம், கூத்தப்பார், ச. கண்ணனூர், சிறுகமணி ஆகிய பேரூராட்சிகளிலும், இலால்குடி, மணப்பாறை ஆகிய நகராட்சிகளிலும் மேம்படுத்தப்பட்ட பூங்காக்கள் மற்றும் சாலைகள், புதிய பாலங்கள், குழந்தைகள் மையம், உயர்கோபுர மின் விளக்குகள், மணப்பாறை அரசு தலைமை மருத்துவமனையில் கூடுதல் கட்டடங்கள், வாரச்சந்தையில் நுண் உரம் தயாரிக்கும் மையம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் பஞ்சக்கரைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சர்.சி.வி. இராமன் பூங்கா, கீழ்ப்புலிவார் சாலைப் பகுதிகளில் கனரக லாரிகள் நிறுத்துமிடம் உள்ளிட்ட பல்வேறு பணிகள்:

நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் ரூ.2 கோடிச் செலவில் மருங்காபுரி ஊராட்சி ஒன்றியம், பாலக்குறிச்சி யாகபுரம் பகுதியில் தெற்கு வெள்ளாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள புதிய பாலம்;

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் தொட்டியம் வட்டம் – நத்தம், இலால்குடி நகராட்சி – பச்சாம்பேட்டை ஆகிய இடங்களில் ரூ.80 இலட்சம்

செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கால்நடை மருந்தகக் கட்டடங்கள்;

உயர்கல்வித் துறை சார்பில் திருச்சிராப்பள்ளி, ஈவெ.ரா. பெரியார் கல்லூரி வளாகத்தில் ரூ.60 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள தேர்வுக் கட்டுப்பாட்டு மையத்திற்கான புதிய கூடுதல் அலுவலகக் கட்டடம்;

ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் துறையூர் நகராட்சி – நாகூர் பச்சமலை அரசு பழங்குடியினர் நல உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளியில் ரூ.46 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள்;

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் சார்பில் உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியம் – டாப்செங்காட்டுப்பட்டி, துறையூர் ஊராட்சி ஒன்றியம் – தண்ணீர் பள்ளம், சின்னபழமலை ஆகிய இடங்களில் உள்ள அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட தொடக்கப் பள்ளிகளில் ரூ.60 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள தலைமை ஆசிரியர் அறையுடன் கூடிய வகுப்பறைக் கட்டடங்கள்;

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் ரூ.2.40 கோடிச் செலவில் திருச்சிராப்பள்ளி – கிழக்கு, மேற்கு, சிறுகாம்பூர், துறையூர், மணப்பாறை, வையம்பட்டி, வளநாடு, தொட்டியம், சோமரசம்பேட்டை, மணிகண்டம் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள வருவாய் ஆய்வாளருக்கான குடியிருப்புடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள், மணப்பாறையில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் குடியிருப்புக் கட்டடம்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் ரூ.197.58 கோடிச் செலவில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் முடிவுற்ற உட்கட்டமைப்புப் பணிகள் உள்ளிட்ட 5,598 பணிகள்;

என மொத்தம், ரூ.238.41 கோடி மதிப்பீட்டில் 5,635 முடிவுற்ற திட்டப்பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். அதன் விவரங்கள்:

உயர்கல்வித் துறை சார்பில் மணப்பாறை வட்டம், பண்ணப்பட்டி மேல்பாகம் கிராமத்தில் ரூ.14.95 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய அரசு கலை அறிவியல் கல்லூரிக் கட்டடம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ரூ.7.25 கோடி மதிப்பீட்டில் மணப்பாறை நகராட்சி – புத்தாநத்தம், திருமலையான்பட்டியில் புதிய துணைச் சுகாதார நிலையம் மற்றும் இலால்குடி அரசு மருத்துவமனையில் 50 படுக்கைகளுடன் கூடிய தாய்-சேய் நலக் கட்டடங்கள்;

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் ரூ.2.14 கோடி மதிப்பீட்டில் பூவாளூர் பேரூராட்சி, முசிறி ஊராட்சி ஒன்றியம் – புலிவலம், தாத்தையங்கார்பேட்டை ஊராட்சி ஒன்றியம் – செவந்தாம்பட்டி, உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியம் – கொப்பம்பட்டி ஆகிய இடங்களில் புதிய கால்நடை மருந்தகக் கட்டடங்கள்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் ரூ.283.95 கோடி மதிப்பீட்டில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ்ப் புதிய பள்ளிக் கட்டடங்கள் உள்ளிட்ட 5,944 பணிகள்;

என மொத்தம், ரூ.308.29 கோடி மதிப்பிலான 5,951 புதிய திட்டப்பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

உழவர் நலத்துறை சார்பில் ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டம், நுண்ணீர் பாசனத் திட்டம், நெல் விதைகளுக்கான உற்பத்தி மானியம், எண்ணெய் வித்து உற்பத்தி மானியம் என ரூ.1.16 கோடி மதிப்பில் 354 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள், வேளாண்மை பொறியியல் துறை சார்பில் பண்ணைக் குட்டை அமைத்தல், சோலார் மின் மோட்டார் அமைத்தல், மானியத்தில் மின் மோட்டார் வழங்குதல், உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு மதிப்புக்கூட்டு இயந்திரங்கள் வழங்குதல் என ரூ.2.48 கோடி மதிப்பில் 147 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள், கூட்டுறவுத் துறை சார்பில் பயிர்க்கடன், மத்தியகாலக் கடன், சம்பளச் சான்று கடன், மகளிருக்கான கடன், கைம்பெண்களுக்கான கடன் என ரூ.6.58 கோடி மதிப்பில் 715 பயனாளிகளுக்கு

இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்குப் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அதன் விவரங்கள்:

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா, நலிந்தோர் நலத்திட்டம், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் ரூ.6.86 கோடி மதிப்பில் 1,448 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள், ஊரக வளர்ச்சித் துறை சார்பில் பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின்கீழ் ரூ.33.40 கோடி மதிப்பில் 1,392 பயனாளிகளுக்குக் குடியிருப்புகள், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் தையல் இயந்திரங்கள், சலவைப் பெட்டிகள், கிராமப்புறப் பெண்கல்வி ஊக்கத்தொகை என ரூ.77.02 இலட்சம் மதிப்பில் 11,746 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள், வேளாண்மை மற்றும் நலத்திட்ட உதவிகள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் பேட்டரியால் இயங்கும் சிறப்புச் சக்கர நாற்காலிகள், மூன்று சக்கர சைக்கிள்கள், ஊன்றுகோல், குறு, சிறு தொழில்களுக்கான வங்கிக்கடன், மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் என ரூ.57.71 இலட்சம் மதிப்பில் 591 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் விபத்து மரண நிதியுதவி, இயற்கை மரண நிதியுதவி, திருமண நிதியுதவி, ஓய்வூதியம், கல்வி நிதியுதவி என ரூ.23.58 இலட்சம் மதிப்பில் 1,000 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள், தாட்கோ சார்பில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பொருளாதாரக் கடன் திட்டத்தின் கீழ் ரூ.5.50 கோடி மதிப்பில் 311 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள், எனப் பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் ரூ.79.06 கோடி மதிப்பில் 22,716 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் உதவி

இவ்விழாவில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 42,081 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.2,548.04 கோடி வங்கிக் கடன் இணைப்பு மற்றும் இதரப் பயன்கள் வழங்கப்படவுள்ள நிகழ்வில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு மட்டும் 2,764 மகளிர் சுயஉதவிக் குழுக்களின் 54,654 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.78 கோடி வங்கிக் கடன் இணைப்பு மற்றும் இதரப் பயன்களை வழங்கினார். மேலும், 33 சமுதாய அமைப்புகளுக்கு மணிமேகலை விருதுகளையும், 8 வங்கிகளுக்கு வங்கியாளர் விருதுகளையும் வழங்கிச் சிறப்பித்தார்.

கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு மற்றும் தன்னம்பிக்கை மூலம் மகளிரின் நிலையை மேம்படுத்தும் நோக்கில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தொடங்கப்பட்டது. பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டில் சுயஉதவிக் குழுக்களுக்கு திறன் வளர்ப்புப் பயிற்சிகள் வழங்கி, வலுவான சமுதாயம் சார்ந்த அமைப்புகளான ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, வட்டார அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றை உருவாக்கி, வங்கிக் கடன் இணைப்புக்களையும், தொழில் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தி, பெண்களின் ஆற்றலை அதிகரித்து, சுயஉதவிக் குழு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் உன்னதப் பணியைத் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் செய்து வருகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், தீன்தயாள் உபாத்தியாய கிராமப்புறத் திறன் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய முக்கிய திட்டங்களைச் செயல்படுத்தி எண்ணற்ற ஏழை, எளிய நடுத்தர மக்களின் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1989ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதல் முறையாகத் தருமபுரி மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக் குழு இயக்கம் தொடங்கப்பட்டது. தற்பொழுது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள ஏழை மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கானத் திட்டங்கள் திறம்படச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சுயஉதவிக் குழுக்கள் அடித்தட்டு மக்களின் நிறுவனமாக உருவாக்கப்பட்டு நிதி கட்டுப்பாடுகளை வரையறுத்து, ஜனநாயக முறையில் முடிவுகளை எடுக்க உதவுகிறது. மேலும், சுயஉதவிக் குழுக்களிடையே முறையான கூட்டம் நடத்துதல், சேமித்தல், உள்கடன் வழங்குதல், கடன் திரும்பச் செலுத்துதல், கணக்குப் பதிவேடுகளைப் பராமரித்தல் ஆகிய ஐந்து கொள்கைகள் முறையாகக் கடைபிடிக்கின்றன.

தமிழ்நாட்டில் மொத்தம் 4.38 இலட்சம் சுயஉதவிக் குழுக்கள் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் செயல்பட்டு வருகின்றன. இக்குழுக்களில் 50.24 இலட்சம் உறுப்பினர்கள் உள்ளனர். சுயஉதவிக் குழுக்களுக்கு 2021-2022ஆம் ஆண்டு ரூ.20,000 கோடி வங்கிக் கடன் வழங்க இலக்கு நிருணயிக்கப்பட்டு, அதைவிட அதிகமாக 4,08,740 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.21,392.52 கோடி கடனுதவியாக வழங்கிச் சாதனை புரிந்துள்ளது.

நடப்பு நிதியாண்டில் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.25,000 கோடிக் கடன் இணைப்பு வழங்க இலக்கு நிருணயிக்கப்பட்டு, 16.12.2022 வரை 2,60,589 குழுக்களுக்கு ரூ. 14,120.44 கோடி வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இலக்கை நிறைவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு மற்றும் இதரப் பயன்கள்

தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 42,081 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.2,548.04 கோடி வங்கிக் கடன் இணைப்பு மற்றும் இதரப் பயன்கள் வழங்கப்படவுள்ள நிகழ்வில், இன்றைய தினம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு மட்டும் 2,764 மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த 54,654 பயனாளிகளுக்கு ரூ.78 கோடி வங்கிக் கடன் இணைப்பு மற்றும் இதரப் பயன்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமிழகத்தின் பிற மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு மற்றும் இதரப் பயன்கள் வழங்கப்படும்.

சமுதாய அமைப்புகளுக்கு மணிமேகலை விருதுகள்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், சிறப்பாகச் செயல்படக்கூடிய சமுதாயம் சார்ந்த நிறுவனங்களான ஊரகப் பகுதியின் சுயஉதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், ஊராட்சி அளவிலானக் கூட்டமைப்பு, வட்டார அளவிலான கூட்டமைப்புகள், நகர்ப்புற பகுதியின் சுயஉதவிக் குழுக்கள், பகுதி அளவிலான கூட்டமைப்பு, நகர அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றின் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் 2006-2007ஆம் ஆண்டு மணிமேகலை விருதுகளை அறிவித்தார். இவ்விருதுகள் சுயஉதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மென்மேலும் சிறப்பாகச் செயல்பட ஊக்குவிக்கும் வகையில் தோற்றுவிக்கப்பட்டன.

அதன்பிறகு பல ஆண்டுகளாக வழங்கப்படாமல் இருந்த இந்த விருதுகளை 29.12.2022 அன்று நடைபெற்ற அரசு விழாவில், 2021-2022ஆம் ஆண்டிற்கான மணிமேகலை விருதுகளைக் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டார அளவிலான கூட்டமைப்பிற்கும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கான விருதுகளைச் செங்கல்பட்டு மாவட்டம் - ஒட்டியம்பாக்கம், கன்னியாகுமரி மாவட்டம் – பேச்சிப்பாறை, நாமக்கல் மாவட்டம் – கொன்னையார், புதுக்கோட்டை மாவட்டம் – வடுகப்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் – கீழஈரால் ஆகிய ஊராட்சிகளுக்கும், கன்னியாகுமரி மாவட்டம் – இறச்சகுளம், காஞ்சிபுரம் மாவட்டம் – கீழ்கதிர்பூர், நாமக்கல் மாவட்டம் – கோணாங்கிப்பட்டி, புதுக்கோட்டை மாவட்டம் – ஆயன்குடி, திருப்பத்தூர் மாவட்டம் – தேவஸ்தானம் ஆகிய ஊரக கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கும்; செங்கல்பட்டு மாவட்டம் – விநாயகா, கோயம்புத்தூர் மாவட்டம் – ஜான்சிராணி, திண்டுக்கல் மாவட்டம் – ஜெயம், கன்னியாகுமரி மாவட்டம் – ஜூபிடர், நாகப்பட்டினம் மாவட்டம் – மஞ்சள் நிலா, தென்காசி மாவட்டம் – முல்லை, திருப்பூர் மாவட்டம் – ஸ்ரீ அம்மன், திருநெல்வேலி மாவட்டம் – வெக்காளி அம்மன், திருப்பத்தூர் மாவட்டம் – குறிஞ்சி மலர், விழுப்புரம் மாவட்டம் – டான்வா ஆகிய ஊரகப் பகுதிகளைச் சார்ந்த மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கும்;

கன்னியாகுமரி மாவட்டம் – நாகர்கோவில் நகர அளவிலான கூட்டமைப்பிற்கும், சென்னை – காவாங்கரை, திருவாரூர்

மாவட்டம் – அஷ்டலெட்சுமி ஆகிய நகர்ப்புறப் பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், அரியலூர் மாவட்டம் – ஜெய்குரு, கோயம்புத்தூர் மாவட்டம் – ஆச்சி, திண்டுக்கல் மாவட்டம் – அமிர்தாம்பாள், கன்னியாகுமரி மாவட்டம் – மல்லிகை, நாகப்பட்டினம் மாவட்டம் – பங்காரு அடிகள், நாமக்கல் மாவட்டம் – பேட்டை சுண்ணாம்புகாரத் தெரு, இராணிப்பேட்டை மாவட்டம் – அமுதம், தேனி மாவட்டம் – மதினா, திருவண்ணாமலை மாவட்டம் – சரோஜினி ஆகிய நகர்ப்புற மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கும்;

என மொத்தம், 33 சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு மணிமேகலை விருதுகள், பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் விருதுகளுக்கான ரூ.55 இலட்சத்திற்கான காசோலைகள் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

வங்கியாளர் விருதுகள்

சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு அதிக வங்கிக் கடன்களை வழங்க வங்கியாளர்களை ஊக்குவிப்பதோடு வங்கிகளுக்கிடையே ஆரோக்கியமானப் போட்டியை உருவாக்கும் விதமாகச் சிறப்பாகச் செயல்படும் வங்கிகள் மற்றும் கிளைகளுக்கான வங்கியாளர் விருதுகள் 2008-2009 முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

அதன்படி, பொதுத்துறை வங்கி, தனியார் துறை வங்கி, கிராம வங்கி அல்லது கூட்டுறவு வங்கி ஆகியவற்றில் சிறப்பாகச் செயல்பட்ட 3 வங்கிகளுக்கு விருது, பாராட்டுச் சான்றிதழ், விருதுத் தொகையும், சுயஉதவிக் குழுக்கள் / மகளிர் தொழில் முனைவோருக்கான சிறப்பு வங்கிக் கிளைகளில் சிறப்பாகச் செயல்படும் 2 வங்கிக் கிளைகளுக்கு விருது, சான்றிதழ் மற்றும் விருதுத் தொகையும், சுயஉதவிக் குழுக்கள் / மகளிர் தொழில் முனைவோருக்கான சிறப்பு வங்கிகள் அல்லாத இதர வங்கிக் கிளைகளுக்கான பிரிவின்கீழ் சிறப்பாகச் செயல்படும் 3 வங்கிக் கிளைகளுக்கு விருதுகள், சான்றிதழ்கள், விருதுத் தொகையும் வழங்கப்படுகின்றன.

2021-2022ஆம் ஆண்டிற்கான வங்கியாளர் விருதுகள் - சிறந்த பொதுத்துறை வங்கிக்கான விருது இந்தியன் வங்கிக்கும், சிறந்த தனியார் வங்கிக்கான விருது எச்.டி.எப்.சி. வங்கிக்கும், சிறந்த கிராம வங்கிக்கான விருது தமிழ்நாடு கிராம வங்கிக்கும், சுயஉதவிக் குழுக்கள் / மகளிர் தொழில் முனைவோருக்கான சிறப்பு வங்கிக் கிளைகளில் சிறப்பாகச் செயல்பட்ட வங்கிக் கிளைகளுக்கான விருதுகளை இந்தியன் வங்கியின் காவேரிப்பட்டினம், சென்னை கிளைகளுக்கும், சுயஉதவிக் குழுக்கள் / மகளிர் தொழில் முனைவோருக்கான சிறப்பு வங்கிகள் அல்லாத இதர வங்கிக் கிளைகளில் சிறப்பாகச் செயல்பட்ட வங்கிக் கிளைகளுக்கான விருதுகளை இந்தியன் வங்கியின் பாலக்கோடு, காரிமங்கலம் கிளைகளுக்கும், தமிழ்நாடு கிராம வங்கியின் தருமபுரி கிளை ஆகிய வங்கிக் கிளைகளுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார். இவ்விருதுடன் பாராட்டுச் சான்றிதழ்களும், விருதுத் தொகையாக ரூ.4 இலட்சத்திற்கான காசோலைகளும் வழங்கப்பட்டன.

இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை :

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திருச்சியில் எது நடந்தாலும், அது பிரம்மாண்டமாகத்தான் நடக்கும்.

சிறிய விழாவாக இருந்தாலும், அது பெரிய அரசு விழாவாகத்தான் நடக்கும்! பெரிய பொதுக்கூட்டமாக இருந்தாலும், அதனை மாபெரும் மாநாடாகத்தான் திருச்சியில் காணலாம்! மாநாடு என்று அறிவித்தால், பிரம்மாண்டமான மாநாடாகத்தான் நடக்கும்.

அப்படி நடந்தால்தான் அது திருச்சி!

அப்படி நடத்தினால்தான் அது கே.என்.நேரு!

அந்தப் புகழை, இந்த நிகழ்ச்சியின் மூலமாகவும் அவர் நிரூபித்துக் காட்டி இருக்கிறார். மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறையின் மூலமாகத் தமிழ்நாட்டினுடைய உள்கட்டமைப்பு வசதிகள் இன்றைக்கு ஏராளமாகச் செய்து வருபவர்தான் அமைச்சர் நேரு அவர்கள்!

அரசு நிகழ்ச்சி என்று தேதி வாங்கி, அரசு சார்பிலான மாநாடாக இதனை ஏற்பாடு செய்து மிக எழுச்சியோடு நடத்திக் கொண்டிருக்கக்கூடிய நேரு அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுதலை, வாழ்த்துதலை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சிக்கு அடுத்ததாக, தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் இரண்டாவது அலகினைத் திறந்து வைக்க இருக்கிறேன். அதோடு, மணப்பாறையில் சிப்காட் வளாகத்தினையும் நான் திறந்து வைக்க இருக்கிறேன்.

இவை இரண்டும் திருச்சிக்கு மிக முக்கியமான சாதனைகள்!

தமிழ்நாட்டின் தொழில்துறை என்பது மிக வேகமாக முன்னேற்றத்தை நோக்கிப் போய்க் கொண்டு இருக்கிறது. தமிழ்நாட்டை நோக்கிப் புதிய தொழிற்சாலைகள் வரத் தொடங்கியிருக்கின்றன. இந்தியாவின் மற்ற மாநிலங்களில் இருந்து மட்டுமல்ல, உலக நிறுவனங்களும் தமிழ்நாட்டை நோக்கி இன்றைக்கு வரத் தொடங்கியிருக்கிறார்கள். புதிய, புதிய துறைகளில் முதலீடுகளை இன்றைக்கு நாம் ஈர்த்து வருகிறோம். இதை, கடமையேக் கண்ணாக நினைத்துச் செயல்படுத்தி வரக்கூடியவர்தான் இங்கு வந்திருக்கக்கூடிய நம்முடைய தொழில்துறை அமைச்சராக இருக்கும் தங்கம் தென்னரசு அவர்கள். எனவே, அவரையும் நான் பாராட்டுகிறேன்.

சிப்காட் திறப்பு விழா நிகழ்ச்சியைத் தொடர்ந்து, மக்களைத் தேடி மருத்துவம் என்ற மகத்தானத் திட்டத்தினை, அதாவது ஒரு கோடியே ஒன்றாவது பயனாளியைச் சந்திக்க சன்னாசிப்பட்டி என்ற கிராமத்திற்கு நான் செல்ல இருக்கிறேன்.

நம்முடைய கழக ஆட்சி அமைந்ததும் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. கடந்த ஆண்டு ஆகஸ்டு 5ஆம் தேதி கிருஷ்ணகிரி மாவட்டம், சாமனப்பள்ளி கிராமத்தில் வசிக்கும் சரோஜா என்பவர்தான் இந்தத் திட்டத்தில் சிகிச்சை பெற்ற முதலாவது நபர். இன்று நான் சந்திக்க இருப்பவர் ஒரு கோடியாவது நபர்!

ஏழை - எளிய மக்கள் உடல்நலம் பாதிக்கப்படும்போது வெளியூருக்கு வந்து சிகிச்சை பெற வாய்ப்பு வசதி இல்லாமல் இருந்தால் அவர்களுக்கு, அவர்களது வீட்டுக்கே சென்று சிகிச்சை அளிக்கக்கூடிய மகத்தானத் திட்டம்தான், இந்தத் திட்டம்!

இந்த ஓராண்டுக் காலத்தில் ஒரு கோடிப் பேருக்கு நமது அரசாங்கம் இத்தகைய சிகிச்சையை அளித்துள்ளது. இது சாதாரண சாதனை அல்ல; மாரத்தான் போல் நெடிய தொடர் ஓட்டத்தால் நிகழ்ந்துள்ள சாதனை!

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருக்கும் அருமை நண்பர் மா.சுப்பிரமணியன் அவர்கள், ஒரு மாரத்தான் ஓட்ட வீரர் என்பது அனைவரும் அறிந்த உண்மை. சாலையில் மட்டுமல்ல, துறையின் செயல்பாடுகளிலும் மாரத்தான் போல் நெடுந்தூரம் களைப்பின்றி பயணித்து இலக்குகளை அடைந்து காட்டக்கூடியவர்தான் என்பதை இதன் மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம்.

ஒரு கோடிப் பேருக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டில், தேவைப்படும் அனைத்து மக்களுக்கும் உரிய சிகிச்சை அளிக்கும் திட்டமாக அதனை நிகழ்த்திக் காட்ட இருக்கும் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களை உங்கள் அனைவரின் சார்பில் நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக, எழுச்சியோடு ஏற்பாடு செய்திருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் நேரு அவர்களையும், அதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களையும் பாராட்டுகிறேன்.

எனது அருமை நண்பர், உயிர் நண்பர் அன்பில் பொய்யாமொழியை நினைவூட்டக்கூடிய வகையில், அவரது பெயரை நிலைநாட்டக்கூடிய வகையில் அன்பில் மகேஸ் செயல்பட்டு வருகிறார். பள்ளிக்கல்வித் துறையை, இந்தியாவிலேயே மிகச் சிறந்த துறையாக ஆக்க நித்தமும் உழைத்துக் கொண்டு இருக்கிறார் தம்பி அன்பில் மகேஸ் அவர்கள்.

அதேபோல், இந்த மேடைக்குப் புதியவராக, அமைச்சரவைக்குப் புதியவராக வருகை தந்துள்ள தம்பி உதயநிதி அவர்கள். அமைச்சரவைக்குத்தான் புதியவரே தவிர, உங்களுக்கு நன்கு அறிமுகமானவர், உங்களுக்கு பழைய முகம்தான். அவர் அமைச்சராகப் பொறுப்பேற்றபோது விமர்சனம் வந்தது. விமர்சனம் வரத்தான் செய்யும்.

இப்படி விமர்சனங்கள் வந்தபோது, 'என்னுடைய செயல்பாட்டைப் பாருங்கள், அதன்பிறகு விமர்சியுங்கள்' என்றார்.

அவர் சட்டமன்ற உறுப்பினராக பொறுப்பேற்றபோதும் விமர்சனங்கள் வந்தது. ஆனால் அதற்கெல்லாம் தன்னுடைய செயல்பாடுகளால் பதில் சொல்லி, அனைவரது பாராட்டையும் பெற்றார், தன்னை நிரூபித்துக் காட்டினார்.

உதயநிதிக்கு ஏராளமான பொறுப்புக்கள் இருக்கின்றன. இளைஞர் நலன், விளையாட்டு, மகளிர் மேம்பாடு, சிறப்புத் திட்டச் செயலாக்கம், வறுமை ஒழிப்பு, கிராமப்புறக் கடன்கள் ஆகிய முக்கியமானத் துறைகள் வழங்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் தமிழ்நாட்டின் ஏழை எளிய, விளிம்புநிலை மக்களை மேம்படுத்தக்கூடிய துறைகள்! இவைதான் அவரிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

அமைச்சர் பொறுப்பில் சிறப்பாகப் பணியாற்றி இந்தத் துறைகளை மேம்படுத்துவார் என்ற நம்பிக்கை எனக்கு அதிகமாக இருக்கிறது. மேம்படுத்த வேண்டும் என்பதை முதலமைச்சராக நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறேன்.

இந்த அரசு விழா மக்கள் நல விழாவாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. இதனை ஒருங்கிணைத்துச் சிறப்போடு ஏற்பாடு செய்திருக்கக்கூடிய நம்முடைய முதன்மைச் செயலாளர் அமுதா அவர்களுக்கும், அதேபோல் மேலாண்மை இயக்குநராக இருக்கக்கூடிய திவ்யதர்சினி அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், மாவட்ட உயர் அதிகாரிகள், அலுவலர்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தை, நன்றியை, வாழ்த்துதலை நான் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய பாராட்டுக்களையும் நான் தெரிவிக்கிறேன்.

❖ மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு

❖ மணிமேகலை விருது

❖ மாநில அளவிலான வங்கியாளர் விருது

❖ முடிவுற்ற பணிகளைத் துவக்கி வைத்தல்

❖ புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்

❖ நலத்திட்ட உதவிகள் வழங்குதல் - என

ஆறு நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய விழா இது!

இந்த விழாவில், 22,716 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளன. இதன் மொத்த மதிப்பு ரூ.79.06 கோடி. இன்று மட்டும் 5,635 முடிவுற்ற பணிகளைத் தொடங்கி வைக்க இருக்கிறேன். இவற்றின் மொத்த மதிப்பு ரூ.238.40 கோடி. இன்று மட்டும் 5,951 பணிகளுக்கு அடிக்கல் நாட்டி இருக்கிறேன். இதன் மொத்த மதிப்பு ரூ.308.29 கோடி.

மொத்தமாகச் சொல்வதாக இருந்தால், ரூ.625.76 கோடி மதிப்பிலான பயன்கள் திருச்சி மாவட்டத்திற்கு அளிக்கும் மாபெரும் விழாதான் இந்த விழா. அதனால்தான் நான் தொடக்கத்திலே சொன்னேன், திருச்சியில் எது நடந்தாலும் அது பிரம்மாண்டமான வகையில்தான் நடைபெறும் என்று சொன்னேன்.

இன்னும் ஒரு மகிழ்ச்சியான செய்தியை உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

ஒலிம்பிக் போன்ற பன்னாட்டு அளவிலானப் போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் வாய்ப்பை ஏற்படுத்த, நம் மாநில இளைஞர்களுக்கு உலகத் தரம் வாய்ந்த பயிற்சிகளை வழங்கக்கூடிய வகையில், தமிழ்நாட்டின் நான்கு மண்டலங்களில் தலா ஒன்று வீதம் நான்கு ஒலிம்பிக் அகாடமிகள் உருவாக்கப்படும் என்று கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில், அதாவது 21.04.2022 அன்று சட்டமன்றப் பேரவையில் நான் அறிவித்திருந்தேன்.

அந்த அறிவிப்பினை நடைமுறைப்படுத்தும் வகையில் திருச்சியில் அனைத்து வசதிகளுடன் கூடிய ஒலிம்பிக் அகாடமி ஒன்று உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கல்வியில், வேலைவாய்ப்பில், அறிவுத்திறனில், தொழில் வளர்ச்சியில் மட்டுமல்ல நமது தமிழ்நாடு உலகத்தோடு போட்டியிட வேண்டும். அதற்கான விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டும். அதற்காக இந்த ஒலிம்பிக் அகாடமி பெரும் துணையாக இருக்கும்.

இது ஏதோ அமைச்சர் உதயநிதிக்கு மட்டுமல்ல, இந்த மாவட்டத்து அமைச்சர்களாக இருக்கக்கூடிய நேரு, அன்பில் மகேஸ் ஆகியோருக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய அறிவிப்புகள்தான்.

அரசு விழாக்கள் என்றால் நாம் மக்கள் விழாக்களாகவே நடத்தி வருகிறோம். மக்களுக்குப் பல்வேறு விதமான நலத்திட்ட உதவிகளைச் செய்து வரும் விழாவாக நடத்தி வருகிறோம். ஒவ்வொரு விழாவின் மூலமாக, ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் நேரடியாகப் பயன் அடையக்கூடிய வகையில் நாம் அந்த விழாக்களை ஏற்பாடு செய்கிறோம். புதிய திட்டங்களைத் தொடங்கி வைக்கிறோம். அறிவித்து முடிக்கப்பட்ட பணிகளைத் திறந்து வைக்கிறோம்.

இந்தத் திராவிட மாடல் அரசாங்கமானது, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தரப்பு மக்களுக்கும் எந்த வகையிலும் எல்லா உதவிகளையும் செய்து வரக்கூடியது என்பதன் அடையாளம்தான் இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த அரசு விழா.

ஏழை எளிய, அடித்தட்டு விளிம்புநிலை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக்கூடிய திட்டங்களை ஒவ்வொன்றாக நிறைவேற்றித்தரும் ஆட்சியாக நம்முடைய கழக ஆட்சி செயல்பட்டு வருகிறது. இதில் சமூகத்தின் சரிபாதியான மகளிர் சமுதாயத்திற்காகத் தனியாகச் சிறப்புத் திட்டங்களை வகுப்பதில் கழக அரசு அமையும்போதெல்லாம் முனைப்பாக இருந்து வந்திருக்கிறது.

- ❖ மகளிருக்குச் சொத்தில் சம உரிமை வழங்கியது
- ❖ மகளிருக்கு வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு வழங்கியது
- ❖ மகளிருக்கு உள்ளாட்சி மன்றங்களில் இடஒதுக்கீடு தந்தது
- ❖ பொருளாதாரத்தில் மேம்பட மகளிர் சுயஉதவிக் குழுக்கள் என -

மகளிர் நலன் காத்தவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

அவர் வழியில் நடைபோடக்கூடிய அரசும் நம்முடைய அரசு. அதைத்தான் இங்கு பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார்களே,

- ❖ மகளிருக்கு இலவசப் பேருந்துப் பயணம்
- ❖ மாணவியருக்கு உயர்கல்வி கற்க 'புதுமைப்பெண் திட்டம்' மூலம் மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் எனப் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம்.

பெண்களுக்குப் பேருந்துக் கட்டணம் இல்லை என்று சொன்னதன் மூலமாக, சமூக, பொருளாதார வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது. வீட்டை விட்டு வெளியில் வந்து சிறுதொழில்கள் தொடங்க ஆர்வமாக இருக்கிறார்கள். இதன் மூலமாகப் பெண்களின் ஆளுமை, அவர்களுடைய வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது.

அதேபோல, அரசுப் பள்ளியில் படித்து உயர் கல்வி கற்க கல்லூரிக்கு வரக்கூடிய பெண்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்குவதன் மூலமாகப் பெண்கள் உயர்கல்வி கற்பது உயர்ந்துள்ளது.

இந்த வரிசையில், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான கடன்கள் வழங்கும் விழா இன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மகளிர் சுயஉதவிக் குழுக்களை, இங்கே தம்பி உதயநிதி பேசுகிறபோது சொன்னாரே, 1989ஆம் ஆண்டு முதன்முதலில் தருமபுரி மாவட்டத்தில் அப்போது முதலமைச்சராக இருந்த நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இந்தியாவிலேயே

முதன்முதலாக மகளிர் சுயஉதவிக் குழுக்களை அமைத்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோதுதான், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு அதிகமான கடன்கள் வழங்கப்பட்டன. பல்லாயிரக்கணக்கான மகளிருக்குப் பல மணி நேரம் நின்றுகொண்டே கடனுதவிகளை நான் வழங்கி இருக்கிறேன். கடன்களைப் பெறும் மகளிர் அதனை வாங்க வரும்போது, என்னிடத்தில் கேட்பார்கள், "இத்தனை மணி நேரமாக நிக்குறியேப்பா! நீ உட்காரக் கூடாதா?"என்று கேட்பார்கள். நான் சொல்வேன், "கடனுதவியைப் பெறும்போது உங்க முகத்தில் பார்க்குற சிரிப்பில் என்னோட கால் வலி மறந்து போய்விடுகிறது" என்று நான் சொல்வேன்.

அப்படிக் கடன் பெற்ற மகளிரின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தது. அவர்களுடைய குடும்பம் முன்னேறியது. ஆனால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதற்குப் பிறகு, கடந்தகால ஆட்சியாளர்கள் அதனை முறையாகச் செயல்படுத்தவில்லை.

சட்டமன்றத் தேர்தல் நேரத்தில் நான் பிரச்சாரத்திற்குச் சென்றபோது, என்னைச் சந்திக்கும் மகளிர், மீண்டும் மீண்டும் என்னிடத்தில் சொன்னது, வலியுறுத்தியது, நீங்கள் ஆட்சிக்கு வந்து இதனைச் சரிசெய்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். ஆட்சிக்கு வந்ததும், அதனை இப்போது சரி செய்து கொடுத்திருக்கிறோம். அதனுடைய அடையாளம்தான் இந்த விழா.

தமிழ்நாட்டில் ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில், மொத்தம் 4,38,000 சுயஉதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இந்தக் குழுக்களில், 50,24,000 உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது இந்த அமைப்பு எவ்வளவு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதை நாம் அறியலாம்.

மகளிர் சுயஉதவிக் குழுக்கள் என்பவை மக்களின் நிறுவனமாக ஜனநாயக முறையில் செயல்பட்டு வருகின்றன.

- கூட்டம் நடத்துதல்,
- சேமித்தல்,
- உள்கடன் வழங்குதல்,
- கடன் திரும்பச் செலுத்துதல்
- கணக்குப் பதிவேடுகளைப் பராமரித்தல்

ஆகிய ஐந்து நடவடிக்கைகளையும் முறையாகச் செயல்படுத்த வேண்டும்.

மகளிர் சுயஉதவிக் குழுக்களின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்திடவும், வாழ்வாதார மேம்பாட்டிற்காகவும் வங்கிக் கடன் இணைப்புத் திட்டத்தின்கீழ்த் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கடன் வழங்க முதன்முதலில் முனைப்பு காட்டியது திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்.

சுயஉதவிக் குழுக்களுக்கு 2021-2022ஆம் ஆண்டு ரூ.20 ஆயிரம் கோடி வங்கிக் கடன் வழங்கலாம் என இலக்கு நிருணயிக்கப்பட்டது. ஆனால் அந்த இலக்கைவிட அதிகமாகக் கடன் வழங்கப்பட்டுள்ளது. அதாவது, ரூ.21,392.52 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. இதனை 4,08,740 சுயஉதவிக் குழுக்கள் பெற்றிருக்கிறார்கள்.

2022-2023 நடப்பு நிதியாண்டில், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.25 ஆயிரம் கோடிக் கடன் இணைப்பு வழங்க இலக்கு நிருணயிக்கப்பட்டது.

16.12.2022 வரை, 2,60,589 குழுக்களுக்கு ரூ.14,120.44 கோடி வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதையும் இங்கே தெரிவிப்பதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். மீதமுள்ள இலக்கை நிறைவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அந்த இலக்கையும் அடைந்து சாதனை படைப்போம் என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மகளிரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதை அரசாங்கத்தின் கடமையாகவும் பொறுப்பாகவும் நாங்கள் நினைக்கிறோம். அதேபோல், மிகச்சிறப்பாகச் செயல்படும் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ‘மணிமேகலை விருது’ தரப்படும் என்று முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் 2007ஆம் ஆண்டு அறிவித்தார்கள். மகளிர் அமைப்புகளுக்கு மணிமேகலை விருதானது மிகப் பெரிய ஊக்கத்தையும் ஆக்கத்தையும் அளித்தது.

2007ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த விருதைக் கடந்தகால ஆட்சியில் என்ன செய்தார்கள்? அதை நிறுத்தி வைத்து விட்டார்கள், அதைப் பற்றி கவலைப்படவில்லை.

அதனால்தான், நாம் ஆட்சிப் பொறுப்பேற்றதும் ‘மணிமேகலை விருது’ மீண்டும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, இன்றைக்கு 33 சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு மணிமேகலை விருதுகள், பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் ரூ.55 இலட்சம் விருதுத் தொகையும் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் உள்ளார்ந்த மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு அதிக வங்கிக்கடன்களை வழங்குவதற்காக வங்கியாளர்களை ஊக்குவிப்பதோடு, சிறப்பாகச் செயல்படும் வங்கிகள் மற்றும் கிளைகளுக்கான வங்கியாளர் விருதுகள் 2008-2009ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த மூன்றாண்டுக் காலமாக, கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக வழங்கப்படாமல் இருந்த மாநில அளவிலான வங்கியாளர்களுக்கான விருதினை 2021-2022ஆம் ஆண்டு முதல் மீண்டும் வழங்கப்படவுள்ளது. அவற்றையும் 8 வங்கிகளுக்கு இன்றைக்கு நாம் வழங்குகிறோம்.

தமிழ்நாட்டின் கடைக்கோடி கிராமத்தில் வசிக்கும் பெண்கள் கூட இன்று பொருளாதாரத் தன்னிறைவைப் பெற்று, வளமாக வாழ்ந்து வருகின்றனர் என்பதை உங்கள் அனைவரின் முகங்களையும் காணும்போது நான் இங்கே உணருகிறேன்.

“எவ்வளவு அலட்சியப்படுத்தப்பட்டு, அவமானங்களுக்கு ஆளாக்கப்பட்டாலும் எடுத்த காரியத்தை முடித்தேத் தீருவது என்ற திடமான கொள்கையும் விடாமுயற்சியும் இருந்தால் வெற்றி கிடைத்தேத் தீரும்” என்று சொன்னவர் யார் தெரியுமா? நம்மை ஆளாக்கிய நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள். எனவே, அண்ணா அவர்களின் கூற்றுப்படி சுயஉதவிக் குழு மகளிர் சிறிதும் தளர்வின்றித் தங்களின் முயற்சிகளைச் செய்து வந்தால், நிச்சயம் உங்களுக்கு வெற்றி கிடைக்கும், நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை.

ஒரு நாட்டினுடைய முன்னேற்றம் என்பதை அந்த நாட்டில் வசிக்கும் பெண்களின் நிலையைப் பார்த்தாலே தெரிந்துகொள்ளலாம்.

“ஒளியில்தான் நமது நிழலின் வடிவம் நமக்குத் தெரிகிறது. சோதனையின் போதுதான் நமது நெஞ்சின் வலிமை நமக்குப் புரிகிறது...!” என்று சொன்னவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். நமது அரசானது பெண்களின் முன்னேற்றத்திற்கும், அவர்களது நல வாழ்விற்கும் எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இன்றைய நாள் இங்கு நடைபெறும் இந்த நிகழ்ச்சியில், சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த பயனாளிகளுக்குக் கடன்கள் வழங்கப்பட்டதைப் போல தமிழகத்தில் இருக்கக்கூடிய பிற மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்ட அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லோரும் பங்கேற்கக்கூடிய வகையில், சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு வங்கிக்கடன் இணைப்புகள் வழங்கப்படுகின்றன என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இவை தொடக்கம்தான்!

இதுபோன்ற நலத்திட்ட உதவிகள் தொடர்ந்து கொண்டே இருக்கும்!

தமிழர்களையும் தமிழ்நாட்டையும் செழிக்க வைப்பதே திராவிட மாடல் ஆட்சியின் நோக்கம்!

அதனைத் தொய்வில்லாமல் செய்து வருகிறோம். அதனைத் தடங்கல் இல்லாமல்

இன்றைக்கு நாங்கள் நிறைவேற்றி வருகிறோம். யார், எத்தகைய விமர்சனம் வைத்தாலும் திராவிட மாடல் கொள்கையில் இருந்து வழுவாத ஆட்சியை நாம் இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கிறோம்.

எல்லார்க்கும் எல்லாம் என்ற கருத்தியலை அடிப்படையாக வைத்து, இந்த ஆட்சியின் கொள்கைகளையும் திட்டங்களையும் இன்றைக்கு இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள் பின்பற்றக்கூடிய வகையில் நாம் இன்றைக்குச் செயலாற்றிக் கொண்டிருக்கிறோம். திராவிட மாடல் ஆட்சியின் வேகத்தை நீங்கள் அறியலாம்.

தொழில் நிறுவனங்களை ஈர்ப்பதில் இந்தியாவில் முதன்மை மாநிலமாக வளர்ந்து நிற்கிறது தமிழ்நாடு. காலநிலை மாற்றம் குறித்த கொள்கையை உருவாக்குவதில் இந்தியாவுக்கு முன்மாதிரி மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு விளங்கிக் கொண்டு இருக்கிறது.

செஸ் ஒலிம்பியாட் போட்டியைப் பொறுத்தவரைக்கும், உலகப் புகழோடு நாம் அதை நடத்திக் காட்டி இருக்கிறோம்.

எவ்வளவு மழை வந்தாலும் சரி, வெள்ளம் வந்தாலும் சரி, அதனைத் தாங்கும் அளவுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கித் தந்திருப்பதும் நம்முடைய அரசுதான்!

புயல் வந்தது, அதிகப்படியான மழையும் பெய்தது. அது வந்ததா, வரவில்லையா என்று தெரியாத அளவிற்கு அரசு பணியாற்றி இருக்கிறது. யாரும் பாராட்ட வேண்டும் என்பதற்காக நாங்கள் பணியாற்றவில்லை. மக்களைக் காக்க வேண்டும் என்பதற்காகவே நாங்கள் இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்.

இதனை நான் சொல்லக் காரணம், நேற்றைய தினம் நான் மாலையில் என் இல்லத்தில் அமர்ந்திருந்த நேரத்தில், என்னுடைய உதவியாளர்கள் ஒரு தாளைக் கொண்டுவந்து என்னிடம் கொடுத்தார்கள். என்ன என்று படித்துப் பார்த்தேன்;

கடந்த ஓராண்டுக் காலத்தில் மட்டும் நான் தமிழகத்தில் இருக்கக்கூடிய மாவட்டங்களில் பயணம் செய்தது, 8,549 கிலோ மீட்டர் தூரம்!

அந்தப் பயணத்தில் நான் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள்- 647. இதில் 551 நிகழ்ச்சிகள் அரசு நிகழ்ச்சிகள்! கட்சி நிகழ்ச்சிகள்- 96.

தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்ட காரணத்தால், அதில் பயனடைந்தவர்கள் எவ்வளவு தெரியுமா? 1,03,74,355 நபர்கள்!

ஓராண்டுக் காலத்தில் ஒரு கோடிப் பேருக்கு நேரடியாக நலத்திட்ட உதவிகள் சென்று சேர்ந்திருக்கிறது. இதெல்லாம் ஒரு வருடத்தில்.

இதற்கு மத்தியில், எனக்கு கொரோனா பாதிப்பு வந்தது, சிறிது உடல் நலிவுற்றேன் - கால் வலி வந்தது, சிகிச்சை எடுத்துக் கொண்டேன். அந்தச் சூழ்நிலையில் கூட என்னுடைய பயணம் தடைபடவில்லை, மக்கள் பணி நிற்கவில்லை, நிற்கவில்லை என்பதல்ல நிற்கவே நிற்காது. அதுதான் உண்மை.

நம்பர் ஒன் முதலமைச்சர் என்பதாக இருந்தாலும் - நம்பர் ஒன் தமிழ்நாடு என்பதாக இருந்தாலும் - அதனுடைய உண்மையான அளவுகோல் என்ன?

ஏழைகளின் சிரிப்பும்- இங்குள்ள நான் காணக்கூடிய மகளிரின் மகிழ்ச்சியும்தான் அதற்கு உண்மையான அளவுகோல்!

மக்கள் மகிழ்ச்சி அடைந்தால் - அவர்களது மனது நிறைந்தால் போதும்.

இதனைத்தான் "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்றார் பேரறிஞர் அண்ணா.

நான் சொல்வது, "ஏழையின் சிரிப்பில் பேரறிஞர் அண்ணாவையும் முத்தமிழறிஞர் கலைஞரையும் காண்போம்" என்பதுதான் என்னுடைய கொள்கை.

மக்களின் அரசு இது!

மக்களுக்கான அரசு இது!

இந்தச் சாதனைகள் தொடரும்! தொடரும்! தொடரும்! எனச்சொல்லி,

நிறைவாக, நான் கூற விரும்புவது, நான் உள்ளாட்சித் துறை அமைச்சராகவும், துணை முதலமைச்சராகவும் இருந்தபோது, இந்த மகளிர் சுயஉதவிக் குழுவினுடைய துறையை என் கைவசம் வைத்திருந்தேன். இன்றைக்குத் தம்பி உதயநிதி கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. எனவே, அதற்காகத் தம்பி உதயநிதியை நான் உங்கள் அனைவரின் சார்பில் கேட்டுக்கொள்ள விரும்புவது, இந்த சுயஉதவிக் குழுக்களை மேம்படுத்தக்கூடிய வகையில் நீங்கள் அதற்காகப் பாடுபட வேண்டும், பணியாற்ற வேண்டும், அதற்குரிய நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் நீங்கள் தொடர்ந்து நடத்திட வேண்டும் என்று என்னுடைய அன்பான வேண்டுகோளை மாத்திரம் இந்த நேரத்தில் எடுத்துவைத்து, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

"பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்போம்"
விழிப்புணர்வுக் குறித்த மணல் சிற்பம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
பார்வையிட்டார் – 30.12.2022.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 30.12.2022 அன்று, பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழித்திடவும், பெண்களின் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திடவும், தமிழ்நாடு அரசின் 181 மகளிர் உதவி மையத்தின் சார்பில் சென்னை, மெரினா கடற்கரையில் வடிவமைக்கப்பட்ட "பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்போம்" என்பது குறித்த மணல் சிற்பத்தைப் பார்வையிட்டார்.

தமிழ்நாடு அரசின் "181 மகளிர் உதவி மையம்" பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய 24 மணி நேரமும் செயல்படும் ரகசிய சேவை மையம் ஆகும். இதன்மூலம் குடும்பப் பிரச்சினை உள்ளிட்ட வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்குக் காவல்துறை, மருத்துவத்துறை, சட்டஉதவி, மனநல ஆலோசனை போன்ற அத்தியாவசியச் சேவைகள் வழங்கப்படுகின்றன. 181 இலவசத் தொலைபேசி எண், மின்னஞ்சல், ஆன்லைன் உரையாடல் போன்றவை மூலமாக உதவி மையத்தை நாடும் வசதி உள்ளது. மேலும், பெண்களுக்காக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்கள் குறித்த விவரங்களையும், குடும்ப வன்முறை மற்றும் இதர வகைக் கொடுமைகளால் பாதிக்கப்படும் பெண்களுக்கு அரசு வழங்கும் உதவிகள் குறித்தும் கேட்டறியலாம்.

பெண்களின் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சென்னை, மெரினா கடற்கரையில் தமிழ்நாடு அரசின் 181 மகளிர் உதவி மையத்தின் சார்பில் வடிவமைக்கப்பட்ட மணல் சிற்பத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, கீழ்க்காணும் "பெண்கள் பாதுகாப்பு உறுதிமொழி" விழிப்புணர்வுப் பதாகையில் கையெழுத்திட்டார்.

"பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழித்திடுவோம்!

பெண்களுக்கான இடர் இல்லாச் சமுதாயத்தை உருவாக்கிடுவோம்!

பெண்களின் பாதுகாப்பிற்காக அனைவரும் உறுதியேற்போம்!"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 50ஆவது நினைவு ஆண்டை முன்னிட்டு அமைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியினைப் பார்வையிட்டு ஆய்வு

படமும் / செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 26.12.2022 அன்று, மூதறிஞர் இராஜாஜி மறைந்த 50ஆவது நினைவு ஆண்டை முன்னிட்டு அன்னாரின் அரசியல், இலக்கியம், ஆட்சி நிருவாகம், வாழ்க்கை வரலாற்றைப் பொதுமக்களுக்கு விளக்கிடும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலம் அமைக்கப்பட்டிருந்த சிறப்புப் புகைப்படக் கண்காட்சியைப் பார்வையிட்டார். உடன் மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள், மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. இ. பெரியசாமி அவர்கள், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மரு. இரா. செல்வராஜ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 50ஆவது நினைவு நாள்

மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 50ஆவது நினைவு நாளையொட்டித் தமிழ்நாடு அரசின் சார்பில், 25.12.2022 அன்று சென்னை பாரிமுனை உயர்நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ.எம்.வி.பிரபாகரராஜா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மரு. இரா.செல்வராஜ், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

ரூ.5 கோடியில் "வெளிநாடு வாழ் தமிழர் நலநிதி" உருவாக்கம்

"**தொ**ண்டு செய்வாய்-துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே" என்ற வாசகத்தை நெஞ்சில் நிலைநிறுத்தி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காட்டிய வழியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களது தலைமையிலான தமிழக அரசு, நாள்தோறும் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பரந்து கிடக்கும் இவ்வுலகில், எங்கே தமிழர்கள் வாழ்ந்தாலும், அவர்களுக்குத் தமிழ்நாடுதான் தாய்வீடு என்பதை நன்குணர்ந்து, உலகத் தமிழர்கள் மீது அன்பு செலுத்துவது மட்டும் அல்ல; அவர்களை அரவணைப்பதும், பாதுகாப்பதும் தாய்த் திருநாடான தமிழ்நாடுதான். "வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்" என்பதை இலட்சிய முழக்கமாகக் கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காட்டிய வழியில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு, வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்களுக்கென நலத்திட்டங்கள், அவர்களுக்கான தூதரக உதவிகள், செம்மொழியாம் தமிழ்மொழியைத் தழைத்தோங்கச் செய்திட வெளிநாடுகளில் தமிழ்க் கல்வி, கலை, பண்பாடு மற்றும் கருத்துப் பரிமாற்றத்திற்கெனப் பல்வேறு சீர்மிகு நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது.

அந்தவகையில், பல்வேறு நாடுகளுக்குச் சென்று வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்திடவும், அவர்களுக்குத் தேவையான உதவிகள் செய்திடவும், புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் உளப்பூர்வமான மற்றும் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, 'வெளிநாடுவாழ் தமிழர் நலச்சட்டம்' 2011ஆம் ஆண்டு மார்ச் 1ஆம் நாள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது அரசால் இயற்றப்பட்டது. அதோடு, "புலம்பெயர் தமிழர் நலவாரியம்" ஒன்று உருவாக்கப்பட்டு, அவர்களுக்கென நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படும் என அப்போது அறிவிக்கப்பட்ட நிலையில், ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது, முந்தைய ஆட்சியாளர்கள் அதனை நடைமுறைப்படுத்த முன்வரவில்லை.

இந்த நிலையில், மீண்டும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்தபிறகு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 'வெளிநாடுவாழ் தமிழர் நல வாரியம்' அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார். இந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும்விதமாக, கீழ்க்காணும் தலைவர், அரசுசார் அலுவலர்கள் மற்றும் அயலகத் தமிழர் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்டு புலம்பெயர் தமிழர் நல வாரியத்தினை அமைத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, புலம்பெயர் தமிழர் நலவாரியத்தின் தலைவராகத் திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், பழையகோட்டையைச் சேர்ந்த திரு. கார்த்திகேய சிவசேனாபதி அவர்களும்; மொரிஷியஸ் நாட்டில் வசிக்கும் திரு. ஆறுமுகம் பரசுராமன்; லண்டனில் வசிக்கும் திரு. முஹம்மது பைசல்; ஐக்கிய அரபு அமீரகத்தில் வசிக்கும் திரு. சித்திக் சையது மீரான்; வட அமெரிக்காவில் வசிக்கும் திரு. கால்டுவெல் வேள்நம்பி; சிங்கப்பூரில் வசிக்கும் திரு. ஜி.வி.ராம் என்கிற கோபாலகிருஷ்ணன் வெங்கடரமணன்; மும்பையில் வசிக்கும் திரு. அ. மீரான் மற்றும் சென்னையில் வசிக்கும் வழக்கறிஞர் திரு. புகழ்காந்தி ஆகியோர் அரசு சாரா உறுப்பினர்களாகவும்;

அரசு சார்ந்த உறுப்பினர்களாக – பொதுத் துறைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அல்லது அவரால் நியமனம் செய்யப்படுபவர்; நிதித் துறைக் கூடுதல் தலைமைச் செயலாளர் அல்லது அவரால் நியமனம் செய்யப்படுபவர்; தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறைக் கூடுதல் தலைமைச் செயலாளர் அல்லது அவரால் நியமனம் செய்யப்படுபவர்; வெளிநாடுவாழ் தமிழர் தொடர்பான பணிகளைக் கவனித்து வரும் அரசு சிறப்புச் செயலாளர்/அரசு இணைச் செயலாளர்/ அரசு துணைச் செயலாளர், பொதுத் துறை; மேலாண்மை இயக்குநர், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்; அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகத்தின்

ஆணையர் உறுப்பினர் செயலராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாரியத்தில் நியமிக்கப்படும் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் காலம், ஆணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் ஆகும்.

இவ்வாரியம், வெளி மாநிலம் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்களுக்கான நலத் திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்திட ஏதுவாக, ரூ.5 கோடி "வெளிநாடுவாழ் தமிழர் நலநிதி" என மாநில அரசின் முன்பணத்தைக் கொண்டு உருவாக்கப்படும். அதோடு மட்டுமல்லாமல், மூலதனச் செலவினமாக ரூ.1.40 கோடி, தொடர் செலவினமாக, நலத்திட்டங்கள் மற்றும் நிருவாக செலவினங்களுக்காக ஆண்டுதோறும் ரூ.3 கோடி ஒதுக்கப்படும்.

இவ்வாரியத்தின் வாயிலாகப் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக, வெளிமாநிலம் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்களின் விவரங்களைச் சேகரிப்பது அவசியமாதலால், அவர்கள் குறித்த தரவுத் தளம் (database) ஒன்று ஏற்படுத்தப்படும். இவ்வாரியத்தில் பதிவு செய்பவர்களுக்கு விபத்து, ஆயுள் காப்பீட்டு திட்டம், மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் அடையாள அட்டை வழங்கப்படும். வெளிநாட்டிற்குச் செல்லும் குறைந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த தமிழர்கள், அங்குப் பணியின்போது இறக்க நேரிடின், அவர்களது குடும்பத்தைப் பாதுகாக்கும் நோக்குடன், அவர்கள் குடும்பத்தில் கல்வி பயிலும் குழந்தைகளுக்குக் கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை வழங்கப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களது இத்தகைய முனைப்பான நடவடிக்கை, வெளிநாடுகளில் தேமதுரத் தமிழோசை பரவுவதற்கும், இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் இன்னல்களைப் போக்குவதற்கும், அவர்களுக்கான நலத் திட்டங்களைச் செம்மையுறச் செயல்படுத்துவதற்கும் உறுதுணையாக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

"சுயராஜ்யம்"

பிப்ரவரி 18: சிந்தனைச் சிற்பி திரு.ம.சிங்காரவேலர் அவர்கள் பிறந்தநாள்



"ஆங்கிலேயர்களுக்குச் சுயராஜ்யம் எவ்வளவு பிரதானமோ அதுபோல் இந்தியர்களுக்கும் அது பிரதானம் என்பதை ஆங்கிலேயர்கள் ஏன் உணரவில்லை? நாம் மிருகத்தனமல்லாத வழியில் சுயராஜ்யத்திற்காகப் பாடுபடுவதைக் கண்டு அவர்கள் ஏன் கஷ்டப்பட வேண்டும்?

இங்கிலாந்து அந்நியர்களால் படையெடுக்கப்படுமென்று ஆங்கிலேயர்கள் பயப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் இங்கிலாந்தில் குழப்பங்களும் வேலை நிறுத்தங்களும் அமைதியின்மையும் ஏற்பட்டிருக்கின்றன. இப்படியெல்லாம் இருக்க, இந்தியாவில் சுயராஜ்யம் ஏற்பட்டால் பிறநாட்டார் இந்தியாவின் மீது படையெடுப்பர். இந்தியாவில் அமைதியின்மை குழப்பம் ஏற்படுமென்று ஏன் எண்ண வேண்டும்? இங்கிலீஷ்காரன் அறியாமையால்தான் மேற்கூறிய விதமாய் நினைக்கிறான். இங்கிலீஷ்காரனுக்கு அறியாமையும் ஆசையும் குடிகொண்டிருப்பதில் இம்மாதிரியெல்லாம் எண்ணுகிறான்."

- திரு. **ம.சிங்காரவேலர்** அவர்கள் 19.05.1921 அன்று சென்னை, சூளைப்பகுதியில் பஞ்சாலைத் தொழிலாளர் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 29.12.2022 அன்று, திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம், சன்னாசிப்பட்டி கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ், ஒரு கோடியே ஒன்றாவது பயனாளியான திருமதி மீனாட்சி அவர்களுக்கு மருந்துப் பெட்டகத்தை வழங்கினார்.

தமிழரசு
Tamilarasu

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 29.12.2022 அன்று திருச்சிராப்பள்ளி, அண்ணா விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற அரசு விழாவில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் 42,081 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.2,548.04 கோடி வங்கிக் கடன் இணைப்பு மற்றும் இதரப் பயன்கள் வழங்கப்படவுள்ள நிகழ்வில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு மட்டும் 2,764 மகளிர் சுயஉதவிக் குழுக்களின் 54,654 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.78 கோடி வங்கிக்கடன் இணைப்பு மற்றும் இதரப் பயன்களை வழங்கினார்.

Published by Dr.V.P. JEYASEELAN, I.A.S., on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: Dr.V.P. JEYASEELAN, I.A.S.,